ஒரே நேரத்தில் ஆறு நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை

பீற்றர் ஜோசப்
அன்ட் அசோசியேட்ஸ்

- TRAFFIC TICKETS
- ACCIDENT CLAIMS
- IMMIGRATION

2425 Eglinton Ave. East, Suite 212
(Kennedy & Eglinton)
416 757-7707 • 416 537-7737
Fax: 416 757-7709

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: எஸ்.எஸ்.குகநாதன் கனடா பதிப்பு: பரமேஸ்வரன்

பல் வைத்தியர்கள்
DR. ILLANGO & ASSOCIATES
Dr. இளங்கோ
Dr. இரவீந்திரன்
Dr. ஜானகி
Dr. கோபால்
SCARBOROUGH (416) 292-7004
MISSISSAUGA (905) 270-7844

06 மே 2002 விலை 1.25 டொலர், EEZHANADU மலர் 09. இதழ் 22

திருமலை பிரபாகரனின் கையில் இருந்தால் அவர் இந்தியாவின் நண்பன்

அரசு – புலிகள் வேறுபாடுகளை களைந்து விட்டு இந்தியாவின் உதவியை நாடலாம் – குஜ்ரால்

# வாகரைக் கடலில் வெடித்துச் சிதறிய படகுகள்

## உண்மையில் நடந்தது என்ன? கண்காணிப்புக்குழு விசாரணை நடத்தும்!

நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நடைபெற்று வருகின்ற இலங்கைத்தீவுக்கான சமாதான முயற்சிகளைப் பாதித்து நிலைமையைச் சீர்குலைக்கக் கூடிய மிகப் பாரதூரமான சம்பவமொன்று தொழிலாளர் தினமான மே முதலாம் திகதியன்று தென் தமிழீழமான மட்டக்களப்பு பிராந்தியக் கடற்பரப்பில் நடைபெற்றுள்ளது. கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி முதல் நடைமுறையில் இருக்கின்ற யுத்தநிறுத்தத்தையே குழப்பும் சதி நோக்கத்துடன் மாத்திரமல்லாது அவ்வாறு குழப்பப் பட்டதற்கான காரணப் பழியை தமிழீழ விடுதலைப்புலிகள் மீது அபாண்டமாகச் சுமத்த முற்பட்ட சதி நோக்கமும் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது. சிங்களப் பேரினவாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பக்க பலத்துடன் சிங்களக் கடற்படையின் ஒரு சாரார் திட்டமிட்ட முறையில் யுத்த நிறுத்தத்தைக் குழப்ப முற்படும் அயோக்கியத்தனத்தைச் சரிவர உணராமல் கொழும்புத் தரப்பில் பிரச்சார ஊதுகுழல்கள் அள்ளிக் கொட்டிய பொய்ச் செய்திகளை உண்மையென்று நம்பிச் சில தமிழ் ஊடகங்களே தவறான செய்திகளை வெளியிட்டுள்ள கவலைக்குரிய சூழ்நிலையில் எந்தச் செய்தியானாலும் அதனைச் சரியாக முந்தித் தருகின்ற உங்கள் அபிமான ஈழநாடு உண்மையில் நடந்த சம்பவத்தை இங்கு வாசகர்களுக்குச் சமர்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது. கடந்த வாரம் புதன் கிழமை (5ம் பக்கம் பார்க்க)

# பொட்டம்மானைத் தரும்படி கேட்ட இந்தியா

கடந்த ஏப்ரல் 24ம் திகதி திருகோணமலைக் கடற்பரப்பில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக கொழும்புப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளின்படி விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியும் உளவுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டம்மான் குறிப்பிட்ட படகில் பயணம் செய்ததாகக் குறிப்பிட்டிருந்தது. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையில் சதியாளர் என்று குற்றம் சாட்டப்பட்டு இந்தியாவினாலும் இன்டர்போல் என்ற சர்வதேப் பொலிசாரினாலும் தேடப்பட்டு வருவதாகப் பிரகடனம் செய்யப்பட்டவர் பொட்டு அம்மான். எனவே பொட்டு அம்மான் காணப்பட்டார் என்ற தகவல் வெளியானதும் உத்தியோகப்பற்ற முறையில் புதுடில்லியில் உள்ள ஸ்ரீலங்காத் தூதுரகத்துடன் தொடர்பு கொண்ட இந்திய அதிகாரிகள் பொட்டம்மானைப் பிடித்துத் தரும்படி வேண்டுகோள் விடுத்தனர். விடுதலைப்புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்க சமாதானம் பேச முற்படுகின்ற இக் காலகட்டத்தில் புதுடில்லி முன்வைத்த இக் கோரிக்கையால் சங்கடப்பட்ட கொழும்பு அரசாங்கம் உடனே பாதுகாப்பு அமைச்சு மூலம் படகில் பொட்டம்மான் இருக்கவில்லை என்று பிரகடனம் செய்தது. இதனால் இந்தியா தன் வற்புறுத்தலைத் தொடர முடியாமல் போய்விட்டது. இந்தியா பொட்டம்மானைத் தரும்படி கேட்டதைக் கொழும்பு அரசாங்கம் தட்டிக்கழித்ததை இந்து பத்திரிகை கண்டித்துள்ளது.

# முஸ்லிம் என நினைத்து நடிகர் கமலஹாசனுக்குக் கனடிய விமான நிலையத்தில் விசாரணை

பிரபல தென்னிந்திய நடிகர் கமல ஹாசன் தமிழ்நாடு பரமகுடியைச் சேர்ந்த பிராமணர். எண் சோதிட அடிப்படையில் தன் பெயரை ஆங்கிலத்தில் கமல் (*Kamal*) ஹாசன் (*Hassan*) என்று பிரித்து எழுதுபவர். அண்மையில் பஞ்சதந்திரம் படப்பிடிப்புக்காகக் கனடா வந்திருந்த கமல் ரொறன்ரோவில் இருந்து அமெரிக்காவுக்கு விமானத்தில் செல்லத் திட்டமிட்டிருந்தார். அபூர்வசகோதரர்கள், அவ்வை சண்முகி, ஹேராம், ஆளவந்தான் போன்ற படங்களில் எல்லாம் அபாரமான "மேக்கப்"புடன் வித்தியாசமான (5ம் பக்கம்)



கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் விருது பெற்ற ஜே.இராசரட்ணத்தை விருதுடன் காணலாம்

# கொழும்புப் பாதுகாப்பு திடீரென பலப்படுத்தப்பட்டது

ஸ்ரீலங்கா பேரினவாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தூண்டுதலால் யுத்தநிறுத்தத்தைக் குழப்ப முற்படும் முப்படையில் உள்ள தீயசக்திகள் கடந்த வாரம் கிழக்குக் கடற்பரப்பில் நடைபெற்ற சம்பவங்களைப் பயன்படுத்திக் கொழும்பைத் தாக்க விடுதலைப் புலிகள் வருகின்றனர் என்ற பொய்த் தகவலை பாதுகாப்பு அமைச்சிடம் கொடுத்து விட்டனர். இதையடுத்துக் கொழும்பு நகரமெங்கும் திடீரென்று பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. ஆனால் மிக விரைவில் இது தவறான தகவல் என்று பலப்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் தளர்த்தப்பட்டன. ஆயினும் மக்கள் மத்தியில் இனம் புரியாத அச்ச உணர்வு மீண்டும் ஏற்பட்டுள்ளது.

வாகன விபத்தா?
இலவச ஆலோசனை

வாகன விபத்துக்கள் பற்றிய முழுமையான இலவச ஆலோசனைகளைத் தமிழில் அளித்திடும் ஒரே நிறுவனம்

நீண்ட காலமாக ஒரே இடத்தில் இயங்கும் நிறுவனம்

Tel: (416) 631-6464
(416) 630-7788
Fax: (416) 631-9703

- சம்பள இழப்பீடுகள்
- வணிக இழப்பீடுகள்
- எதிர்கால சம்பள இழப்பீடுகள்
- கல்விக்கான இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சட்ட உரிமைகள்
- வீட்டுப் பராமரிப்புச் செலவுகள்
- குழந்தைகள் பராமரிப்புச் செலவுகள்
- சிறப்பு மருத்துவச் செலவுகள்

தொடர்புகளுக்கு:
KILLY & BALA
1110-A Wilson Ave., Suite 211, Downsview, ON M3M 1G7

THE INSURANCE CLAIMS SPECIALISTS

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

## ஈழநாடு வாசகர்கள், வர்த்தகர்கள் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு!

எமது ஈழநாடு அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

பிறந்தநாள், மரணஅறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டும் ஞாயிறு இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சமூகநல விளம்பரங்கள் சனிக்கிழமை மாலை 6.30 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். தங்கள் ஆதரவிற்கு நன்றி

## வாசகர்களே! விளம்பரதாரர்களே!

ஈழநாட்டில் விளம்பரம், அறிவித்தல்கள் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் உங்கள் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம்.

SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

A.R.K.MARKET
31 - 35 ST.DENNIS DRIVE
(DONMILLS / EGLINTON)

DAILY NEEDS
2537A PHARMACY AVE
(FINCH / PHARMACY)

JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD # 14
(MARKHAM / EELESMERE)

KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

AGP MART
4A WADE AVE
TORONTO

UTHAYA'S SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

**மிஸிசாகா:**

THARSHNA'S SUPER MARKET
27 DUNDAS ST EAST
MISSISSAUGA

**மொன்றியல்:**

MARCHE THURGA
444 JEANTALON WEST
(514) 276 - 9262

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**பரமேஸ்:(416)654 - 9825**

## வாசகர்களின் கவனத்திற்கு!

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும்.


# உள்ளதைச் சொல்வேன்

## பஞ்ச தந்திரத்தின் கஞ்ச தந்திரி

பெரிய, பெரிய நடிகர்களை வைத்து வெற்றிப்படங்களைத் தயாரிக்கும் தேனான அப்பன் அவர்.

பாலனின் பயண முகவர் நிலையக் சிற்றூழியனாக வாழ்க்கையை ஆரம்பித்த அவர் படிப்படியாக முன்னேறிப் பெரிய புறொட்யூசர் ஆகிவிட்டார்.

ஆனால் அடிமட்டத்திலிருந்து மேல் மட்டத்துக்குச் சுய முயற்சியால் வருகின்ற பல சவடால் பேர்வழிகளுக்கு இருக்கின்ற கஞ்சத்தனம், காசு கொடுக்காமல் டபாய்க்கும் கபடத்தனம் எல்லாம் நிறையக் கொண்டவர்.

கமல், சிம்ரன் காதல் ஜோடியைக் கூட்டிக்கொண்டு இயக்குநர் ரவிக்குமாருடன் பஞ்சதந்திரம் படப்பிடிப்புக்காகச் சில நாட்களுக்கு முன் கனடா வந்தார் அப்பனானவர்.

கனடாவில் பல சோதனைகள், கதாநாயகி வந்திறங்கிய நாள் அவரது சகோதரி மோனல் இந்தியாவில் தற்கொலை செய்து கொண்டார்.

அந்தச் சிக்கலைச் சமாளித்துப் படப்பிடிப்பை நடத்த முற்பட்டால் சிம்ரன் - கமல் ஊடல் - கூடல் பிரச்சனைகள் வேறு.

கனடிய டெக்னிஷியனின் வாகனத்துக்குப் போய் சிம்ரன் புகையின்பம் அனுபவிக்க அதைப் பார்த்துக் கோபமடைந்த கமல் டெக்னிஷியனை வேலை நீக்கம் செய் என்று அடம்பிடித்தாராம்.

கோடம்பாக்கத்தில் காட்டும் பந்தாவை இங்கே காட்ட முடியாது சார். இது கனடா! நமக்கு யூனியன் உண்டு என்று ஆர்ப்பாட்டம் கிளம்பியதாம்.

வேறு வழியின்றிக் கமல் பின்வாங்க படிப்பிடிப்பு தொடர்ந்தது.

சீ.என். கோபுரப் படப்பிடிப்பு முடிந்த கையோடு சிம்ரனின் வெள்ளைக்கார சிநேகிதன் "மைக்" தன் "டைக்" கில் வந்து சிம்ரனை ஏற்றிச் செல்ல கமல் மூட் அவுட் ஆகி விட்டார்.

ஊடிச்சென்ற சிம்ரன் 48 மணிக்குப் பின் திரும்பி வந்து கூடும் வரை "யூனிட்"டுடன் "டு" விட்டு விட்டு ஒப்பனை அறையிலேயே அடைந்து கிடந்தாராம்.

சிம்ரனுக்கு முன்னாள் தோப்புக்கரணம் போடாத குறையாக கமல் வழியும் வழியலும் அள்ளி விடும் ஜொள்ளும் பார்க்கச் சகிக்கனை என்கிறது கனடா வந்த கோடம்பாக்கக் குருவி ஒன்று.

இப்படியெல்லாம் பிரச்சனைப் பட்டுப் படமெடுத்த அப்பனுக்கு துணையாகச் செயற்பட்டவர் முஜிப் உல் ரஹ்மான் நாட்டைச் சேர்ந்த கனேடியர். நட்சத்திர ஹோட்டல் பில் முதல் கமராக்கள், வாகனங்களுக்கான செலவு வரை எல்லாவற்றையும் ஒப்பந்த அடிப்படையில் இவரே கவனித்தாராம்.

இந்தியா திரும்ப முன் பணத்தைத் கொடுப்பதாக வாக்களித்த அப்பன் அதில் ஒரு பகுதியை மாத்திரம் கொடுத்து விட்டு டிமிக்கியடிக்கப் பார்த்தாராம்.

ஆனால் இந்தக் கஞ்சதந்திரியின் பஞ்ச தந்திரம் கில்லாடிக்குக் கில்லாடியான "வங்கபந்து" விடம் பலிக்கவில்லையாம்.

சம்பந்தப்பட்டவரின் கடவுச்சீட்டு முதல் கனடாவில் எடுத்த படச்சுருள் டப்பா வரை அனைத்துப் பொருட்களையும் தந்திரமாகக் கவர்ந்து விட்டாராம்.

தனது பஞ்ச தந்திரம் பலிக்காத நிலையில் அப்பன் சென்னையில் உள்ள சினேகிதனிடம் அபயக்குரல் எழுப்பினாராம்.

அவர்கள் உடனே இங்குள்ள பிரபல ஒலிபரப்பு நிலைய அதிபரைத் தொடர்பு கொண்டு காப்பாற்றி விடும்படி வேண்டுகோள் விடுத்தனராம்.

அப்பர் பெருமானான நாவுக்கரசர் எந்த வயதில் சோதியில் கலந்தாரோ அந்த வயதின் இலக்கங்களையொத்த ஆயிரங்கள் கொண்ட கனடிய டொலர்களைக் கொடுத்துதவி இந்த பஞ்சதந்திரியான அப்பனைக் காத்தருளினாராம் இந்தச் சோதியானவர்.

ஆபத்பாந்தவனாக வந்த இளையவரான இந்தப் புதிய பாரதியை "இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்" என்று பழைய சுப்பிரமணிய பாரதியார் பாடலை முணுமுணுத்தபடி தன் உடமைகளை மீளப் பெற்றுச் சிறை மீண்ட செம்மலாகச் சிறகடித்துப் பறந்தாராம் "ஹனி"யா "பாதர்"

பஞ்ச தந்திரம் எடுக்க வந்த கஞ்ச தந்திரியின் நிலைமை இவ்வாறிருக்க இந்தக் காசுப் பிரச்சனையால் கதாநாயகனான நாயகன் நடிகருக்கும் திண்டாட்டம் ஏற்பட்டதாம்.

ஹீரோ நடிகரும் சிங்காரச் சென்னைக்குப் போன் பண்ணி உதவி கேட்க அங்கிருந்து நண்பர்கள் இங்குள்ள தமிழ்த் திரையரங்க அதிபருடன் தொடர்பு கொண்டு "கமலுக்கருள்வாய்" என்று பணித்தனராம்.

மௌரிய வம்ச மாமன்னன் அண்டை நாட்டுத் தாள்களை கட்டுக் கட்டாகக் கொண்டு போய் கொடுக்க கமல் காட்டிய நன்றிக் பெருக்கில் தெப்பமாக நனைந்து போய் விட்டாராம்.

கலிங்கத்துப் போர் வென்ற சாதனையை விட "தெனாலி"யின் வேதனையைப் போக்கியதே பெரிய வெற்றி என்று குதூகலிக்கிறாராம் அசோகச் சக்கரவர்த்தி.

தமிழகத்துச் சினிமாப் புள்ளிகளில் எம்மவர் தங்கியிருந்த காலம் போய் அவர்களின் வில்லங்கங்களை சட்டென்று தீர்க்கும் நிலைமையில் நம்மவர் இருப்பது நல்ல விஷயம் தானே! - கழுகு


**இப்போது! உங்கள் அறிவித்தல்கள் ஈழநாட்டில் பிரசுரமாவதன் மூலம் ஐரோப்பா, அவுஸ்திரேலியா முதல் யாழ்ப்பாணம், கொழும்பு வரை சென்றடைகின்றது.**
**தொடர்புகளுக்கு: (416) 528 - 1867**



## ஸ்ரீ முத்து மாரி அம்பாள் தேவஸ்தானம்

3057 Universal Drive - Mississaugh - Ontario L4X 2E2
Tel (905) 602 - 2068 / 629 - 2050 Fax (905) 629 - 4428
Web site: www.ambaltemple.org

தொடர்புகளுக்கு:
**சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்**
(பிரதம குருக்கள், தலைவர், ஜோதிடர், திருமணப்பதிவாளர்)

பூசை நேரம்
காலை 8.00 மணி
பகல் 12.00 மணி
மாலை 7.00 மணி
செவ்வாய் - வெள்ளி
மாலை 7.30 மணி

கோவில் திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 முதல்- 01.00 வரை
மாலை 6.00 முதல்- 9.00 வரை
விசேட நாட்களில் நேரங்கள் மாற்றியமைக்கப்படும்

# ஈழநாடு

EEZHANADU
P.O.BOX 878
STATION 'Q'
TORONTO - ONT
CANADA - M4T 2N7

**தொலைபேசி:**
**(416) 654 - 9825**
**(416) 654 - 1867**
**தொலைநகல்:**
**(416) 652 - 7493**

**தலைமையகம்:**
EEZHANADU
19 BD DE LA CHAPELLE
FRANCE
TEL: (1) 53 26 59 21

**பிரதம நிர்வாகி:**
**எஸ்.பாலச்சந்திரன்**

**பிரதம ஆசிரியர்:**
**எஸ்.எஸ்.குகநாதன்**

**கனடா பதிப்பு:**
**பிரதம ஆசிரியர்**
T.K.பரமேஸ்வரன்

**சுவிஸ்சர்லாந்து**
EELANADU
POST FACH 60
CH 4302 AUGST
ABO CHF 130
TEL: 061 /813 1552

**ஜேர்மனி**
EELANADU
GROLITZE STR 6
41460 NEUSS
TEL: 02131 / 101748

**அவுஸ்திரேலியா**
EELANADU
170 HOTHLYN DRIVE
CRAIGLEBURN
VICTORIO 3064
TEL: (03) 3056246

**லண்டன்**
EELANADU
38 MOFFAT ROAD
LONDON - U.K
SW 177 EZ


ஈழநாட்டில்பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் முன் அனுமதியின்றி மீள் பிரசுரம் செய்ய முடியாது.

# ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் வேறுபாடுகளைக் களைந்து விட்டு இந்திய உதவியை நாடலாம் என்கிறார் முன்னாள் பிரதமர் குஜ்ரால்

ஸ்ரீலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் முதலில் தங்களுக்கிடையிலான வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துவிட்டு அதன் பின்னர் இந்தியாவின் உதவி தமக்குத் தேவை என்று கருதும் சந்தர்ப்பத்தில் புதுடில்லியை அணுகலாம் என்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் தெரிவித்திருக்கிறார்.

தெற்காசிய மனித உரிமை அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு வந்துள்ள அவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார். குஜ்ரால் மேலும் தெரிவித்ததாவது

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நீண்டகால வரலாற்றுத் தொடர்பும் நட்புறவும் உள்ளன. சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் சிறப்பான உறவுகள் நிலவியுள்ளன. கலாச்சார அடிப்படையிலும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. நாங்கள் ஒரே பூமியில் வாழ்ந்தவர்கள். பரஸ்பர அக்கறை உள்ளவர்கள். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை என்பது நேரு காலத்தில் ஆரம்பமானது. அதன் அடிப்படையில் இலங்கையுடனான உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிந்து வந்துள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் எங்கள் ஒவ்வொருவருக்கும் பிரச்சனைகள் நெருக்கடிகள் ஏற்பட்டன. எனினும் கடந்தகாலத்தைப் பற்றிச் சிந்திப்பதோ கதைப்பதோ அர்த்த



மற்றது. பல தலைமுறைகள் கடந்து விட்டன. கடந்த காலத்தைப் பற்றிக் கதைப்பது பயணித்துக் கொண்டிருக்கும் கப்பலை மூழ்கடிக்கச் செய்வதற்கு சமனானது.

குற்றச்சாட்டுக்களை தெரிவித்துக் கொண்டிருந்தால் அனைத்தையுமே இழந்து விடுவோம். இலங்கையுடன் நல்லுறவை வளர்த்த இந்திய அரசியல் கட்சிகளும் சில அமைப்புக்களும் ஆர்வமாக உள்ளன.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் முதலில் தமக்கிடையிலான கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வினைக் கண்டு விட்டு அதன் பின்னர் நீங்கள் தேவை என்று கருதும் பட்சத்தில் இந்தியாவின் உதவியை நாடலாம். உறவுகளைப் பலப்படுத்தலாம். ஆரம்பத்திலேயே முட்டுக்கட்டைகள் குறித்து பேச வேண்டாம். உள் நாட்டுப் பிரச்சனைகளுக்கு நீங்களே தீர்வு காண வேண்டும். உங்கள் சமாதான முயற்சிகள் வெற்றி காண வேண்டும் என்று மனதார விரும்பும் ஒரு நண்பனாகவே இந்தியா உள்ளது.

துயரங்களை இந்தியா அறியும். உங்களது துயரங்களை இந்தியா அறிந்துள்ளது. இந்தியாவுக்கும் பிரச்சனைகள் உள்ளன. நாம் ஒரு பல்லின சமூகத்தில் வாழ்கின்றோம்.

அதிகாரப் பகிர்வு என்பதே ஜனநாயகத்தின் முக்கிய பண்பு. உண்மையான தேசப்பற்றுடையவர்கள் நகரங்களில் மட்டும் வாழ்வதில்லை. கிராமங்களிலும் வாழ்கின்றனர். அதிகாரப் பகிர்வு என்பது ஒரு பலம். இவ்வாறான அதிகாரப் பகிர்வு ஒன்றையே நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என நாம் விரும்புகின்றோம். உங்களின் அயல்நாடு நாம் என்பதில் எமக்குப் பெருமையே. நோர்வே குறித்து எமக்கு அதிருப்தியில்லை. நோர்வே உங்களுக்கு அளித்து வரும் எமக்குக் கவலையோ அதிருப்தியோ இல்லை. நீங்கள் மிகப் பாரிய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறீர்கள். இது வெற்றியடைய வேண்டும்.

சிறுபான்மையினரின் உணர்வுகளை பெரும்பான்மையினர் புறக்கணிக்காதீர்கள். இலங்கை அனுபவத்தினூடாக குஜராத்துக்கு இதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையின் ஊடகங்கள் சமாதான முயற்சிகள் குறித்து மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். அவநம்பிக்கையூட்டும் கருத்துக்களை தவிருங்கள். இதுவே அனைவருக்கும் நன்மையளிக்கும். இலங்கை பாரிய துன்பத்தை அனுபவித்து விட்டது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## உடன்படிக்கையை உறுதியாக கடைப்பிடிக்குமாறு அமெரிக்கா கோரிக்கை

யுத்தநிறுத்த உடன்படிக்கையை உறுதியாகக் கடைப்பிடிக்குமாறு இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் அமெரிக்கா வலியுறுத்திக் கேட்டுள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் கடந்த வெள்ளியன்று உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்ட கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் ஆஸ்லிவில்ஸ் யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் வேளையில் மோதல் இடம் பெறுவது குறித்து அமெரிக்கா கவலை தெரிவிப்பதாகக் குறிப்பிட்டிக்கிறார்.

அதே சமயம் ஆயுதங்களை இறக்குமதி செய்ய வேண்டாமெனவும் அவர் விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை விடுத்தார். ஆனால் அரசிடம் இதைதெரிவிக்கவில்லை

# இடம்பெயர்ந்த மக்களை பலவந்தமாக குடியேற்ற மாட்டோம் என்கிறார் ஜயலத்

சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் எந்தச் சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்தினால் பலவந்தமான முறையில் மீளக் குடியமர்த்தப்பட மாட்டார்கள். அவரவர் பகுதிகளில் பாதுகாப்பான வாழ்க்கை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மீளக் குடியமர மக்கள் வேண்டப்படுவார்கள்.

போஷாக்கின்மை, சுகாதார, கல்வி வசதிகளின்மை, உறைவிட வசதியின்மை, நீர் விநியோகம் மற்றும் கழிவகற்றும் வசதியின்மை ஆகியவற்றால் வடக்கு கிழக்கிக் எந்தப் பகுதிகளையும் விட வன்னியில் வாழும் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நிலைமை படுமோசமாகவுள்ளது.

அப்பகுதி மக்களின் நல்வாழ்வுக்காக அரசாங்கம் விசேட கவனம் செலுத்தும் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் வடகிழக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களாகவுள்ள பிரதேசங்களிலுள்ள வணக்கஸ்தலங்கள், பாடசாலைகளில் இருந்து படையினரை அகற்றி அந்தப் பகுதிகளில் மக்களை மீளக் குடியேற்றம் செய்வது, மிதிவெடிகளால் நிரம்பிக் கிடக்கும் தென்மராட்சி போன்ற பகுதிகளில் மீளக் குடியேற்றும் முயற்சிக்கும் மக்களைப் பாதுகாப்பாகக் குடியேறச் செய்வது ஆகியவை இப்போது அரசாங்கம் எதிர்கொள்ளும் பாரிய சவால்களாக இருக்கின்றன.

தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் இலங்கைத்தமிழ் அகதிகள் குறித்தும் பிரஸ்தாபித்த அவர் 112 அகதி முகாம்களில் சுமார் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அடிப்படை வசதிகளின்றி மூன்றாம் தர வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். விசேட திட்டமொன்றில் அவர்களை மீளத் தாய் நாட்டுக்கு அழைத்து மீளக்குடியமர்த்துவது குறித்து அரசாங்கம் சிந்தித்து வருகிறது. நாட்டில் புரையோடிப் போயிருக்கும் யுத்தத்திற்கு நிலையான அமைதித் தீர்வைக் காண முதலில் இரண்டு இனங்களுக்குமிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியமானது. இவ்வாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

## புலிகளின் பிரதேசங்களில் வேவு விமானங்கள் நோட்டம்?

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குச் சொந்தமான சில வேவு விமானங்கள் சனிக்கிழமை 27ஆம் திகதி வனனியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மேலாக வட்டமடித்ததாக விடுதலைப்புலிகளின் தகவல்களை ஆதாரம்காட்டி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. ஆள் இல்லாமல் இயங்கும் இந்த வேவு விமானங்கள் கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவுப் பகுதிகளுக்கு மேலாகவே பறந்து வட்டமடித்ததாகக் கூறப்பட்டது. இந்நடவடிக்கை புரிந்துணர்வு உடன்பாடிக்கையை மீறும் செயலாக அமைந்துள்ளது என்றும் அந்தச் செய்தி ஏஜென்ஸி விமர்சித்தது.


TORONTO - COLOMBO
RETURN TRIP
ONLY
1285.00
(Tax included)

SkyRoute
TRAVEL SERVICES INC.
1200 MARKHAM ROAD, SUITE 106
SCARBOROUGH, ONTARIO, M1H 3C3
TEL: 416-439-4000 FAX: 416-439-6463
TOLL FREE: 1-877-468-6759 - 1-877-GO TO SKY
E-mail: contact@skyroutetravel.net

CHENNAI - 1260.00
LONDON - 460.00
AMSTERDAM - 520.00
ZURICH - 550.00
OSLO - 675.00
PARIS - 520.00
CHICAGO - 183.00
LOS ANGELES - 355.00
PHOENIX - 355.00

(Taxes are extra and the fares are subject to change without notice)
416-439-4000
IATA
Reg: 04488805 / 04652780
TICO

# எதிர்வரும் மேதினத்தை தமிழீழத்தைப் பிரித்த ஒரு அரசியல் சூழ்நிலையில் கொண்டாடுவோம்

## மேதினக் கூட்டத்தில் ஜே.வி.பி. கூக்குரல்

ரணிலின் அரசாங்கம் விடுதலைப்புலிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே செயற்படுகின்றது. ஆகையால் நாட்டின் ஒருமைப்பாட்டுடன் நாம் கொண்டாடும் இறுதி மேதினம் இதுவாக இருக்கலாம். எதிர்வரும் மேதினத்தை தமிழீழத் தாயகத்தினை வழங்கி நாட்டைப் பிரித்த ஒரு அரசியல் சூழ்நிலையிலேயே நாம் கொண்டாட வேண்டிய நிலைமை ஏற்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பிரசார செயலாளர் விமல்வீரவன்ச கூறினார். விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கும் நாட்டைப் பிரிக்கும் இந்த அரசாங்கத்தின் சதிச் செயலை நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். அதற்கெதிரான எமது மக்கள் சக்தி திரண்டு போராடும் என்றும் அவர் அறைகூவல் விடுத்தார்.

பி.ஆர்.சி. மைதானத்தில் இடம்பெற்ற ஜே.வி.பி.யின் மேதினக் கூட்டத்தில் அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார். கொட்டும் மழையின் மத்தியில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது

ரணிலின் அரசாங்கம் சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் கூறிக் கொண்டு ஈழத்தை புலிகளுக்கு வழங்க சதித்திட்டம் தீட்டுகின்றது. இந்த முயற்சியை தோற்கடிக்க எமக்குப் பின்னால் மக்கள் வெள்ளம் திரண்டுள்ளது என்பதை எண்ணி பெருமைப்படுகின்றோம்.

ஜே.வி.பி.யின் மக்கள் சக்தி இந்த நாட்டை நேசிக்கும் சக்தியாகும். ரணில் விக்கிரமசிங்க போன்ற பத்து பேர் பிரதமரானாலும் மக்கள் சக்தியை தோற்கடிக்க முடியாது. இது தான் ஜே.வி.பி.யின் பலம்.

புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்க அனுமதிக்க மாட்டோம். புலிகள் மீதான தடையை நீக்க விடமாட்டோம். அப்படி செய்யும் போது அம்முயற்சியைத் தோற்கடிக்க லட்சக்கணக்கான மக்கள் எம்மிடம் உள்ளனர்.

நாட்டை நேசிக்கும் மக்கள் என்றவகையில் இந்த நாட்டை பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உண்டு. மக்களின் கலாசார பன்முகத் தன்மையை, சமத்துவத்தை நாம் நேசிக்கின்றோம். இவ்வாறான



ஒரு நாடே எமக்குத் தேவை. தமிழ் முஸ்லிம் தாயகத்தை கொண்ட நாட்டை அடுத்த தலைமுறைக்கு வழங்க எமக்கு உரிமையில்லை. எனவே வணக்கத்துக்குரிய இந்த தாய்நாட்டை பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

ரணிலின் முயற்சியைத் தோற்கடிக்க ஜே.வி.பி. பல முயற்சிகளை மேற்கொண்டது. இதற்காக நன்னடத்தை அரசாங்கத்தை நாம் அமைத்தோம். புலி - யானைக் கூட்டை தவிர்க்க நாம் தியாகங்களைச் செய்தோம். நாட்டிற்காக ஜே.வி.பி. இந்த முயற்சியை மேற்கொண்டது. அன்று யானை - புலி கூட்டு என்றால் என்ன என்று எம்மிடம் கேட்டனர். ஆனால் இன்று அந்த விடயங்கள் சாத்தியமாகிக் கொண்டிருக்கின்றன.

மட்டக்களப்பு கடற்கரையில் புலிகளின் இரண்டு ஆயுதப்படகுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப்பொழுது நான் பேசிக் கொண்டிருக்கும் போது கடற்படையினர் புலிகளின் படகுகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். (இப்படகுகள் சிங்கள, முஸ்லிம் மீனவர்களின் படகு என்பது பின்னர் கண்டறியப்பட்டது)

ரணில் - பிரபா ஒப்பந்தத்தின் சில சரத்துக்களை புலிகள் மீறி விட்டனர். ஆயுதங்களை புலிகள் கொண்டு வருகின்றனர். சயனைட் வாக்கிடோக்கி போன்றவற்றை புலிகள் பயன்படுத்துகின்றனர். ரணில் தமிழீழத்தை வழங்கத் தீர்மானித்து விட்டார். தலிபான் போன்ற ஆட்சியை அங்கு புலிகள் அமுல்படுத்த முயல்கின்றனர். புலிகள் ஒப்பந்தத்தை மீறுவதைப் பற்றி ரணிலுக்கு அக்கறையில்லை. அமைச்சர் திலக் மாரப்பன மௌனமாக இருக்கின்றார்.

அமெரிக்க பென்டகன் கைப்பொம்மையாக மிலிந்த மொறகொட இருக்கிறார். அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இலங்கைக்குள் ஊடுருவ பெரிதும் உதவுகின்றார்.

பீரிஸ், ஜயலத் ஜயவர்த்தன போன்ற பொம்மைகள் இன்று ஐ.தே.க.வின் பிரபல அணியாக உள்ளனர். மிகப் பழமை வாய்ந்த ஐ.தே.கட்சி தமிழீழத்தை தாரைவார்க்கும் துரோகத்தைச் செய்யலாமா என்றும் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

## ஜனாதிபதி – பிரதமர் கருத்து மோதல் தீவிரம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பாராளுமன்றத்தில் அதிகாரத்தைத் தனது பொறுப்பில் வைத்திருக்கும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிற்கும் இடையில் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்



பான கருத்து மோதல் தொடர்கிறது. விடுதலைப்புலிகள் தொடர்பான விடயத்தில் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க மென்மையான போக்கைக் கடைப்பிடிப்பதாக ஜனாதிபதி குற்றம் சாட்டினார்.

வடக்கு கிழக்கில இடைக்கால அரசாங்கத்தை ஏற்படுத்துவது தொடர்பாகவே பேச்சுவார்த்தை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதியிடமிருந்து இது தொடர்பாக கடுமையான எதிர்ப்பு வெளிப்பட்டிருக்கிறது.

இடைக்கால நிர்வாகத்தில் புலிகளின் ஆதிக்கம் இருந்தால் தமிழ் மக்கள் தவிர ஏனைய இனத்தவரின் உரிமை என்னவானது என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பியிக்கின்றார்.

இடைக்கால நிர்வாகம் என்பது நாட்டைப் பிரிக்கும் முதற்கட்டமென கடும் சிங்களப் போக்காளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை உலகநாடுகளின் ஆதரவின்றியே புலிகளுடன் முன்னைய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தின. அந்தத் தவறை நான் செய்ய விரும்பவில்லை. உலகநாடுகளின் ஆதரவின்றி பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

போர்நிறுத்தம் ஏற்படவும், பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும் அது தோல்வியுற்றால் புலிகளுடன் மீண்டும் போரிடவும் சர்வதேசத்தின் ஆதரவு தேவையென்கிறார் ரணில்.



பேச்சவார்த்தை தேவையில்லை எனில் உலகநாடுகளின் ஆதரவை நாட வேண்டியதில்லையெனில் மாற்றுவழி என்ன என்றும் பிரதமர் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

அடுத்த யூன் மாதத்தில் தாய்லாந்தில் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் புலிகள் அமைப்பின் மீதான தடையை அரசாங்கம் நீக்க வேண்டுமென்பது உட்பட போர் நிறுத்த உடன்படிக்கையில்

## பயங்கரவாதம் என்ற சொல்லை அகராதியில் இருந்து அகற்ற வேண்டும்

சமாதான சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் பயங்கரவாதம் என்ற வார்த்தை பாவிக்கக்கூடாது. பயங்கரவாதம் என்ற சொல்லை எமத அகராதியிலிருந்து முழுமையாக அகற்றி விட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மஹிந்த விஜேசேகர திருமலை நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

பல ஆண்டுகளின் பின்னர் நாட்டில் சமாதான சூழல் உருவாகி வருகிறது. இதனால் திருகோணமலை வரக்கூடிய வாய்ப்பு ஏற பட்டுள்ளது. இச்சமாதானச் சூழநிலையை அனைவரும் பேணிப் பாதுகாக்க வேண்டம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக் பேசும்போது நாங்கள் சமாதானம் என்பது திருகோணமலை மாவட்டத்திலிருந்து தான் தோன்ற வேண்டும். அதற்கான பணி திருமலையிலிருந்து மேற்கொள்ளப் பட வேண்டும். இன்று அமைச்சர்கள் பாதுகாப்பாக நிலாவெளிக்கு வந்து தங்கிச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

சமாதானத்தை கண்டுள்ள திருகோணமலை மாவட்டத்தில் மீனவர்களின் பிரச்சனைக்கு அரசு தீர்வு காண வேண்டும் என்றும் அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அரசாங்கம் நிறை வேற்ற வேண்டும் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன் புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக சட்டரீதியாக சாதகமான யோசனையை சட்டமா அதிபர் கமலசபேசன் அரசிற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

ஆனால் இடைக்கால நிர்வாகமொன்றை வடகிழக்கில் புலிகளிடம் ஒப்படைப்பதானால் ஜனாதிபதியின் அங்கீகாரமும் தேவையாகும்.




PROFESSIONAL TRUCK TRAINING CENTRE

CLASSES - A,B,C,D,Z மற்றும் Air Brake & Defensive Course, Fork Lift (போர்க்லிப்ற்) பயிற்சிகளும் வழங்கப்படும்



- EI (வேலையற்றோர் காப்புறுதியில்) இருப்பவர்களுக்கு இலவசப் பயிற்சிகள்
- நியாயமான கட்டணத்தில் பயிற்சி வகுப்புகள்
- அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு
- விசேட தேர்ச்சிபெற்ற பயிற்றுனர்கள்
- வாரத்தில் 7 நாட்களும் வகுப்புகள் உண்டு

START A CAREER YOU CAN FEEL SECURE IN!

விபரங்களுக்கு அழையுங்கள்
TEL: (416) 299-9638
CELL: (416) 771-8041

FAX: (416) 609-9814
www.jaystrans.com

# வாகரைக் கடலில் வெடித்துச் சிதறிய படகுகள்

## உண்மையில் நடந்தது என்ன? கண்காணிப்புக்குழு விசாரணை நடத்தும்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தவாரம் புதன்கிழமை மே தினமாகும். இலங்கைத்தீவில் தொழிலாளர் தினமான மேதினம் ஒரு பொது விடுமுறையாகும்.

தென்தமிழ்ஈழத்தில் மட்டக்களப்பு பிராந்தியத்தின் வடபுறமாகக் கிழக்குக் கரையோரத்தில் உள்ள பிரதேசம் வாகரைப் பிரதேசமாகும்.

மே தினத்தன்று வாகரைக் கடற்பகுதியில் சில மீன்பிடிப்படகுகளும் இழுவைப்படகுகளும் கடல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

இவற்றில் பெரும்பாலும் புத்தளம் மாவட்டத்தில் இருந்து வந்த சிங்கள, முஸ்லிம் மீனவர்களே இருந்தனர்.

பேச்திமேர் எனப்படும் கடல் அட்டைகளைப் பிடிக்கும் காரியத்திலேயே இவர்கள் ஈடுபட்டிருந்தனர். இக்கடல் அட்டைகள் பெருந்தொகையான பணத்துக்கு ஏற்றுமதி செய்யப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது.

நண்பகல் வேளையில் கடற்தொழில் செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்ட பிரதேசத்திற்குள் இப்படகுகளில் உள்ள மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அச்சமயத்தில் சிங்களப் பேரினவாத அரச கடற்படைக்குச் சொந்தமான மூன்று இஸ்ரேலியத் தயாரிப்பு டோரா சுடுகலன் படகுகள் வாகரைக்கடல் பரப்பில் பிரவேசித்தன.

நேராக இந்த அப்பாவிகளின் படகுகளை அண்டிய இந்த டோராக்கள் அவற்றை மிகவும் நெருங்கிய பின்னர் எவ்வித முகாந்திரமுமில்லாமல் ஒரு படகின் மேல் ஷெல்லடி மேற்கொண்டன.

குறிப்பிட்ட அந்த இழுவைப்படகில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் "துவமேனவா" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. சிங்களத்தில் மகள் மேனவா என்பதே அர்த்தமாகும்.

ஆனால் ஒரு ரோடா படகு குறிப்பிட்டஒரு இழுவைப்படகை துரத்திச் சென்று அதன் மேலும் ஷெல் பிரயோகம் செய்தன. இதில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான அந்தப் படகு சேதமடைந்து மூழ்கியது.

காயங்களுடன் நீந்தித் தப்ப முயன்ற அந்த முஸ்லிம் சம்மாட்டியாரும் கடலில் மூழ்கி மரணமானார்.

இவ்வாறு பட்டப்பகலில் படுபாதகமான அக்பிரமம் மூலம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறிய கடற்படையினர் தம் அட்டூழியங்களை மூடி மறைத்து தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் மீது அபாண்டமாகப் பழி சுமத்த முற்பட்டது.

பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன மூலம் விடுக்கப்பட்ட அறிக்கையில் சந்தேகத்திற்கிடமான முறையில் கடலில் சஞ்சரித்துக் கொண்டிருந்த விடுதலைப்புலிப் படகுகளை நோட்டம் பார்க்க கடற்படையினர் அண்மித்த போது அவற்றில் ஒன்று எவ்வித காரணமுமின்றி சுயமாக வெடித்துச் சிதறியது என்றும் சிறிது நேரத்தின் பின் இன்னொரு படபும் அதே போல் வெடித்துச் சிதறியது என்றும் தெரிவித்தார்.

கடற்படையினர் எவ்வித தாக்குதலும் செய்யாதிருந்த சூழ்நிலையில் மர்மமான முறையில் அப்புலிப் படகுகள் வெடித்துச் சிதறியமைக்குக் காரணம் புலிகள் அவற்றில் ஆயுதங்கள், வெடி மருந்துகள் வைத்திருநதமை தான் என்றும் அநியாயமாகக் கூறப்பட்டது.

கடற்படையினர் ஆயுதங்களைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்ற அச்சத்தினால் தான் புலிகள் தாமாகவே தம் படகுகளை வெடிக்க வைத்துத் தகர்த்தனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

நடைபெற்ற இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற விடுதலைப்புலிகள் உடனடியாகக் கண்காணிப்புக்குழுவினருடன் தொடர்பு கொண்டு உடனடியாக வாகரைக் கடற்பரபபுக்குச் சென்று உண்மை நிலைமையைக் கண்டறியும்படி கேட்டுக் கொண்டனர்.



ஆனால் உடனடியாக வாகரைக்குக் கண்காணிப்புக்குழுவினர் செல்ல கடற்படையினர் அனுமதிக்கவில்லை. ஆனால் மறு தினமான வியாழனன்று ஜீலியா என்ற கண்காணிப்புக்குழுவினரை வாகரைக் கடல் பகுதிக்குக் கூட்டிச் சென்றனர்.

கடற்படைக் கப்பலில் இருந்தபடி24 மணிக்கு முன் நடந்த சம்பவம் பற்றி அவர் "ஆராய" முற்பட்டார். அப்போது 120 எம்.எம். ஷெல்கள் 81 எம்.எம். ஷெல்கள் ஆகியவற்றைக் கொண்ட சிறிய பெட்டிகளை கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுக்குக் காட்டி இவை வெடித்துச் சிதறிய புலிக்கப்பல்களில் இருந்து மீட்கப்பட்டவை என்று அண்டப்புளுகு ஒன்றை அவிழ்த்து விட்டனர்.

அத்துடன் நிற்காது தமது பிரச்சார ஊதுகுழல்கள் மூலம் புலிக்கப்பலில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதைக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் நேரடியாகக் கண்டார் என்று திரிபுபடுத்தப்பட்ட பிரச்சாரத்தை மேற்கொண்டது கடற்படைத்தரப்பு.

ஆயினும் கிளிநொச்சியில் உள்ள புலிகள் அரசியல் பணியகக் கண்காணிப்புக்குழுவுடன் தொடர்பு கொண்டு தமது படகுகள் எதுவும் வாகரைக் கடல் பரப்பில் சேதமடையவில்லை என்றும் நடைபெற்ற சம்பவம் பற்றி தீவிர விசாரணை செய்யுமாறும் கேட்டுக் கொண்டது.

அத்துடன் சம்பந்தப்பட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினரும் தனது அறிக்கையில் புலிகளின் ஆயுதப் பெட்டிகள் என்று தமது கப்பலில் வைத்துக் கடற்படையினர் குறிப்பாகச் சுட்டிக்காட்டிய பெட்டிகளைத் தான் கண்டார் என்றும் கடலில் மிதந்து கொண்டிருந்ததையோ கடற்படையினர் அவற்றை மீட்பதையோ தான் நேரடியாகக் காணவில்லை என்று கூறி சிங்களப்படையின் பொய்ப் பிரச்சாரத்துக்குஆப்பு வைத்தார்.

அத்துடன் ஷெல்களைக் கொண்ட அதிபாரமான அவ்வாயுதப் பெட்டிகள் கடற்படையினர் கூறுவது போல கடல் அலைகளில் மிதந்து கொண்டிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக்குறைவு என்றும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை சிங்களக் கடற்படையினர் தாக்கியதில் கடலில் பாய்ந்து நீந்தித்தப்பிய நூர்முகம்மது என்ற கற்பிட்டி வாசி காயத்துடன் 24 மணு சேரம் கடலில் தத்தளித்த பின் தெய்வாதீனமாகக் கரை சேர்ந்தார்.

வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற அவர் தம்மைத் தாக்கியவர்கள் கடற்படையினரே என்றும் தனது படகு முதலாளியும் சக தொழிலாளியும் கடலில் மூழ்கி மரணமடைந்தனர் என்றும் தெரிவித்தார்.

இது தவிர கடற்படை தாக்குதலின் போது தப்பிக் கடலில் தத்தளித்த 36 மீனவர்கள் ஒருவாறு கரையை அடைந்தனர்.

இவர்களைப் பொறுப்பேற்ற விடுதலைப்புலிகள் பாதுகாப்பாகப் பராமரித்துக் கண்காணிப்புக்குழுவினரிடம் கையளித்தனர்.

இவர்களும் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 18 பேர் முஸ்லிம்கள், 16 பேர் சிங்களவர்கள், 2 பேர் மாத்திரமே தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மீனவர்களும் தம்மைத் தாக்கியது கடற்படையினர் தாம் என்றும் தாம் கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது எந்தவொரு புலிப்படகும் அருகாமையில் இருக்கவில்லை என்றும் எவ்வித காரணமுமின்றிக் கடற்படையினர் இந்த மிலேசத்தனமான தாக்குதலைத் தொடுத்தனர் என்றும் கூறினர்.

இவ்வாறு உண்மைகள் வெளிவருவதைக் கண்ட கடற்படையினர் கதையை மாற்றி மீன்பிடிப்படகுகள் நடுவில் மறைந்து நின்று புலிகள் ஆயுதக்கடத்தல் செய்ததாகவும் தாம் நெருங்கிய போது தம்மீது தாக்குதல் கொடுக்கப்ப[illegible] காயம் க[illegible]ற்படையினர் தற்போது கூறத்தலைப்பட்டுள்ளனர். இதற்குப் பதில் தாக்குதல் தொடுத்த போது மீன்பிடிப்படகுகள் இடையில் சிக்கிச் சேதமடைந்தன என்று கூறியது கடற்படை.

முன்னர் கடற்படைக்கப்பல்கள் நெருங்கிய போது புலிகள் தாமாகவே தம் கப்பல்களை வெடிக்க வைத்துத் தகர்த்தனர் என்று கூறிய கடற்படை தற்போது கதையை மாற்றிக் கூற முற்பட்டுள்ளது.

கடற்படையினரின் இந்த மோசமான செயலுக்குப் பின்னணியில் சந்திரிகாவே இருக்கிறார் என்று நம்பப்படுகின்றது.

வாயால் சமாதானம் என்று உச்சரித்துக் கொண்டே செயலால் சமாதான சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற சந்திரிகாவும் அவரது அடிமை கதிர்காமரும் தம் இந்தியப் பயணத்தின் பின் கூடுதல் துணிவடைந்துள்ளனர்.

உள்நாட்டில் ஜே.வி.பி. சிஹலஉறுமய போன்ற வெளிப்படையான வகுப்புவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து சமாதான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறது பொதுஜன முன்னணி.

அத்துடன் பௌத்த மகாசங்கத்துடன் தொடர்பு கொண்ட சந்திரிகா தான் நாட்டைப் பிரிக்க அனுமதியளிக்க மாட்டேன் என்று சூளுரைத்துள்ளார். மேலும் புலிகள் மீதான தடைநீக்கம், வடகிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாக சபை நிறுவப்படல் ஆகியவற்றை அனுமதிக்க மாட்டேன் என்றும் கூறியுள்ளார்.

இத்தகைய பின்னணியின் ஓர் அங்கமாகவே முப்படையில் தனக்குச் சார்பாக உள்ள தீயசக்திகளை முடுக்கி விட்டு விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டி யுத்தநிறுத்தத்தைக் குழப்பும் நடவடிக்கையில் இறங்கச் செய்யும் முயற்சியிலேயே சந்திரிகா இறங்கியுள்ளார்.

வாகரைச் சம்பவம் நடந்ததுடன் அதைப் பெரிதுபடுத்தி சிங்கள மக்களுக்குத் தான் புலிகளுக்கு எதிரான கடும்போக்கினைக் கடைப்பிடிக்கப் போகிறேன் என்பதைக் காட்டவும் சில நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

இது இவ்விதம் இருக்க வாகரைச் சம்பவத்தின் பின்னணியை விரிவாக எடுத்துரைத்து கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்த விடுதலைப்புலிகள் இது தொடர்பாக பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

கண்காணிப்புக்குழுவும் இதற்கு இணங்கியுள்ளது. மட்டக்களப்பு சென்று வாகரையைப் பார்வையிட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் இது பற்றிய பூரண விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

## முஸ்லிம் என நினைத்து நடிகர்கமலஹாசனுக்குக் கனடிய விமான நிலையத்தில் விசாரணை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாசமான "ரோல்"களில் நடித்து ரசிகர்களை அசர வைத்த கமல் இவற்றுக்கான மேக்கப் நுணுக்கங்களுக்கு ஹொலிவுட் நிபுணர்களிலேயே தங்கியிருந்தார் என்பது அனைவரும் அறிந்த ரகசியம்.

அந்தவகையில் கனடாவில் இருந்து கலிபோர்ணியா மாநிலத்தின் லொஸ்ஏஞ்சலஸ் நகரம் சென்று சில ஒப்பனை வித்தைகளைக் பெற கமல் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் செப் 11 அசம்பாவிதங்களுக்குப் பிறகு இஸ்லாமிய நாமம் கொண்ட அனைவரும் வடஅமெரிக்காவின் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படும் மோசமான நிலைமை ஏற்பட்டிருந்ததைக் கமல் நன்றாக உணரும் விதத்தில் சம்பவங்கள் நடந்தன.

பியர்சன் விமானநிலையத்தில் உடலமைப்பு, நாடு, கடவுச்சீட்டிலிருந்த பெயர் ஆகியவற்றைப் பார்த்துச் சந்தேகம் கொண்ட விமான நிலைய அதிகாரிகள் இவரை முஸ்லிம் என்றே நினைத்து விட்டனர்.

"ஹாசன்" என்ற பெயரை வைத்துச் சல்லடை போட்டுக் கேள்விகள் தொடுத்தனர். இந்தியாவில் நடிக்கும் படத்துக்காக அமெரிக்காவில் மேக்அப் போடப் போகிறாயா? என்று ஏளனமாகக் கேள்வி கேட்டு கமல் அமெரிக்கா செல்லும் காரணத்தை நம்ப மறுத்தனர்.

கடைசியில் கமல் அமெரிக்காவுக்குப் போக முடியாதுஎன்று கூறி அதற்கான முத்திரையைக் குத்தி திருப்பி அனுப்பி விட்டனர்.

கோபத்துடனும் சோகத்துடனும் தன் பயணத்திட்டத்தை மாற்றியமைத்த கமல் தன் நாடு திரும்பியதும் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்து கனடிய அதிகாரிகளை "வாங்கோ வாங்கென்று" வாங்கி விட்டார்.

இந்தியாவில் உள்ள கனடிய தூதரகத்துடன் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஈழநாடு தற்காலிக தொடர்புகளுக்கு (416) 528 - 1867

# தமிழ் பேசும் மக்கள் ஒருமித்து சமாதானத்திற்கான குரலாக ஒலிக்கின்றார்கள் மே தினக்கூட்டத்தில் எழிலன் பேச்சு

நாங்கள் இப்போதுள்ள சமாதான சூழலை சரியான முறையிலே ஏற்றுக் கொள்கின்றோம். இந்த சமாதான சூழலுக்கான நாங்கள் அர்ப்பணிப்புக்களைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம். பல இழப்புக்களைச் சந்தித்தவர்கள் நாங்கள். நல்லதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதைத் தான் நாங்கள் இப்போதும் விரும்புகின்றோம். அது கிடைப்பதற்காக நல்லதொரு சூழலை உருவாக்க வேண்டியது இங்கு வாழ்கின்ற ஒவ்வொருவருடையதும் கடமையாக இருக்கின்றது. இதனை சிங்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்று வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற மேதின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகளின் வவுனியா அரசியல் துறையைச் சேர்ந்த எழிலன் அறைகூவல் விடுத்தார்.

வவுனியாவில் உள்ள வெகுஜன அமைப்புக்கள், தொழிலாளர் சங்கங்கள், அரசியல் கட்சிகள், விடுதலைப்புலிகள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த மேதின வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். சமாதானத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்தி வவுனியா நகரின் ஐந்து முனைகளில் இருந்து பேரணிகள் நடத்தப்பட்டன. பேரணிகள் வவுனியா நகரசபை மைதானத்தை வந்தடைந்ததும் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது.

ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் நாதன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவின மக்களும் பெரும் எண்ணிக்கையில் இந்தப் பேரணிகளிலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டார்கள்.

சமாதான முயற்சிகள் குறித்து எழிலன் தனது உரையில் தெரிவிக்கையில் தற்போது யுத்தநிறுத்தம் செய்யப்பட்டு உடன்படிக்கை எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளுக்கு முன் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்றார்.

இந்தப் பேச்சுவார்த்தையைப் பொறுத்த மட்டிலே நல்ல மாற்றம் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். என்பதை நாங்கள் விரும்புகின்றோம். அந்த விருப்பத்தோடு தான் நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம். நாங்கள் அரசியல் வேலைகளைச் செய்வதற்காக வந்திருக்கின்றோம். நாங்கள் எங்களுடைய வேலைத்திட்டங்களின் மூலம் நல்ல கருத்துக்களைத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றோம். நாங்கள் இப்போதுள்ள சமாதான சூழலை சரியான முறையிலே ஏற்றுக் கொள்கின்றோம். இந்த சமாதான சூழலுக்காக நாங்கள் அர்ப்பணிப்புக்களைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம். பல இழப்புக்களைச் சந்தித்தவர்கள் நாங்கள். நல்லதொரு தீர்வு கிடைக்க வேண்டுமென நாங்கள் இப்போதும் விரும்புகின்றோம். அது கிடைப்பதற்காக நல்லதொரு சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு இங்கு வாழ்கின்ற ஒவ்வொருவருடையதும் கடமையாக இருக்கின்றது. இதனை சிங்கள தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவருமஸி நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்றும் எழிலன் தெரிவித்தார்.

**ஆயுதங்களைத் தூக்கி வைத்துப் போராடுவதற்கு நாங்கள் உண்மையிலேயே விரும்பவில்லை. நல்லதொரு மாற்றமானது சுமூகமான ஒரு தீர்வின் மூலம் எமது மக்களின் எதிர்பார்ப்புக்கமைய தரப்பட வேண்டும் என்பதைத் தான் வலியுறுத்த விரும்புகின்றோம்.**

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழ் பேசும் மக்கள் எல்லோருமே ஒன்றாகச் சேர்ந்து நிற்கின்ற நிலைமையொன்று உருவாகியிருக்கின்றது. எல்லோரும் ஒருமித்த குரலிலே விடுதலைப்புலிகள் தான் எங்களுடைய ஏகப்பிரதிநிதிகள் என்றும் விடுதலைப்புலிகளுடன் பேசுங்கள், இந்தப் பிரச்சனைக்கு நல்லதொரு தீர்வைத் தாருங்கள் என்று கோருகின்ற நிலையை நாங்கள் பார்க்கின்றோம்.

முஸ்லிம் மக்களாக இருந்தாலும் சரி, மலையக மக்களாக இருந்தாலும் சரி. இங்கு வாழுகின்ற தமிழ்மக்களாக இருந்தாலும் சரி அனைவரும் இன்று ஒன்றிணைந்து ஒருமித்து சமாதானத்திற்கான ஒரு குரலாக ஒலிக்கின்றார்கள். அரசு நல்லதொரு தீர்வைத் தரவேண்டும் என்று அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கேட்டிருக்கின்ற நிலைமையை நாங்கள் பார்க்கின்றோம்.

ஆனால் இந்த வேளையிலே சில சிங்களக் கட்சிகள், சிங்கள அமைப்புக்கள் இனவாதத்தைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஒட்டுமொத்தமாக ஒரே குரலில் சமாதானத்தைப் பேசுகின்றவர்களாக மாறியிருக்கின்றோம். ஆனால் சிங்களப் பகுதியிலே பலர் இந்த சமாதானத்தை குழப்புவதற்கான செய்திகளைக் கூறுகின்றார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டும். நாங்கள் அதைத்தான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றோம்.

சமாதான ரீதியிலே அனைத்து மக்களும் சுமூகமான ஒரு சுதந்திரமான வாழ்வை வாழ்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒவ்வொரு தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களும் தயாராக இருக்க வேண்டும் என்பதைத் தான் நாங்கள் விரும்புகின்றோம். எனவே இந்நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கையிலே ஈடுபடுகின்றவர்களைத் திருத்தி இப்போது ஏற்பட்டுள்ள சமாதானத்திற்கான நல்ல வாய்ப்பு பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். சமாதானத்தை மேலும் முன்னெடுப்பதற்கான ஒரு சரியான சூழலை அதன்மூலம் நிறைவாக உருவாக்க வேண்டும். இந்தச் சமாதான சூழலை அவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைக் கூற விரும்புகின்றோம்.

இந்த சமாதான சூழலைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சனைக்கு சரியான ஒரு தீர்வு தரவில்லையென்றால் அடுத்த கட்டமாக ஒரு போர் வருமாக இருந்தால் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து முஸ்லிம் சகோதரர்களும் இணைந்து போராடத் தயாராக இருப்பதாக இங்கு பேசிய மஸ்லிம் சகோதரராகிய ஆரிப் தெரிவித்தார்.

நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு செய்தியைக் கூறவிரும்புகின்றோம். அந்தச் சகோதரர் நினைக்கின்ற மாதிரியான ஒரு நடவடிக்கை இனி இந்த மண்ணிலே ஒரு போதும் உருவாக்கப்படக்கூடாது என்பதை நாங்கள் சொல்ல விரும்புகின்றோம்.

இப்போதுள்ள நல்ல சூழலை இங்குள்ள அரசு சரியாகப் பயன்படுத்தி நல்லதொரு மாற்றத்தை உருவாக்கித் தர வேண்டும் என்பது தான் இன்றும் எங்களுடைய விருப்பமாக இருக்கின்றது. அடுத்த கட்டத்தில் ஆயுதங்களைத் தூக்கி வைத்துப் போராடுவதற்கு நாங்கள் உண்மையிலேயே விரும்பவில்லை. நல்லதொரு மாற்றமானது சுமூகமான ஒரு தீர்வின் மூலம் எமது மக்களின் எதிர்பார்ப்புக்கமைய தரப்பட வேண்டும் என்பதைத் தான் வலியுறுத்த விரும்பு



கின்றோம். ஒரு சுமூகமா சூழல் உருவாக்கப்பட்டு அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் சமாதான வாழ்வை வாழ வேண்டும் என்பதைத் தான் நாங்கள் விரும்புகின்றோம். அந்த நல்ல நாள் வர வேண்டும் என்பதை எதிர்பார்த்து நிற்கின்றோம். இப்போது கிடைத்திருக்கின்ற சூழலைச் சரியாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வை வழங்க முன்வர வேண்டும். அந்தத் தீர்வைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அது கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அந்த நம்பிக்கையோடு தான் நாங்கள் இருக்கின்றோம். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மேதினக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவின் மகளிர் அணியைச் சேர்ந்த பூவிழி உலகத்தில் மற்ற நாடுகள் எவ்வாறு சுதந்திரமாக மகிழ்ச்சியாக எப்படி வாழ்கின்றனவோ அதே போல் எங்களுடைய வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் எமது மக்கள் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் சுபீட்சமான வாழ்க்கையை வாழ வேண்டும். அதற்கான வழி இப்போதைய சமாதானத்தின் மூலம் ஏற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் இராஜகுகனேஸ்வரன், மதவாச்சியைச் சேர்ந்தவரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான திசாநாயக்க, முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர் ஆரிப், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பையா சுயாதீன ஆசிரியர் சங்கம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், மற்றும் கல்வியியல் கல்லூரி, யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர் அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ஜெயலலிதாவைப் புண்படுத்தாதீர்கள்! கூட்டமைப்பினரிடம் ஆனந்தசங்கரி வேண்டுகோள்

தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவையோ அல்லது பாக்கு நீரிணைக்கப்பால் இருக்கும் எந்தவொரு தலைவரையுமோ அசௌகரியப்படுத்தும் விதத்திலோ புண்படுத்தக்கூடியதாக நடந்து கொள்ள வேண்டாம் என தமது கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் நலன்விரும்பிகளிடம் தமிழர் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஆனந்தச்சங்கரி உருக்கமான வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பாக தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் தமிழர் கூட்டணியும் தமிழர் கூட்டமைப்பும் குழப்பமடைந்துள்ளனவாயினும் இந்த விடயம் குறித்து இன்னமும் கலந்தாராயப்படவில்லை எனக் குறிப்பிட்டிருக்கும் ஆனந்தசங்கரி இது தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது

எந்தவொரு தயக்கமும் இல்லாமல் சமாதான நடவடிக்கைகளுக்கு தமிழக அரசாங்கமும் மக்களும் ஆதரவு வழங்க வேண்டிய கட்டாயமான தேவையுள்ளது. இது தொடர்பாக முதலமைச்சர் ஜெயலலிதாவை வலியுறுத்த வேண்டும் என்ற வலவான கருத்தை தமிழர் கூட்டணியும் தமிழர் தேசியக்கூட்டமைப்பும் கொண்டுள்ளன. இதனை ஜெயலலிதா ஏற்றுக் கொள்வார் என நம்புகின்றோம்.

கடந்த சில வருடங்களாக பாக்கு நீரிணைக்கு இரு பக்கத்திலுமுள்ள தமிழ் மக்கள் சொல்லொணா நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்குத் தற்போதைய சந்தர்ப்பமானது சிறந்ததொன்று என்று உணரப்படுவதுடன் இது இறுதியான சந்தர்ப்பமாகும்.

இதற்கு இலங்கைக்குள்ளும் வெளியிலுமிருந்து ஆதரவு வழங்கப்படுவது அவசியமாகும். குறிப்பாக தமிழக அரசினது முழுமையான ஆதரவு அத்தியாவசியமானதாகும். சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழை



ப்பை தமிழ்நாடு அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையை இப்போதும் தலைமைத்துவம் கொண்டுள்ளது.

யாவற்றுக்கும் மேலாக தமிழ்நாடு எமது தாய்நாடாக உள்ளது. பாக்குநீரிணைக்கப்பால், இருபது மைல்களுக்கு அப்பால் இருக்கும் தமிழ்நாட்டுக்கு சமாதான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டிய தார்மீக கடப்பாடு உள்ளது. ஆதலால் எமத உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அபிமானிகள் ஜெயலலிதாவையோ அல்லது அங்கு இருக்கும் எந்தவொரு தலைவர்களையோ மனதைப் புண்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை தமிழ் நாட்டினது ஆதரவு அவசியமானது. இது தொடர்பாக எந்தவொரு தயக்கத்துக்கும் இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகள் வெளிப்படுத்திய சமாதான அக்கறைக்கு தெற்கில் போதிய பிரதிபலிப்புக்கள் இல்லை என்கிறார் பிரதமர்

சமாதானத்திற்காக அரசியல் வெளிப்பாடுகளை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தும் அளவுக்கு தென்னிலங்கை அரசியல் கலாச்சாரம் அமைந்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ள ஸ்ரீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதற்குமே விதண்டாவாதப்பட்டுக் கொள்ளும் முரண்பாட்டு அரசியலையே காண முடிவதாகக் கவலை தெரிவித்திருக்கிறார்.

உலகப் பத்திரிகைச் சுதந்திர தினமான 3ம்திகதி வெள்ளிக்கிழமை இலங்கைப் பத்திரிகையாளர்கள் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்திய பத்திரிகைச் சுதந்திர தின வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் நாட்டில் புதியதொரு அரசியல் கலாச்சாரத்தை ஏற்படுத்தும் வகையிலேயே செயற்பட்டு வருவதாகவும் அடுத்த ஊடகச் சுதந்திர தினம் வரும் போது நாட்டில் புதியதொரு அரசியல் கலாச்சாரம் ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் காண முடியும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டில் சிறந்த ஊடகச் சுதந்திரத்தை ஏற்படுத்தும் பொருட்டும் சிறந்ததொரு அரசியல் கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டும் குற்றவியல் அவதூறுச் சட்டத்தை நீக்கவும். ஆபாசக்காட்சிகள், செய்திகள் வெளியிடுவதைத் தடுக்கவும் புதிய சட்டமொன்றைக் கொண்டு வரவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குற்றவியல் அவதூறுச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக வர்த்தகமானியில் அறிவிப்புச் செய்யப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் சட்டமூலமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும் தெரிவித்த பிரதமர் ஒருசில உத்தியோகத்தர்களினால் தீர்மானிக்கப்பட்டு வெளியிடப்படும் ஆபாசக் காட்சிகள் செய்திகளை முழு நாடுமே பார்வையிடுவதைத் தவிர்ப்பதற்கு மேற்குலக நாடுகளிலுள்ள சட்டத்தை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் தணிக்கை செய்து பொருத்தமான ஊடக நிறுவனமொன்றை அமைக்கவிருப்பதாகவும் கூறினார்.



அரச ஊடகங்கள் இன்று பாரிய நிதி நெருக்கடியை சந்தித்துள்ளன. இவற்றை இரண்டு ஆண்டுகளுக்குள் இலாபமீட்டும் நிறுவனமாக்குவதே எமது பணி. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தையும் ரூபவாஹினி நிறுவனத்தையும் ஒன்றாக இணைக்கவுள்ளோம்.

கடந்த ஆட்சியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒரு வீதம் என்றிருந்ததால் நிறுவனங்கள் விளம்பரங்களைச் செய்வதற்கு முன்வரவில்லை. இதனால் தனியார் ஊடகங்களும் நட்டத்தை எதிர்கொண்டன. ஆனால் தற்போது நிலைமை மாறி வருகின்றது. தனியார் ஊடகங்களுக்கு விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

# சமாதானத்தை உறுதிப்படுத்தும் வரை இலங்கைக்கான சர்வதேச உதவி இடைநிறுத்தம்

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் எதிர்வரும் யூனில் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தை முடிவை பொறுத்தே சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்கள் புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

அதுவரை இந்நிறுவனங்கள் பாரியளவிலான புனர்நிர்மாணத் திட்டங்களில் முதலீடு செய்து கொள்ள மாட்டாத நிலைமையே எழுந்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

வீதிகளை அமைத்தல். மின் இணைப்புக்களை ஏற்படுத்தல். மற்றும் வைத்தியசாலைகளை புனர்நிர்மாணம் செய்தல் போன்ற பாரிய புனரமைப்புத்திட்டங்கள் யூனில் நடைபெற உத்தேசிக்கப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தையின் முடிவைப் பொறுத்தே செயற்படுத்தப்படுமென இலங்கையிலுள்ள ஐ.நா. ஒருங்கிணைப்பாளர் மைக்குயெல் சேர்மோ பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

சமாதான நடவடிக்கைகள் மிகவும் உறுதியாக இடம்பெறவதற்கான சமிக்ஞைகள் வெளியாகும் வரை உதவி வழங்குவோர் மிகவும் எச்சரிக்கையுணர்வுடனேயே இருப்பார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். ஆயினும் இலங்கையில் இடம் பெயர்ந்துள்ள 8 லட்சம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது தொடர்பாக ஐ.நா. வாக்குறுதியளித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கே ஐ.நா. அமையம் முன்னுரிமை கொடுக்கும் என ஐ.நா.வின் ஆசிய. பசுபிக் பிராந்தியத்துக்கான பிராந்தியப் பணிப்பாளர் எட்வாட் வாட்டர் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடி அகற்றுதல். மீள் குடியேற்றம். உணவு போன்றவற்றுக்கான தேவையிருப்பதால் வடகிழக்கில் இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான உதவித் திட்டங்களை ஐ.நா. தயாரிதர்து வைத்திருப்பதாகவும் வாட்டர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நடவடிக்கைகள் குறித்து ஏதாவது விசேடமான சிபார்சுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பது அதொடர்பாக அவர் கருத்துக் கூற மறுத்துவிட்டார். ஆனாலும் முழு அளவிலான அறிக்கை வரும் என்றார்.

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்: சிறுவர் சமாதான அமைப்பு குதிரைச் சவாரி

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதிச் சிறுவர்கள். சிறுமிகளின் கல்வி, சுகாதாரம் மனோநிலை ஆகியவற்றை மேம்படுத்தும் பொது வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ்டினா அன்டர்சன். இலங்கையைச் சேர்ந்த நிஹாரா ஜயதிலக்கரட்ணம் ஆகிய இரு இளம் பெண்கள் சிறுவர் சமாதானம் என்ற அமைப்பை ஏற்படுத்திச் செயற்படுத்த முன்வந்துள்ளனர்.

இது தொடர்பான செய்தியாளர் மாநாடு கல்கிசை ஹோட்டலில் நடைபெற்ற போது நிஹாரா ஜயதிலக்கரட்ணம் விளக்கமளித்தார். யுத்தம் எங்கு நடைபெறுகிறதோ அங்கே சிறுவர்கள் பாதிக்கப்படுவது சாதாரண விடயம். யுத்தத்தினால் சிறுவர்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். இவர்களின் மீட்புக்காக பல அமைப்புக்கள் தோன்றிச் செயற்பட்டாலும் அவர்களால் முழுமையாக உதவி செய்ய முடியாது.

அவ்வாறு செய்ய முடியாத உதவிகள் பணிகளையே நாம் செய்ய முன்வந்துள்ளோம். அதன் முதல் நடவடிக்கையாக 5ம் திகதி சுதந்திர சதுக்கத்தில் இருந்து காலிமுகத்திடல் வரை குதிரைச் சவாரியொன்று செய்யப்படவுள்ளது. இதற்குப் பாடசாலை மாணவர்களின் பங்களிப்புப் பெறப்படும்.

இரண்டாம் கட்டமாக கொழும்பிலிருந்து வவுனியா வரையும் மே 11 ஆம் திகதி இந்நிகழ்வு இடம்பெறும். பின்னர் யாழ்ப்பாணம் மற்றும் தீவுப்பகுதிகளிலும் இது நடைபெறும்.

குதிரைச் சவாரியின் போது பல்வேறு நிறுவனங்கள். தொண்டர் அமைப்புக்கள். பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் ஆகியோரிடம் இருந்து வடபகுதி மாணவர்களுக்கான புத்தகங்கள். பாடசாலை உபகரணங்கள். உடைகள். மருந்துவகைகள். பால்மா பைக்கற்றுக்கள். பிஸ்கட். மற்றும் தேவையான பொருட்கள் அன்பளிப்பாகச் சேகரித்து வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இதே போல் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் போகும் போது வன்னிப்பகுதியில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே போல் யாழ்.தீவுப்பகுதிகளிலும் உள்ள சிறுவர்களுக்கு இவை வழங்கப்படும். பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்படும் சித்திரப் போட்டியில் தெரிவாகும் 25 மாணவர்கள். மாணவிகளைக் கொழும்புக்கு அழைத்து வந்து இங்குள்ள பாடசாலை மாணவர்களுடன் பொழுதுபோக்கவும் வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

எமது இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லப் பலர் அனுசரணை வழங்கியுள்ளனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# தாய்லாந்துப் பேச்சுக்கு முன்னர் இந்தியத் தலைவர்களை ரணில் சந்திப்பார்

தாய்லாந்தில் எதிர்வரும் யூன் மாதத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐ.தே.முன்னணி அரசாங்கம் விரும்புவதாக அறிய வருகின்றது. யூன் முதல் வாரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு விஜயம் மேற 'கொண்டு இந்தியப் பிரதமர் வாஜ்பாய். காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி. ஆகியோரையும் பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்த வேண்டும் என தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ள போதிலும் இலங்கை இனப்பிரச்சனைக்கு நீதியான தீர்வு கிட்ட வேண்டும் என இந்திய அரசாங்கம் வலியுறுத்தி வந்துள்ளது. தமிழக அரசின் தீர்மானம் குறித்து வாஜ்பாயின் மத்திய அரசு இதுவரை கருத்தெதனையும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் சென்னைக்கு ரணில் விஜயம் மேற்கொள்ளவுளார்




R ROYAL ACCIDENT BENEFITS

நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்!
வாகன விபத்தால் பாதிப்பானவர்களுக்குரிய
- உரிமைகள்
- நன்மைகள்
- பாதுகாப்புகள்

உங்களுக்குரிய
- தற்போதைய / எதிர்காலச் சம்பள இழப்புகள்
- கல்வி /வணிக இழப்புகள்
- வீட்டு /குழந்தைப் பராமரிப்புச் செலவுகள்
- மருத்துவ வசதிகள்

போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள அழையுங்கள்
குமார்

To claim proper compensation for your damages, wage loss and all insurance benefits you are legally entitled to.
"We Fight For Your Right"

Call: KUMAR
TEL: (416) 283-8000
FAX: (416) 283-3567
1200 Markham Road, Suite 105
Scarborough, ON M1H 3C3
(Markham & Ellesmere)

# கனடாவில் உள்ள பயங்கரவாதிகளின் வங்கி இருப்புக்கள், சொத்துக்களை முடக்குமாறு அரசு உத்தரவு

கனடாவில் பயங்கரவாதக் குழுக்கள். அல்லது தனிநபர் பயங்கரவாதிகள் என கருதுபவர்களின் வங்கிப் பண இருப்புக்கள். மற்றும் சொத்துக்களை உடனடியாக அபகரிக்குமாறு கனடிய அரசு சகல கனடியன் வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளது. குறிப்பாக பாகிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்டு செயற்படும் சில முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களில் உள்ளவர்களை இத்தகைய சந்தேகத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதே போல் எதியோப்பியா. எகிப்து. போன்ற நாட்டில் இருந்து வந்து கனடாவில் குடியேறிய சில பயங்கரவாதிகள் மீதும் இச்சந்தேகம் திரும்பியுள்ளது.கடந்தவாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டப் பிரேரணையில் அமுலாக்க அதிகாரம் சகல பொலிஸ் பிரிவு பாதுகாப்பு பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட போது நிதி நிறுவனங்களுக்கும் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது வரை கனடாவில் இருபது வங்கிக்கணக்குகளில் மொத்தமாக 3.40.000 டொலர்கள் பணம் முடக்கப்பட்டுள்ளது.

# வாகனமோட்டும் போது கைத் தொலைபேசி உரையாடலை தடை செய்த நியுபவுண்லாந்து

வாகனம் ஓட்டிக் கொண்டிருக்கும் போது கைத் தொலைபேசி மூலம் உரையாடுவதனை வீதி பாதுகாப்புக்கருதி செய்யக்கூடாது என்ற ஒரு உறுதியான சட்டமூலத்தினை நியூபவுண்லாந்து மாகாணத்தில் ஆட்சியில் உள்ள லிபரல் கட்சி சட்டமூலமாக்கியுள்ளது.

கனடாவில் உள்ள ஏனைய மாகாணங்களும் இச் சட்டமூலத்தினை அமுல்படுத்துவது தொடர்பாக ஆலோசித்து வரும் வேளையில் நியூபவுண்லாந்து மாகாண அரசே இதனை முதன்முறையாக கனடாவில் நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் வீதி ஒழுங்கு சட்டவிதிகளின்படி இது சிறு குற்றமாக கருதினாலும் பாராளுமன்றத்தில் இந்த மசோதா சில உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட போதும் இதுவரை உறுதியான சட்டமாக அமுல் படுத்தப்படவில்லை.

அமெரிக்காவில் நியூயோர்க் மாகாணத்தில் இது ஏற்கனவே உருவாக்கப்பட்ட சட்டமூலமாக உள்ளதுடன் மேலும் சில உள்ளூர் நியாயாதிக்கம் உள்ள சுமார் அமெரிக்காவின் பதினான்கு இடங்களில் இச் சட்டம் அமுலில் உள்ளது.

# விற்பனையில் 25 வீதம் வீழ்ச்சி கண்ட நாஷனல் போஸ்ட் பத்திரிகை

கனடாவில் தேசிய அளவில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகளில் ஈழத்தமிழருக்கு எதிராக உண்மையினை மீறி துவேஷம் பாடும் நாஷனல் போஸ்ட் என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் கடந்த வருட விற்பனை என்பது முன்னைய வருடங்களை விட 25 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என ஏபிசி என அழைக்கப்படும் ஆடிற் கீரூஒவ் சேர்க்குலேசன் தமது ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதே போல் குளோப்அன்ட் மெயில். 5 வீதத்தினாலும். ரொறன்ரோ சண் 4.8 வீதத்தினாலும் ரொறன்ரோ ஸ்ரார் 1.2 வீதத்தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதில் அதிகம் விற்பனையில் வீழ்ச்சி அடைந்த நாஷனல் போஸ்ட் பத்திரிகை நிறுவனம் தங்கள் பத்திரிகையின் உருவாக்கங்களை குறைந்ததன் மூலம் கடந்த செப்டம்பர் மாதம் சுமார் நூறு பேரை வேலையில் இருந்து நீக்கி ஆட்குறைப்புச் செய்திருந்தது.

# புதிய வருமான வரி அதிகாரங்கள் கோரும் கனடாவின் சிறிய நகரங்கள்

கனடாவில் உள்ள மக்கள் குறைந்தளவு வசிக்கும் சிறு நகரங்களுக்கும் அதன் அபிவிருத்திக்கும் நகர சபைகளினால் அறவிடப்படும் சொத்துக்கள் வரிகள் உட்பட பல்வேறு வரிகளுக்கு அப்பால் மேலதிக புதிய வரிகளை வறவிடும் அதிகாரம் இச்சிறிய நகரங்களுக்கு வழங்க வேண்டும் என்ற ஒரு பிரேரணையினை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக ஹோட்டல் சேவைகள். உல்லாச சேவைகளின் வரி அறவிடும் அதிகாரங்களை இத்தகைய நகரங்கள் அறவிடும் உத்தரவு வழங்கப்படுவதுடன் நகர அபிவிருத்திகளை துரிதகதியில் மேற்கொள்ள வழிவகுக்கும் எனக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரொறன்ரோ போக்குவரத்து சபையின் விஸ்தரிப்புக்கு மத்திய அரசு 76 மில்லியன் கடனுதவி

தொடர்ச்சியாகப் பற்றாக்குறை நிதிநிலைமையில் நட்டங்களில் ஓடிக் கொண்டிருக்கின்றது என பல தடவைகளிலும் சர்ச்சைக்கு உரியதாக இருந்து வந்த ரொறன்ரோ போக்குவரத்து சபைக்கு கனடிய மத்திய அரசு 76 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கவுள்ளதாக மத்திய அரசு போக்குவரத்து அமைச்சர் டேவிட் கொலனெற்றி கடந்த வாரம் அறிவித்துள்ளார். இந்நிதி உதவி முதற்கட்டமாக 62 மில்லியன் டொலரும் பின்னர் இவ் வருட இறுதியில் மிகுதி 14 மில்லியன் டொலரும் வழங்கப்படும் எனவும் இது முக்கியமாக பாதாள ரயில் சேவைகளின் விஸ்தரிப்பு உட்பட பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பாரிய பிரச்சனையை எதிர் கொண்ட ரி.ரி.சி. க்கு பெரும் நன்மை.

## கனேடியச் செய்திகள்

தொகுப்பு:சிவ.பஞ்சலிங்கம்

# 1 மில்லியன் டொலர் லொத்தர் பரிசு: ஒட்டவா தம்பதிகள் பெற்றனர்

ஒட்டாவா நகரில் இருந்து உலோக தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் டெனிஸ் மற்றும் அவருடன் கூட்டாக தம்பதியாக வாழும் மில்சா ஆகிய இளம் தம்பதிகளுக்கு ஒரு மில்லியன் டொலர் லொத்தர் பரிசு கடந்த வாரம் கிடைத்துள்ளது.

ஒன்ராறியோவின் மிகப்பெரிய லொத்தர் என குறிப்பிடப்படும் வர்த்தக நோக்கில் வெளியிடப்பட்ட லொத்தர் கம்பனியின் ரிக்கற்றினை முன் ஒருபோதும் வாங்காது முதல் தடவையாக வாங்கிய இத் தம்பதிகள் தேனீர்கடை ஒன்றில் தேனீர் அருந்தியவாறு தங்கள் இலக்கத்தினை பரிசீலனை செய்த போது அது பரிசுக்குரிய இலக்கமாக இருந்த போது அது தவறாக இருக்குமா? என்ற சந்தேகமே தங்களுக்கு முதலில் இருந்தது எனத் தெரிவித்தனர்.

இந்த டிக்கற்றினை ஒரு பெற்றோல் நிலையத்தில் தாம் வாங்கியிருப்பதாக குறிப்பிட்டிருந்தனர். இவர்களுக்கு இரு குழந்தைகளும் ஒரு குழந்தை இன்னும் சில மாதங்களில் பிறக்கவுள்ளது.

# 47 ஆயிரம் டொலர் மோசடிக் குற்றத்தினை ஒப்புக் கொண்ட பொலிஸ் புலனாய்வு அதிகாரி

கனடாவுக்கு பொருட்களை சட்டரீதியற்ற முறையில் கடத்தி வந்து மோசடி வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய பல்வேறு மட்டங்களிலும் இருந்து நியமிக்கப்பட்ட பொலிஸ்பிரிவில் ரொறன்ரோவில் இருந்து இயங்கிய ஹரி காற்றர் (54வயது) என்னும் பொலிஸ் உத்தியோகத்தர் இந்த இரகசியத்துப்புத் துலங்களின் போது சுமார் 47.000 டொலர்களை கையாடிய குற்றத்தினை ஏற்றுக் கொண்டதனைத் தொடர்ந்து எதிர் வரும் செப்டம்பர் 4ம்திகதி தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

தமது 24 வருட சேவைக்காலத்தின் பின்பு கடந்த 1995ம் ஆண்டு ஓய்வு பெற்ற அந்த உத்தியோகத்தர் கடந்த செப்டம்பர் 1997 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த ஏப்ரல் 14ம் திகதி. 2002 காலை நேரம் மூடுமுகில் பனி காலநிலையின் போது வீதிகளில் எதிரே வரும் வாகனங்கள் தெரியாத நிலைமை சில மணி நேரம் இருந்த போது ஒரேஞ்வில்லி நகரில் பொலிஸ் வாகனம் ஒன்று சுக்குநூறாகி நொருங்கிய போதும் பொலிஸ் உத்தியோகத்தரும் ஏனைய விபத்துக்குள்ளான வாகனத்தில் பயணம் செய்தோரும் காயங்களுடன் உயிர் தப்பினர்.

காலை 10.45க்கு நெடுஞ்சாலை 10 வடக்கு பகுதியில் நடந்த இவ் விபத்தின் பின்பு அன்று மாலை வரை இவ்வீதி மூடப்பட்டு புலன் விசாரணைகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# வாசகர்களின் கவனத்திற்கு!

**உங்கள் அபிமான ஈழநாட்டின் அலுவலகம் இடமாற்ற இருப்பதால் புதிய தொலைபேசி இலக்கம் வரும் வரை (416) 528 - 1867 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.**

மீளப் பெறும் பண வெகுமதியுடன் கூடிய காப்புறுதித் திட்டம்

- முதலீட்டுடன் கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம்
- தற்காலிக, மிகவும் விலை குறைந்த ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- விபத்து, காயங்கள் மூலம் ஏற்படும் இயலாமைக்கான காப்புறுதித் திட்டங்கள்
- சேமிப்புகளும் முதலீட்டுத் திட்டங்களும்
- Investment Fund
- RSP
- RIFs and Annuities

SINCE 1847

One of the best & leading companies in North America

CANADA LIFE

பலதிக பல்வேறு வகையான திட்டங்களை அறிந்து கொள்ள நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன்

சிவ பஞ்சலிங்கம் (B.Comm.)
BUS: (416) 661 - 9155
RES: (416) 321 - 09?9
FAX: (416) 661 - 9157
5050 DUFFERIN ST # 218
TORONTO - ONT - M3H 5T5

ஈழப்பிரச்சனையில் தலையிடுவதை நேரடியாக வெளிப்படுத்துவதற்கு இந்தியா விரும்பவில்லை. தாம் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் காட்டிக் கொள்வதற்குத் தான் அது இப்போது விரும்புகின்றது. இருந்த போதிலும் இலங்கை விவகாரத்தில் தமது பிடி இறுக்கமானதாக இருக்க வேண்டும் என்பதும் இந்தியாவின் வியூகங்களில் ஒன்றாக இருக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசுக்கும் சரி. விடுதலைப்புலிகள் தரப்புக்கும் சரி மறைமுகமான பல அழுத்தங்களை இந்தியா கொடுக்கின்றது. நேரடியான தலையீட்டை விட மறைமுகமான இந்த அழுத்தங்கள் தான் ஆபத்தானவை.

அதனால் தான் இந்தியா ஈழப்பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்காவிட்டாலும் இப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு முயற்சியில் இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என்பதை விடுதலைப்புலிகளும் ஸ்ரீலங்கா அரசும்

## பேராசிரியன் எழுதும்
# சிறப்புக் கட்டுரை

தமது பங்களிப்புக்கு இடமில்லை என்று இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது. இப்பிரச்சனையில் மறைமுகமான தலையீட்டை அது கைவிட்டு விடப் போவதில்லை என்பது தான் இதன் அர்த்தம்.

இநதியா கூறிக்கொள்ளும் தலையிடாக் மறைமுகமாக உதவுவதாகவும் உறுதிப்படுத்தப்படாத சில செய்திகள் உள்ளன. தமிழ் மக்களிடம் அபிமானத்தைப் பெறுவதை விட இவ்வமைப்புக்களின் அபிமானம் முக்கியமானது என இந்தியா கருதுவதற்கு (இந்திய நலன் சார்ந்த) காரணங்கள்

அந்த உறவைப் புறந்தள்ள விரும்பாது.

மத்தியஸ்தம் அல்லது சமாதானப் பேச்சுக்களுக்கு உதவுதல் என்ற பங்கை இந்தியா ஏற்றுக் கொண்டால் ஏதோ ஒருவகையில் தமிழர்களின் அபிலாசைகளைப் பேணும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். அவ்வாறான நிலைப்பாடு சிங்கள அமைப்புக்களின் ஆத்திரத்தைக் கிளறிவிடும். நோர்வேக்கு இப்போது ஏற்பட்டுள்ள நிலைமை அதுதான். அந்த நிலைமையை இந்தியா விரும்பவில்லை. இந்தப் பின்னணியில் இந்தியாவில் பேச்சுவார்த்தை . பால சிங்கத்திற்கு மருத்துவ சிகிச்சை என விடுதலைப்புலிகள் முன் வைத்த கோரிக்கைகள் இந்தியாவை பெரும் சங்கடத்திற்குள்ளாக்கியது. இந்தியா பதிலளிக்க முடியாத நிலையில் இருப்பதை புரிந்து கொண்டுள்ள நிலையில் தான் தாய்லாந்து தொடர்பான யோசனை முன் வைக்கப்பட்டது. இந்த யோசனைக்கு தாய்லாந்தை இணங்கச்

# தலையிடாக் கொள்கையும் மறைமுக அழுத்தங்களும்



தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றன.

நேரடியான பங்களிப்பை வழங்க முன் வரும் போது மறைமுகமான அழுத்தங்களை இந்தியா தவிர்க்க வேண்டியிருக்கும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில் இப்பிரச்சனையில் ஒரு தடவை நேரடியாகத் தலையிட்டு தமது கைகளை அதுசுட்டுக் கொண்டது. நோர்வேயைப் போல ஒரு பக்க சார்பற்ற தமது நலன்களைக் கருத்திற் கொள்ளாத பங்களிப்பு என்றால் அஞ்சத் தேவையில்லை. ஆனால் இந்தியாவால் அவ்வாறான ஒரு பங்களிப்பை வழங்க முடியாது. அதனால் தான் சமாதான முயற்சிகளில் கொள்கைக்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று.

இதனைவிட வெளிநாட்டுக் காரணங்கள் சிலவும் உண்டு. முக்கியமாக ஜே.வி.பி. மற்றுட் சிஹல உறுமைய என்பன இந்தியாவுடன் நட்பையும் உறவையும் வலுப்படுத்திக் கொள்வதற்கு இப்போது முதலிடம் கொடுக்கத் தொடங்கியுள்ளன. இந்திய எதிர்ப்பை தமது கொள்கைகளில் முக்கிய கொள்கையாகக் கொண்டிருந்த ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் முக்கியமானது.

இவ்விரு அமைப்புக்களுக்கும் இந்தியா உள்ளன. நோர்வே மத்தியஸ்தம் வகிப்பதை விட இந்தியா மத்தியஸ்தம் வகிப்பது நல்லது என இவ்விரு அமைப்புக்களுமே அண்மையில் கருத்துக்களைத் தெரிவித்திருந்தமை கவனிக்கத் தக்கது.

தமிழர் பிரச்சனை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டிற்குக் காரணமாகத் தான் சிங்கள தீவிரவாத அமைப்புக்கள் இந்தியாவை வரவேற்கத் தலைப்பட்டுள்ளன என்பதைச் சொல்லத்தேவையில்லை. இவற்றின் மூலமாகத் தமதுநலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முற்பட்டுள்ள இந்தியா தமிழர்களுடன் உறவுகளை ஏற்படுத்தி

செய்வதில் இந்தியாவின் பங்கும் முக்கியமானதாக இருந்தது.

தாய்லாந்தில் இந்திய உளவுநிறுவனங்கள் மிகவும் சுறுசுறுப்பான செயற்படுகின்றன. இந்தியாவின் பிரபல தாதாக்களை தாய்லாந்தில் வைத்துக் கைது செய்வதற்கும் இந்த உளவு நிறுவனங்களின் செயற்பாடுகளே காரணமாக (ஆம் பக்கம் பார்க்க)

# "பிரபாகரன் பொறுப்பில் திருமலை இருந்தால் அவர் இந்தியாவின் நண்பன்"

இந்தியாவின் தேசிய நலன்கருதி விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் இலங்கை அரசாங்கத்தையும் இந்தத் தடவை அந்நியப்படுத்தி விடக்கூடாது எனவும் தனது துருப்புச் சீட்டுக்களை சரியான முறையில் இந்தத் தருணத்தில் பயன்படுத்த வேண்டும் எனவும் இந்தியாவின் கல்விமான்கள் வட்டாரத்திலிருந்து வலியுறுத்தல் எழுந்துள்ளது.

புலிகளுடன் தொடர்பு கொள்ளுதல் கயிற்றின் மீது நடக்கும். இந்தியாவின் தேர்வுகள் எனும் தலைப்பில் கேரளா மாநிலத்தினைச் சேர்ந்த் கல்விமானான ரஜீவ் ஸ்ரீநிவாசன் என்பவரும் இத்தகைய கருத்தினை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் திருகோணமலையை எவர் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தாலும் அவர் நிச்சயமாக இந்தியாவின் நண்பராகவே இருக்க வேண்டும் எனவும். பிரபாகரன் திருகோணமலையை தமது பொறுப்பில் வைத்திருந்தால் நிச்சயமாக அவர் இந்தியாவின் நண்பனாகவே இருக்க வேண்டுமெனவும் இதுவொரு கருதிய எளிமையான கணிப்பீடு என்றும் இக் கல்விமான்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்து சமுத்திரத்தின் ஊடாக எரிபொருள் வர்த்தகம் அதுகரித்து வருகிறது. சீனா. ஜப்பான் என்பனவும் பாரசீக வளைகுடாவிலிருந்து இந்து சமுத்திரம். மலாக்கா. நீரிணை வழியாகவே சீனா. ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. இந்நிலையில் இந்து சமுத்திரப் பணய மார்க்கத்தை இந்தியாவானது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது முக்கியமான விடயமாக அமைகிறது.

வங்காள விரிகுடாவில் கோகோஸ்தீவுகளில் (பர்மிய எல்லை) சீனாவின் நடவடிக்கைகள் கவலைக்குரியவையாகும். இந்த நிலையில் அமெரிக்கர்களின் பிரசன்னம் பாரியளவில் திகிலூட்டும் விடயமாகும். பிரிட்டிஷ் தீவான தியாகோ கார்சியாவில் ஏற்கனவே குத்தகையென்ற பெயரில் அமெரிக்கர்கள் கால் பதித்து விட்டனர். அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான இராணுவ ரீதியான நல்லுறவுகள் காணப்பட்ட போதிலும் திருகோணமலை துறைமுகத்தை மறந்து விடக்கூடாது. கடற்படைத்தளத்திற்கு அது உள்ளதமான இயற்கைத் துறைமுகமாகும் இதனை இந்தியர்கள் நன்கறிவார்கள். இதனாலேயே இலங்கை அரசாங்கத்துடன் ஒரு உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளார்கள். எவர் திருகோணமலை துறைமுகத்தைப் பொறுப்பேற்றாலும் அதனை வீட்டோ செய்யும் அதிகாரம் இந்தியாவிற்கு உண்டு.

வடகிழக்குப் பிராந்தியத்தை சுயாட்சியுடைய பகுதியாகவோ அல்லது முழுமையான அதிகாரம் உடைய பிரதேசமாகவோ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனி



டம் கையளித்தால் இந்தியா பிரபாகரனுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்திய ஊடகங்களில் கொதிப்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாக பிரபாகரனை நாடு கடத்தி விசாரணைக்குட்படுத்த வேண்டுமென காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது. பிரபாகரனைக் கைது செய்வதால் ராஜீவ்காந்தியை திரும்பக் கொண்டு வர முடியாது. பிரபாகரன் போர்க்குற்றவாளி என்ற கருத்தும் முன் வைக்கப்படுகிறது. ஆனால் மனிதாபிமானத்திற்கு எதிரான போர் குற்றவாளிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பலர் தமது முதுமை காலத்தில் சௌகரியமாக வாழ்ந்து வந்துள்ளார்கள்.

வியட்நாம். கம்போடியா. லாவோஸ் போன்ற நாடுகளுக்கு எதிரான போர் குற்றங்களைப் புரிந்தவர் எனக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்ட ரிச்சர்ட் நிக்ஷன் (முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி) முதுமையடைந்து இறந்தார்.

வியட்நாம். கம்போடியா லாவோஷில் போர்க் குற்றங்களைப் புரிந்தார் எனக் கூறப்பட்ட ஹென்றி கீஸிங்கர் (முன்னாள் வெளிநாட்டமைச்சர்) நியூயோர்க்கில் வசதியாக வாழ்ந்து வருகிறார்.

திபேத்திலும் சீன மக்களுக்கும் எதிராகப் போர்க் குற்றங்களைப் புரிந்ததாகக் கூறப்பட்ட மாவோ சேதுங் டெங்ஸியாவோ பிங் போன்றோர் முதுமையடைந்து மரணித்தனர். கிழக்குப் பாகிஸ்தானில் (தற்போதைய பங்காளதேஷ்) யுத்தக் குற்றங்களைப் புரிந்த ஜெனரல் டிக்காகான் வயது முதிர்ந்து இறந்தார். சிலியில் மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்களைப் புரிந்த ஜெனரல் அகஸ்டோ பினோசேயின் விசாரணை முடக்கப்பட்டு விட்டது.

இதேவேளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான உடன்படிக்கையில் அமெரிக்கா இன்னும் கைச்சாத்திடவில்லை.

மேலும் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிடம் விசாரணைக்கு ஒப்படைப்பதென்பது கனவாகும். யாருடைய இராணுவம் இதனை நடைமுறைப்படுத்தும்? ஆதலால் இந்தியா தனது தேசிய நலன்களைக் கருத்திற் கொள்ள வேண்டும். கொள்கை. பழிவாங்கல் என்ற சிக்கலான நிலைமைக்கு செல்லுதல் கூடாது. சமஷ்டி அமைப்பொன்றை (ஆம் பக்கம் பார்க்க)

# கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் அதிஉயர் விருது பெற்ற கிளையபோர்ட் நிறுவனத்தினர்

கனடா தமிழர் வர்த்தக சம்மேளனம் வருடா வருடம் தமிழ்சமூகத்தின் மத்தியில் வர்த்தகத்துறையில் சிறப்பான முறையில் ஈடுபட்டு வரும் வர்த்தகப் பிரமுகர்களை மென் மேலும் ஊக்கப்படுத்தும் விதத்தில் வருடாவருடம் விருது வழங் கிக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை நடத்தி வருவது தெரிந்ததே.




அந்தவகையில் இவ்வாண்டுக்கான (2002) விருது வழங் கும் வைபவம் கடந்த சனிக்கிழமை 27 ஏப்ரல் 2002 அன்று ஸ்காபரோவில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் மிகச் சிறப்பான முறையில் சங்கத்தின் தலைவர் திரு குலா. செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்நிகழ்வுக்கு கனடிய வங்கிகளின் உயரதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு விருது பெற்ற வர்த்தகப் பிரமுகர்களைப் பாராட்டி விருதுகளும் வழங்கிக் கௌரவித்தனர்.

இவ்வாண்டு சிறந்த வர்த்தகர்களுக்கான விருதுகளை சண்பிளவர் பேர்ணிச்சர் நிறுவன அதிபர் திருமதி வின்சன்ம் மாஜி. மல்ரிமிலித்தோ நிறுவன அதிபர் திரு முத்துராமன் ரஜீவ்கரன். காஸ்கடே லைனின் சேவிர்ஸ் நிறுவன அதிபர் திரு கண்ணன். ஆர்.என். எஸ். ஓட்டோ நிறுவன அதிபர் திரு ராதாகிருஷ்ண சாமி ஆகியோருடன் *Lifetime Achievement Award 2002* க்கான அதிஉயர் விருதை கிளையபோர்ட் நிறுவன அதிபர்கள் திரு ஜே.இராசரட்ணம். திரு சசி கணநாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இவர்கள் இந்த சிறப்புக்குரிய விருதைப் பெற்றுக் கொண்ட போது மண்டபத்தில் வீற்றிருந்த அனைவரும் எழுந்து நின்று கைதட்டி தங்கள் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டது இவர்கள் இலாப நோக்கத்துடன் வர்த்தகத்துறையில் ஈடுபட்டாலும் சமூகம் சார்ந்த பங்களிப்பையும். மக்கள் மத்தியில் ஒரு நன் மதிப்பையும் பேணி வருகின்றார்கள் என்பதை உணரக் கூடியதாக இருந்தது.

யுனைட்டட் வே நிறுவனத்தின் தலைவர் ஜெனிபர் ரெனின். றொறன்ரோ வீட்டு வசதிகள் சபையின் தலைவர் திரு டேவிற் சிம்மர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட இவ் விழாவுக்கு சுமார் 600க்கு மேற்பட்ட வர்த்தக. மற்றும் பொதுஜன ஊடக பிரமுகர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு கடந்த காலங்களை விடச் சிறப்பானதாக அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது.



படத்தில் கிளையபேர்ட் நிறுவன அதிபர்கள் ஜே –சசி ஆகியோர் றோயல் வங்கி அதிகாரியிடம் இருந்து விருது பெறுவதை முதலாவது படத்திலும் தமது நிறுவனத்தில் பணியாற்றும் 50க்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் வெற்றிப்பெருமிதத்தில் ஜே - சசி ஆகியோர் அமர்ந் திருப்பதை மற்றைய படத்திலும் காணலாம்.

## ரணிலை ஓரம் கட்ட சந்திரிகா கடும் முயற்சி

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் திருகோணமலையில் நடைபெற்ற சம்பவம். வாகரையில் நடைபெற்ற சம்பவம் ஆகியவற்றை வைத்துச் சமாதானத்தைச் சீர்குலைத்து அரசியல் லாபம் தேடலாம் என்று மனப்பால் குடிக்கும் சிங்களப் பேரினவாத ஜனாதிபதி சந்திரிகா தன் அரசியல் எதிரியான பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவை ஓரம் கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

கிழக்லங்கைச் சம்பவங்களை விசாரணை செய்ய தேசிய பாதுகாப்புசபையின் விசேட கூட்டம் ஒன்றை சந்திரிகா கூட்டினார்.

இதற்குப் பிரதமர் ரணிலை சந்திரிகா அழைக்கவில்லை. ஆனால் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன. செயலாளர் பெர்னாண்டோ மற்றும் முப்படை தளபதிகளை அழைத்தார். இக்கூட்டத்தில் ரணிலையும் புலிகளையும் வன்மையாகக் கண்டித்த சந்திரிகா நோர்வே புலிகளுக்குச் சார்பாக நடக்கிறது என்று குற்றம் சாட்டினார்.

அத்துடன் சிங்கள மக்கள் மத்தியில் மலிவான விளம்பரம் பெற தேசிய பாதுகாப்புச்சபை கூட்டத்துக்கு முன் எப்போதும் இல்லாத வகையில்ரூபவாகினி தொலைக்காட்சியை அழைத்துப் படம் பிடித்துத் திரையிடச் செய்தார். ரணிலை ஓரம் கட்டும் சந்திரிகாவின் முயற்சியை முறியடிக்க ஐ.தே.க அரசாங்கம் இனிமேல் மந்திரிசபைக் கூட்டங்களை ஜனாதிபதி மாளிகையில் நடத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

## தடைநீக்கம் இல்லை! இடை நிறுத்தி வைக்க முடிவு?

பேச்சவார்த்தை நடைபெறும் தருணத்தில் விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசாங்கம் இடைநிறுத்தி வைக்குமென அதிகாரபூர்வமான வட்டாரங்கள் தெரிவித்தன. தடையை முழுமையாக நீக்குவதா? அல்லது இடைநிறுத்தி வைப்பதா? என்பது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்யுமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று மாதங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெரிவித்திருந்தார். தடையை அகற்றுவது தொடர்பாக பிரதமருக்கும் சட்டமாஅதிபருக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து தடையைத் தற்காலிகமாகப் பேச்சுவார்த்தை வேளையில் இடைநிறுத்தி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வெசாப் பண்டிகைக்குப் பின் தடை நீக்கம் அமுலுக்கு வரலாம்.

உங்கள் அறிவித்தல்கள் ஈழநாட்டில் பிரசுரமாவதன் மூலம் ஐரோப்பா, அவுஸ்திரேலியா, யாழ்ப்பாணம், கொழும்பைச் சென்றடைகின்றது.

## கடற்படையினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு மட்டுநகர் பா.உ ஜோசப் பரராசசிங்கம் வலியுறுத்து!

மட்டக்களப்பு வாகரை கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை ஸ்ரீலங்கா கடற் படையினரால் அப்பாவி மீனவர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதல்கள் திட்டமிட்டு சமாதான முயற்சிகளையும் தற போது நடை முறையில் உள்ள போர் நிறுத்தத்தையும் குழப்பும் ஒரு செயலாகும்.

இத் தாக்குதலை நடத்திய கடற்படையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் இரு முஸ்லிம் மீனவர்கள் பலியானதுடன் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற வருகிறார்.

இதே வேளை கடற்படை படகுகளில் இருந்து மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக 11 படகுகள் வாகரை பனிச்சங்கேணி கரை ஒதுங்கியுள்ளன.

இவற்றிலிருந்து 36 சிங்கள. முஸ்லிம். தமிழ் மீனவர்கள் விடுதலைப் புலிகளால் காப்பாற்றப்பட்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். இம் மீனவர்கள் கடல் அட்டை பிடிப்பதற்காக புத்தளப் பிரதேசத்திலிருந்து வந்தவர்களாகும்.

அரசும் - புலிகளும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் வடகிழக்கில் மட்டுமின்றி நாடு பூராக வும் சமாதான சூழலும் சகஜ நிலையும் ஏற்பட்டு வருகின்றது.

இதன் காரணமாகவே மீனவர்கள் கடற்பரப்பில் சுதந்திரமாக நடமாட முடிகின்றது. இந்த நல்ல சூழல் காரணமாக தினமும் ஆயிரக் கணக்கான சிங்கள மக்கள் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்கின்றனர்.

இப்படியான நல்ல சூழ்நிலையை கடற்படையினர் குழப்பும் முயற்சி இதுவாகும் என்றும் ஜோசப் பரராசசிங்கம் பா.உ மேலும் தெரிவித்துள்ளார்.



BUYING – SELLING

NADA G. NADARAJAH B.V.Se
*Sales Representative*
*Gold Award Winner 2000*

Bus: (416) 293-5093
Fax: (416) 293-5237
Res: (905) 472-8703

- வீடுகள் வாங்க அல்லது விற்க,
- அதற்கான இலவச ஆலோசனைகள் பெற்றிட,
- குறைவான வட்டி விகிதத்தில் அடமான ஒழுங்குகள் செய்திட

இன்றே அழையுங்கள்

நடா. ஜி. நடராசா

HOMELIFE
HomeLife Metro Realty Inc.
*Real Estate Broker*
5200 Finch Ave. East, Suite 206, Scarborough, ON M1S 4Z4

1992 மே மாதம் 14 ஆம் திகதி புலிகள் இயக்கத்தை இந்திய அரசாங்கம் தடை செய்து அடுத்த மாதத்துடன் பத்து வருடங்கள் ஆகின்றது.

இந்தத் தடைக்குப் பின்னர் தான் இலங்கையிலும் அவ்வியக்கத்தைத் தடைசெய்ய வேண்டும் என அன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவிடம் பலர் வேண்டுகோள் விடுத்தனர். அதற்கு அவர் கொடுத்த பதில் என்ன தெரியுமா?

லையும் ஜனாதிபதித் தேர்தலையும் நடத்துவதற்கான இடைக்கால நிருவாகமொன்றை ஏற்படுத்தினால் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருவோமென ஜே.வி.பி. நிபந்தனை விதித்தது. இதனைச் செய்யத் தான் தயார் என்றும் ஆனால் பொது அரசியலில் ஈடுபடுவோம் என ஜே.வி.பி. பகிரங்கமாக அறிக்கை விட வேண்டுமென்றும் ஜே.ஆர் சொன்னார். ஆனால் அவர்கள் இதற்குப் பதிலளிக்காது தமது ஆயுத கலாச்சாரத்தைத் தொடர்ந்தனர்.

செய்யப்பட்டனர். தலதா மாளிகை தாக்கப்பட்டது. பிக்குமார் கொலை செய்யப்பட்டனர். இறுதியில் ஜே.வி.பி.யிலும் அனைவரும் பலியிடப்பட்டு இருந்த கடைசி உறுப்பினரும் வெளிநாடு சென்ற பின்னர் நான்கு வருடங்களுக்குப் பின்னரே அரசியல் பொது வாழ்வில் நுழைந்தனர்.

இது போன்றதொரு நிலைமையில் இருந்த ஜே.வி.பி. இன்று புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படக்கூடாது. அவர்கள் ஆயுத

க்கு வரவும் இல்லை. அதன் தலைவர் பகிரங்கமாக வெளியே வரவுமில்லை. ஆனால் புலிகள் இயக்கம் தம் மீதான தடை நீக்கப் பட்டால் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி வடகிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வு காண விருப்பம் கொண்டுள்ளது. அதற்கு முன்னோடியாக இன்று அவர்கள் காட்டிலிருந்து வெளியே வந்துள்ளனர்.

புலிகள் இயக்கத்தைப் போன்று நாட்டில் அழிவுகளைச் செய்த ஜே.வி.பி.யின்

# தடை நீக்கப்பட்ட பின்னரும் அரசியலுக்கு வர மறுத்த ஜே.வி.பி!



பின்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அவசர காலச்சட்டத்தை நீக்கி 2000 ஜே.வி.பி. உறுப்பினர்களையும் விடுதலை செய்ததோடு அவர்கள் அரசியலுக்கு வருவார்களானால் பாராளுமன்றத் தேசியப் பட்டியலில் உறுப்பினர் பதவிகளை வழங்கவும், எந்த இடத்திலும் பேச்சுக்களை நடத்தத் தயாரென்றும் அறிவித்தார். ஆனால் அதற்கும் ஜே.வி.பி. கட்டுப்படவில்லை. தொடர்ந்தும் ஆயுதங்களை ஏந்தியது.

ஆயுதங்களை எந்த நிபந்தனை அடிப்படை

ங்களை கீழே வைக்க வேண்டும் என நிபந்தனைகளை விதிப்பது ஆச்சரியமான காரியமாகும்.

எமது இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளதால் பேச்சுக்கு வரமுடியாது. எந்த நிலையிலும் ஆயுதங்களை கீழே வைக்க மாட்டோம் என்று அன்று நிபந்தனை விதித்த உங்கள் கட்சி, பேச்சு ஆரம்பிக்க முன்னர் எம்மீதான தடை நீக்கப்படக் கூடாதுதென்றும் நாம் ஆயுதங்களை கீழெ வைக்க வேண்டுமென்றும் இன்று எமக்கு கட்டளையிடுவது எந்த

## சிங்களப் பத்திரிகையாளர் ஒருவரின் பார்வை

தடையை நீக்க முடிந்தது. இதைப் போல் ஏன் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்க முடியாது? என்பது தான் இன்று எம் மத்தியிலுள்ள கேள்வியாகும்.

(நன்றி லங்காதீப)

"நாம் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தாலும் அவர்கள் யுத்தம் செய்வதை

# தடை நீக்கப்பட முன்னரே அரசியலுக்கு வந்த புலிகள்

கைவிட மாட்டார்கள். யுத்தத்தை நிறுத்துவதற்கு நிச்சயம் புலிகள் இயக்கத்துடன் நாம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேயாக வேண்டும். தற்போது நாம் தடை செய்தால் ஏதேனும் விதத்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகும் போது அவர்கள் சொல்வார்கள் நாம் தடை செய்யப்பட்ட இயக்கம். எவ்வாறு கலந்து கொள்வதென்பார்கள்.

ஜே.வி.பி.யைப் பேச்சுக்கு அழைத்த போதும் அவர்கள் இவ்வாறு தான் தெரிவித்தனர். எனவே அந்த முட்டாள்தனமான காரியத்தை மீண்டும் செய்யத் தேவையில்லை.....? என்று தான் அன்றைய ஜனாதிபதி மறைந்த ரணசிங்க பிரேமதாசாவின் பதிலாக இருந்தது.

அவர் கூறியது உண்மை தான். அன்று தமக்கு எதிராகப் போடப்பட்ட தடையை சாக்காகக் காட்டித்தான் ஆயுதமேந்தினார்கள் ஜே.வி.பி.யினர். இவர்களோடு தடைசெய்யப் பட்ட சமசமாஜக்கட்சி இதனை செய்ய வில்லை. இறுதியில் ஜெயவர்த்தன பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். ஆனால் தம் மீதுள்ள தடையை நீக்கும் வரை பேச்சு வார்த்தைக்கு வர மாட்டோம் என்று பதிலளித்தனர் ஜே.வி.பி.யினர். பின்னர் லலித் அத்துலக்முதலியின் ஆலோசனைப்படி தடை நீக்கப்பட்டது. ஆனால் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை.

அரசாங்கத்தைக் கலைத்து, பொதுத்தேர்த

யிலும் கீழே வைப்பதில்லை என்ற நிலைப் பாட்டையே ஜே.வி.பி. கடைப்பிடித்தது. அன்று அவர்கள் எந்தவொரு அறிக்கையிலும் இது தொடர்பாக தெரிவித்திருக்கவில்லை.

ஏனெனில் முழுநாட்டையும் ஆயுத மூலம் ஆட்சி செய்யும் திட்டத்துடன் ஜே.வி.பி. அன்று இருந்ததே இதற்குக் காரணமாகும். ஆயுதங்களால் தாம் தாம் மேற்கொண்ட அழிவுகள் காரணமாய் தமக்கு ஏற்படவிருக்கும் பயங்கர நிலையையும் அவர்கள் உணர்ந்திருந்தனர்.

இது போன்றதொரு நிலைமையினாலேயே புலிகள் இயக்கமும் பொதுஜனநாயக அரசியலில் ஈடுபட இன்று காலம் தாழ்த்துகிறது. புலிகள் இயக்கம் காலம் தாழ்த்துவதைப் போல் அன்று ஜே.வி.பி.யும் பயந்தது. ஏன் புலிகள் செய்த அழிவுகளைப் போல் ஜே.வி.பி.யும் 1971 – 1988 வரை இந்நாட்டை அழிக்கவில்லை எனக் கூற முடியுமா?

நாட்டில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை அழிப்பதற்காக பாராளுமன்றத்திற்குள் குண்டெறிந்த கட்சியாகும் ஜே.வி.பி.

ஜனாதிபதி பிரேமதாசா, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரை கொலை செய்ய முயற்சித்த கட்சி ஜே.வி.பி.யாகும். மாற்று இயக்க உறுப்பினர்கள் கொலை

அடிப்படையில் நியாயம் ஆகுமென புலிகள் இயக்கத்தினர் ஜே.வி.பி.யிடம்கேள்வி கேட்கும் பட்சத்தில் இதற்கான பதிலை எப்படி அளிப்பது என்பதை அவர்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாது.

அன்று ஜே.வி.பி. துணிந்து செய்வதற்கு முன் வராத ஒன்றை அவர்களால் செய்ய முடியாது போனதை புலிகள் இயக்கத்தினர் செய்யப் போகின்றனர். செயல்வடிவம் கொடுக்கப் போகின்றனர். ஆயுதம் ஏந்திய தீவிரவாத வரலாற்றிற்கு உரிமை கூறும் பிரபாகரன் இன்று ஆயுத போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக அரசியலுக்கு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

ஆனால் அன்று விஜேவீரவுக்கோ, ஜே.வி.பி.க்கோ இந்த துணிச்சல் இருக்கவில்லை. ஆனால் இன்று பிரபாகரனும், புலிகள் இயக்கமும் அதனைச் செய்யப் போகிறது. அதற்காக இலங்கை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாத காரியங்களை பிரபாகரன் நிபந்தனைகளாக முன் வைக்கவில்லை.

அன்று அரசியலில் ஈடுபட்டஜே.வி.பி. முன் வைத்த நிபந்தனைகள் தற்போது நினைவிற்கு வருகிறது.

ஜே.வி.பி.யின் அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்ற அன்று இலங்கை அரசாங்கம் முன்வந்த போதும் ஜே.வி.பி. அரசியலு

## பிரபாகரன் பொறுப்பில் திருமலை இருந்தால்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்த தீர்வு குறித்த இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாசைகளை இந்தியா உள்வாங்கிக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

மாநில, மத்திய ஆட்சி முறைகள் இந்தியாவில் நடையில் இருக்கின்ற நிலைமையில் பிரிவினைக்கான சாத்தியம் குறித்து செய்திகளை விடுப்பது இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுவாரஸ்யமான புதிராகும் என்றும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

## தலையிடாக் கொள்கையும் மறைமுக அழுத்தமும்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது. எனவே தாய்லாந்தில் நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தைகள் தொடர்பான விபரங்களை இந்தியாவால் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனால் தான் தாய்லாந்துப் பேச்சுக்களுக்கு இந்தியா உடனடியாகவே ஆதரவித்ததாகத் தெரிகின்றது.


WEXFORD CASH MART
FINANCIAL SERVICES
• MONEY TRANSFER (WORLDWIDE) • CHEQUES CASHED
பணமாற்றுச் சேவையில் ஒரு புதிய அலை
தொடர்புகளுக்கு கணேசமூர்த்தி
1823A Lawrence Ave. East, Scarborough, ON M1R 2Y3
TEL: (416) 285-7709 • FAX: (416) 752-1548

கொழும்பு, யாழ் மாவட்டம் முழுவதும் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம்.
மற்றும் வன்னி மாவட்டம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், புதுக்குடியிருப்பு மல்லாவிக்கும் எமது சேவை

உங்கள் பணம் உங்கள் உறவினரிடம் உயர்ந்த பெறுமதியில் ஒப்படைக்கப்படும்

• தன்னிகரற்ற சேவை
• நம்பமுடியாத சேவை
• ஒப்பற்ற சேவை
• இணையற்ற சேவை

MONEY ORDER
வசதி உண்டு

WESTERN UNION AGENCY
10 நிமிடத்தில் உலகின் எப்பாகத்திற்கும் பணம் அனுப்பலாம்

தொலைபேசி, மின் அஞ்சல், தொலைநகல் எமக்குத் துணை செய்வதில்லை. காடு, மேடு, கானகம் கடந்த சேவை. போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களில் வாழும் உங்கள் உறவினர் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம். பணம் கொடுத்த பின் பதில் பெற்றுத் தருகின்றோம்.

# மாபெரும் திறப்பு விழா

AYNGARAN

# AYNGARAN VIDEO

மே 12ஆம் திகதி
ஞாயிற்றுக்கிழமை, காலை 10 மணிக்கு

புரட்சிக் கலைஞர்

## திரு. விஜயகாந்த்

அவர்கள் திறந்து வைக்கின்றார்கள்

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

**416 266 5566**

## ஐங்கரன் வீடியோ

ORIGINAL Only HOME VIDEO

RAINBOW VILLAGE
Eglinton & Midland

ORIGINAL Only HOME VIDEO

**2466** Eglinton Avenue East, Scarborough ON M1K 5J8




# CIA - RAW கழுகுப் பார்வையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்

தமிழ்தேசியத்துக்கான விடுதலைப் போராட்டம் முன் எப்போதும் இல்லாதவாறு ஒருமுக்கியமான கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றது.

இந்த வேளையில் தமிழ்மக்களின் அனைத்து நகர்வுகளும் உள்நாட்டு மற்றும் சர்வதேச உளவு நிறுவனங்களின் முழுமையான கவனத்துக்கு உள்ளாகி வருகின்றன.

அமெரிக்கா தலைமையில் மேற்குலக நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று பிரகடனம் செய்து. சர்வதேச மட்டத்தில் விடுதலை இயக்கங்கள் மீது ஒரு யுத்தக்கெடுபிடியை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன. பயங்கரவாதிகள் பட்டியலில் விடுதலைப்புலிகளையும் அந்த நாடுகள் சேர்த்துள்ளன.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ.யின் கழுகுப் பார்வை மட்டுமல்ல இந்திய உளவு அமைப்பான றோவின் பார்வையும் புலிகளை நோக்கி முழுவீச்சுடன் திரும்பி இருப்பதாக நம்பபபடுகின்றது.

வெளிநாட்டு உளவு அமைப்புக்களின் ஊடுருவல்கள், அச்சுறுத்தல்கள் எமது சமூகத்தில் இருந்து வரும் இந்தக் காலகட்டத்தில் அப்படியான ஊடுருவல்கள் எந்த வடிவில் ஏற்படலாம் என்கிற தெளிவு ஓரளவாவது எமது மக்களுக்கு இருப்பது அவசியம்.

தமிழ் விடுதலை இயக்கங்கள் போராட்டத்தில் ஓரளவு வளர்ச்சி அடைந்து வந்த காலங்களிலேயே வெளிநாட்டு உளவு அமைப்புக்களின் ஊடுருவல்கள், அச்சுறுத்தல்கள் இலங்கையில் இருந்து வந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழத்தமிழ்மக்களின் இயக்கங்கள் தமிழ நாட்டைத் தளமாகக் கொண்டு இலங்கை அரசுக்கு எதிராகப் போராடி வந்த 80களில் சி.ஐ.ஏ.யின் ஊடுருவல் முயற்சிகள் பல்வேறு வடிவங்களில் இருந்து வந்தன.

தமிழீழ விடுதலைக்காகப் போராடி வந்த தமிழ் அமைப்புக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும், விடுதலையின் அவசியம் பற்றி ஆராய்வதற்கும் என்று கூறி 1984 இல் நியூயோர்க் நகரில் ஒரு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழீழ ஆதரவு மாநாடு ` என்ற பெயரில் அமெரிக்காவில் இருந்த ஈழத்தமிழர்கள் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஈழத்தமிழ் இயக்கங்களுக்கும் அமைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் கரங்களுக்குள் போராட்ட அமைப்புக்களைக் கொண்டு செல்லும் நோக்கத்துடனேயே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டதாக அப்பொழுது தமிழ்இயக்கங்கள் குற்றஞ்சாட்டி மாநாட்டைப் புறக்கணித்தன. இந்த மாநாட்டு ஏற்பாட்டாளர்களுள் முக்கியமான ஒருவரான டாக்டர் பஞ்சாட்சரம் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. யின் உளவாளி என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளும் தமிழ்இயக்கங்களின் சந்தேகத்தை உறுதி செய்வதாகவே அமைந்தன. இந்த மாநாட்டில் ஈழத்தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கு மற்றும் மலையகம் என்பவற்றுடன் இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டையும் உள்ளடக்கியதாக ஒரு தமிழர் தாயகம் அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றபட்டது.

அமெரிக்காவின் நடைபெற்ற இந்த மாநாடு அப்போது இந்தியாவில் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. தமிழீழப் பிரிவினை பற்றி இந்திய மக்களுக்கு ஓர் அச்சத்தை ஏற்படுத்த சி.ஐ.ஏ. கையாண்ட தந்திரம் என்று அப்போது விமர்சிக்கப்பட்டது.

இதே போன்று 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் திகதி சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் குண்டொன்று வெடித்து 30க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ இராணுவம் இந்தக் குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்டிருந்ததாக அப்பொழுது நம்பப்பட்டது.

அதேவேளை மீனம்பாக்கம் குண்டு வெடிப்பு சி.ஐ.ஏ. யின் சதி, தமிழ்நாட்டு மக்களுக்கும் ஈழப் போராளிகளுக்கும் இடையே விரிசலைத் தூண்டும் முயற்சி என்று சென்னையிலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இவ்வாறு தமிழ் இயக்கங்களுக்குள் ஊடுருவுவதற்கும் தமிழ்இயக்கங்களைத் திசை திருப்புவதற்கும் சி.ஐ.ஏ.யினால் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன என்று அப்பொழுது செய்திகள் வெளியாகி இருந்தன.

அதே போன்று அக்காலத்தில் விடுதலை இயக்கங்களுடன் நெருக்கமாக இருந்த பல முக்கியஸ்தர்களையும் படிப்படியாக சி.ஐ.ஏ. உள்வாங்கியிருந்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன. தந்தை செல்வாவின் மகனான சந்திரகாசன் ஒரு சி.ஐ.ஏ உளவாளி என்று 85 இன் பிற பகுதியில் செய்தி வெளியாகியிருந்தது. ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இயக்கங்களை ஒன்றிணைத்து முக்கிய போராட்டச் சக்தியான புலிகள் அமைப்பை தனிமைப்படுத்த இவர் சதி செய்தார் என்று இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இதே போன்று தமிழ்நாட்டில் தமிழ் இயக்கங்களுக்கு ஆயுத பயிற்சி வழங்கி வந்த இந்திய ஆய்வு பகுப்பாய்வுப் பிரிவு (றோ) தமிழ் இயக்கங்களுடனானதனது தொடர்புகளுக்கு உன்னிகிருஷ்ணன் என்ற அதிகாரியை நியமித்திருந்தது. இவர் இயக்கங்களுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டு இயக்க நடவடிக்கைகளுக்குப் பலவிதமான ஆலோசனைகளை வழங்கி வந்தார். பின்னாளில் இந்த அதிகாரிக்கும் சி.ஐ.ஏ. நிறுவனத்துக்கும் இடையில் தொடர்பிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இந்திய அரசால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இலங்கையின் சட்டர்டே ரிவ்யூ பத்திரிகையின் ஆசிரியர் சிவநாயகத்தையும் சி.ஐ.ஏ.யுடன் தொடர்புபடுத்தி இந்தியாவின் 'முற்போக்குப் பத்திரிகையான பிளிட்ஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகை முன்பு செய்தி வெளியிட்டிருந்தது. தமிழ்இயக்கங்களுக்குள் ஊடுருவுவதற்கு கடந்த காலங்களில் சி.ஐ.ஏ. கையாண்ட அணுகுமுறைகள், தந்திரங்கள் என்பன பற்றி வெளியாகி இருந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டே தற்காலத்து ஊடுருவல் களுக்கான சாத்தியங்கள் பற்றி கணிப்பிடக் கூடியதாக இருக்கின்றது. எனவே அந்நிய சக்திகளின் ஊடுருவல்கள் பற்றிய தெளிவும் எச்சரிக்கை உணர்வும் தமிழர்களுக்கு இருப்பது இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் அவசியமானதொன்றாகும். (நன்றி - சுடரொளி)

# என் ஆங்கிலம் கருணாநிதிக்கு புரியவில்லை என்கிறார் ஜெயலலிதா

## ஆங்கில மேதைக்கு அன்னைத் தமிழ் விளங்காது எனக் கலைஞர் கிண்டல்

1995 ஆம் ஆண்டு தமது ஆட்சியின் போது தான் சட்டப் பல்கலைக்கழகத்துக்கான சட்ட முன் வரைவு தாக்கல் செய்யப்பட்டது என்று முதல்வர் ஜெயலலிதா விளக்கமளித்துள்ளார்.

தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையில் கடந்தவாரம் கேள்வி நேரம் முடிந்ததும் பார்வர்ட் பிளக் உறுப்பினர் சந்தானம் எழுந்து ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்பியப் பேசியதாவது

சென்னையில் செயற்பட்டு வரும் சட்டக்கல்லூரி 1891 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மிகப் பழமையான கல்லூரியாகும். தமிழ்நாட்டிலுள்ள வழக்கறிஞர்களும் மாணவர்களும் சட்டக் கல்விக்காக தனிப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உருவாவதற்கான கருத்து எப்போது மேற் கொள்ளப்பட்டது என்பதை அரசு விளக்க வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்த ஜெயலலிதா அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தி.மு.க. ஆட்சியில் தான் அமைக்கப்பட்டது என்று கருணாநிதி கூறிவருகிறார். அதனால் தான் உறுப்பினர் சந்தானம் கேள்வி எழுப்பியிருக்கிறார். கடந்த 19 ஆம் திகதியன்று நடைபெற்ற அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் நான் இது பற்றிக் கூறிய சில கருத்துக்களைக் குறைகூறியும் கருணாநிதி அறிக்கை விடுத்துள்ளார்.



முதன்முதலாக தமிழ்நாட்டில் சட்டப் படிப்புக்காகப் பல்கலைக்கழகமொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற உயரிய எண்ணம் எந்த ஆட்சியில் உருவாகியது. அதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எப்போது எடுக்கப்பட்டன என்பதை இந்த அவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் என்னுடைய உரையை நான் ஆங்கிலத்தில் தான் நிகழ்த்தினேன். கருணாநிதி குறைகூறியிருக்கும் பகுதி ஆங்கிலத்தில் அமைந்திருந்தது.

என்னுடைய உரையில் முதன்முதலாக சட்டப்படிப்புக்கு என்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துக்கு வித்திட்டது 1995 ஆம் ஆண்டு நான் தமிழக முதல்வராக இருந்தபோது தான் என்பதையே உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். மேலும் அதனையடுத்து அந்த எண்ணத்தை ஈடேறச் செய்வதற்காக பின்னர் சட்டப் பல்கலைக்கழகச்சட்டம் நிறைவேற்றப்பட்டது என்று பொதுவாகத்தான் நான் என்னுடைய உரையில் கோடிட்டுக் காட்டினேன்.

சட்டப் பல்கலைக்கழகத்துக்கான சட்டம் என்னுடைய ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது என்று நான் என்னுடைய உரையில் குறிப்பிடவேயில்லை. ஆனால் கருணாநிதி நான் ஏதோ தவறான விபரங்களை என்னுடைய உரையில் கூறியிருப்பதாகச் சொல்லியிருப்பது அவருக்கு ஆங்கிலம் அந்தளவிற்குப் புரியவில்லை என்பதைத் தான் சுட்டிக் காட்டுகிறது. ஏனென்றால் பட்டமளிப்பு விழா உரையை ஆங்கிலத்தில் அல்லவா நிகழ்த்தினேன் என்றார்.

இதற்கு கலைஞர் கருணாநிதி பதிலளிக்கும் போது அம்பேத்கர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் அம்மையார் ஆங்கிலத்தில் பேசினாராம். அது எனக்குப் புரியாமல் மறுப்பறிக்கை வெளியிட்டதாகப் பேரவையில் கேலி பேசியிருக்கிறார். அவர் பேச்சில் சட்டப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த ஆண்டு பற்றிய பகுதியை சென்னையில் உள்ள ஆங்கில ஏடுகள் வெளியிடவில்லை.

இதோ தமிழ்த்தினசரி வெளியிட்ட அவரது பேச்சு

"சட்டப் படிப்புக்கு மட்டுமே ஆன ஒரு பல்கலைக்கழகம் 1995 ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என்று பெயரிடப்பட்ட அந்த பல்கலைக்கழகம் தான் இந்தியாவில் சட்டப் படிப்புக்கு என்று தனியாக அமைக்கப்பட்ட ஒரே பல்கலைக்கழகம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்"

ஆங்கில மேதைக்கு என் அன்னைத் தமிழ் புரியாதது ஆச்சரியமில்லை தான் என்றார் கலைஞர் கிண்டலாக.

ஜெயலலிதாவின் சட்டப் பேரவை உரையை தி.மு.க செயலாளர் பேராசிரியர் அன்பழகன் வன்மையாகக் கண்டித்து உரையாற்றினார். கலைஞர் 14 ஆண்டு காலம் தமிழக முதல்வராக இருந்தவர். அவருக்கு ஆங்கிலம் புரியும் என்றார்.




## ‘வடக்கு கிழக்கு பகுதிகள் தொடர்ந்தும் புறக்கணிப்பு’

வடக்கு -கிழக்கில் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து சிபார்சு செய்வதற்காக நிபுணர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை அமைக்கவேண்டும். வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு மிகக் குறைந்தளவு நிதி ஒதுக்கப்பட்டிருப்பது தமிழர்கள் தனித்து வாழ வேண்டும் என்று சிந்திப்பதற்கு இடமளிப்பதாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்திற்கான ஏ - 9 நெடுஞ்சாலை,யாழ்ப்பாணத்திற்கு திறக்கப்பட்டிருப்பதுடன் முடிவடைந்துவிடவில்லை.அது காங்கேசன்துறை துறைமுகம் வரை திறக்கப்பட நடவடிக்கை எடுக்கப் படவேண்டும். வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் வடக்கு - கிழக்கு புனரமைப்பிற்கு மிகக் குறைந்தளவில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதால் வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருக்கவேண்டும். ஆனால் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகவே வரவு செலவுத்திட்டத்தை ஆதரிப்பதென முடிவெடுத்தோம்.

**- தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பாராளுமன்றத்தில் தெரிவித்தது.**

## ‘பொங்கு தமிழ் தேவையேயில்லை இந்தச் சபையே எனக்குப் போதும்’

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றியும் விடுதலைப் புலிகளைப் பற்றியும் பேசுவதற்கு பொங்குதமிழ் நிகழ்சிக்குச் செல்ல வேண்டும் என்றில்லை. இந்தச் சபையே அதற்குப்போகும். சிங்கள மக்கள் தமது பிரதேசங்களை வயம்ப என்றும் ஜெயவர்த்தனபுர என்றும் பண்டைய பெயர்களால் அழைப்பதுபோல வடக்கு கிழக்கு மக்கள் தமது பகுதியை ஈழம் என அழைப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஈழத்தின் பாடல் பெற்ற இந்து ஸ்தலமான கதிர்காமம் இன்று முற்றுமுழுதாக பௌத்த வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்டுவிட்டது.இதனை மீண்டும் ஒரு இந்துத் தலமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.அரச தரப்பில் இருந்து கொண்டு கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஈழம் குறித்தும் பிரபாகரன் புலிகள் குறித்தும் நான் உரையாற்றியதாக ஜேவிபி கடுமையான குற்றச்சாட்டை முன் வைத்திருக்கின்றது.அதற்கான உரிமை ஜேவிபிக்கு இல்லை. அங்கு தெரிவித்த கருத்துக்களை இச்சபையில் தெரிவிக்கவும் நான் தயங்கமாட்டேன்.

**- கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையிலிருந்து**

## ‘எம்மிடம் இனவாதமே இல்லை இனவாதத்துக்கு நாங்கள் எண்ணெய் ஊற்றியதும் இல்லை’

இந்த அமைச்சுப் பதவி எனக்கு வழங்கப்பட்டிருப்பது குறித்து பெரிதும் திருப்தி அடைகிறேன். கடந்த ஆட்சியில் என்னைப் புலி என்றனர்.புலிகளின் ஒற்றன் என்றனர். இதனால் எனது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல முடியாதிருந்தது. மனைவி சந்தைக்குச் செல்லமுடியாதிருந்தது. ஆனாலும் நான் மனம் தளராமல் வெற்றி அடைந்திருக்கின்றேன்.யாழ்.குடாநாட்டைப் புனரமைப்பதே எனது பணி. தெற்கிலுள்ள சகல வசதிகளும் அந்தப் பகுதிகளுக்கும் செய்து கொடுக்கப்படும். அங்கு தமிழ் மக்களுக்கு அநியாயம் நிகழ இடமளியோம். சமாதான முயற்சிகள் நடைபெற்று வரும் இந்தவேளை, எதிர்க்கட்சிகள் இனவாதம் பேசுகின்றன. எம்மிடம் இனவாதம் இல்லை. ஒருபோதும் இனவாதத்துக்கு எண்ணெய் ஊற்றியதும் இல்லை. சிங்கள,தமிழ்,முஸ்லிம் மக்கள் முழு நாட்டிலும் சமத்துவமாக வாழும் நிலையை உருவாக்குவோம்.

**- புனர்வாழ்வு மீள்குடியமர்த்தல் அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தது.**

## ‘தனியான இராஜ்யத்தைப் புலிகள் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையில் அரசின் செயற்பாடுகள்’

நாட்டில் தனியானதொரு இராஜ்யத்தை விடுதலைப் புலிகள் அமைப்பதை ஊக்குவித்து அங்கீகரிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் நடைபெற்று வரும் செயற்பாடுகள் இவற்றைத் தெளிவாகவே காட்டுகின்றன. விடுதலைப் புலிகளுக்கு அனுசரணையாக அரசாங்கம் செயற்பட ஆரம்பித்திருப்பது இந்த நாட்டின் விதியின் ஒரு விளையாட்டு. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் என்ற போர்வையில் நோர்வே நாட்டின் ஒரு ஓய்வு பெற்ற படை அதிகாரியை இந்த நாட்டின் ஆள்புலங்களை ஆள்வதற்கு அனுமதித்திருப்பது நாட்டின் இறைமையைக் களங்கம் செய்திருக்கின்றது. மத்திய கிழக்கில் நோர்வேயின் தலையீடு அங்கு நெருக்கடியை எப்படித் தீவிரப்படுத்தியதோ அதே போலத் தான் இலங்கையிலும் நோர்வேயின் தலையீடு நெருக்கடியைத் தீவிரப்படுத்தப்போகின்றது.

**- பொ.ஜ.மு. பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் தெரிவித்தது.**

## ‘சுயநிர்ணய உரிமை தொடர்பான விடுதலைப் புலிகளின் கருத்துமிகவும் தெளிவாக இருக்கின்றது’

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு மிகவும் தெளிவாக இருக்கின்றது. சுயநிர்ணயம் என்பது ஒரே நாட்டுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது என்று பிரபாகரன் தனது பத்திரிகையாளர் மாநாட்டில் ஏற்றுக்கொண்டுள்ளார். இது வரவேற்கத்தக்க ஒரு விடயம். பிரபாகரனின் கருத்துப்படி ஒரே நாட்டுக்குள் அதிகாரம் பரவலாக்கப்படல் வேண்டும். இதன்படி இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுவது பற்றி பிரபாகரன் கூறியிருக்கின்றார். அதிகாரப் பரவலாக்கத்துக்கு அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தம் போதுமானது அல்ல. இது பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். தனிநாடு என்ற கோரிக்கையைத் தவிர வேறு எந்தவொரு விடயம் பற்றியும் பேசத் தயார் என்று பிரதமர் ஏற்கனவே கூறியிருக்கின்றார். தாய்லாந்தில் பேச்சு நடக்கும் போது இடைக்கால நிர்வாகம் பற்றிக் கலந்தாலோசிக்கப்படும்.

**- அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும்போது தெரிவித்தது.**

## ‘வெடியோசையுடன் போன எமக்கு இன்று மங்கள வாத்தியத்துடன் வரவேற்பு’

தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணும்வகையில் கடந்த காலங்களில் கைச்சாத்தான ஒப்பந்தங்கள்யாவும் தோல்வியில் தான் முடிவடைந்தன. தற்போதைய ஒப்பந்தத்தின் வெற்றியானது மக்களின் எழுச்சியில் அவர்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் முகமாலையூடாக யாழ். மண்ணில் நாம் கால் பதித்தவேளை அங்கே எமக்கு எழுச்சிபூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழ்த்தேசியத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இதன் மூலம் உணர முடிந்தது. மனதில் கட்டி வளர்த்த தேசியத்தை நீங்கள் இன்று வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

இராணுவ ஆக்கிரமிப்பு இருந்த நேரம் வெடியோசைகளுடன் போன எம்மை இன்று மங்கள வாத்தியங்களுடன் நீங்கள் வரவேற்றிருக்கின்றீர்கள். கௌரவமான மக்கள் சக்தியாக நாம் இன்று வந்துள்ளோம். மக்கள் வேறு புலிகள் வேறு என்ற நிலையில்லாமல் மக்களும்புலிகளும் ஒன்று என்ற நிலையில் தான் நாம் இன்று வந்துள்ளோம். மங்கள வாத்தியம் முழங்க நாம் வரவேற்கப்பட்டதையிட்டு மாவீரர்களும் யுத்தத்தால் உயிரிழந்த எமது மக்களும் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள்.

**- யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற வரவேற்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர் இளம்பரிதி (ஆஞ்சநேயர்) தெரிவித்தது.**

# கடிக்க....

**வ**ன்னிப்பத்திரிகையாளர் மாநாட்டுக்கு எதற்கும் இல்லாத எதிர்பார்ப்பு கொழும்பிலும் சென்னையிலும் மட்டுமன்றி டில்லியிலும் காணப்பட்டது. மிகமிக முக்கிய தலைவரிலிருந்து சாதாரண தலைவர்கள் வரையில் அனைவரும் மாநாடு முழுவதையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அடுத்த கட்டத்தை நிர்ணயிப்பதற்கு இது அவசியம் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். நேரடி ஒளிபரப்பு தடை செய்யப்பட்டதால் நிகழ்வு முடிவடைந்த ஒரு சில மணி நேரத்துக்குள்ளேயே இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமன்றி சிங்கப்பூர் மலேஷியாவிலும் இந்நிகழ்வு முழுமையாக ஒளிபரப்பப்பட்டது.

**வ**ன்னிக்குச் சென்ற தமிழ் எம்.பி.க்கள் பெருமளவுக்குதிருப்தியுடன் இருக்கின்றார்களாம். அவர்களது நடவடிக்கைகள் குறித்து வன்னியில் அதிகளவு அதிருப்தி தெரிவிக்கப்படவோ கட்டுப்பாடுகள் விதிக்கப்படவோ இல்லையாம். இருந்தாலும் இந்தச் சந்திப்பு அடிக்கடி நிகழும் எனக் கூறியிருப்பது தான் சற்றுக் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. வன்னிச் சந்திப்பில் நல்ல பிள்ளைப் பெயரை பெற்று விடவேண்டும் என்பதில் ஒவ்வொருவரும் தனித்தனியாக பகீரத முயற்சிகளை மேற்கொண்டார்களாம். யார் எப்படி என்பது தெரியாதவர்களா அவர்கள்? புலிகளை ஒழிப்பதே தமது வாழ்வின் இலட்சியம் என்பது போல கடந்த காலத்தில் செயற்பட்ட சிலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டது தான் வேடிக்கை.

**தொ**ண்டமானையும் சந்திரசேகரனையும் ஒரே தினத்தில் வருமாறு தான் வன்னியிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தொண்டா குழுவினரோ சந்திரனை ‘கட்’ பண்ணிவிட்டுதனியாக உலங்கு வானூர்தி ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டு தலைவரைச் சந்தித்துவிட்டு வந்துவிட்டார்கள். சந்திரன் குழுவினர் பின்னர் தனியாகச் செல்லவேண்டியிருந்தது. பேசியது ஒரே பிரச்னை பற்றித்தான். ஒன்றாகவே போய் ஒன்றாகவே வருவதற்கு ஒரே அமைச்சரவையிலுள்ள ஒரே பகுதியைக் பிரதிநிதித்துவப்படுத்தும் இருவரால் முடியாமல் போய்விட்டது.எப்படித் தான் இவர்களால் ஒற்றுமை பற்றிப் பேச முடிகின்றதோ தெரியவில்லை?

**வ**ன்னிப் பத்திரிகையாளர் மாநாட்டுக்குப் பின்னர் அம்மணியின் தொனியும் மாறிவிட்டது.அதனை வரவேற்ற அவர் பிரபாகரனை நாம் ஊக்குவிக்கவேண்டும் எனவும் சொல்லியிருக்கின்றார். காற்று ஒரு பக்கத்தில் அடிக்க அதற்கு எதிர்த்திசையில் செல்ல முற்பட்ட அம்மையார் இப்போது காற்றடிக்கும் பக்கத்துக்கே சாய்ந்து கொள்வது தான் நல்லது என்ற உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டார்போலுள்ளது. உள்ளூர்மக்களின் மனோநிலை, சர்வதேச நிலைப்பாடு அனைத்தையும் கணித்துத் தான் கருத்து வெளியிடவேண்டும் என அவரது ஆலோசகர்கள் தெரிவித்துவிட்டார்கள் போலும்.

**வ**ன்னிக்குச் சென்ற பத்திரிகையாளர்கள் பெரும்பாலானவர்களுக்கு பெரும் ஏமாற்றமாம்.பத்திரிகையாளர் மாநாட்டால் அல்ல.அதன் பின்னர் தலைவர் தம்முடன் நின்று படம் பிடித்துக் கொள்ளவில்லை என்பது பலருக்கு குறிப்பாக சிங்களப் பத்திரிகையாளர்களுக்கு பலத்த ஆதங்கமாம். கொழும்பு வந்த பின்னர் இனவாதத்தைக் கக்குவது வன்னி போனவுடன் தமிழர்களுடன் நெருக்கமான உறவை விரும்புவது போலக் காட்டிக்கொள்வது . இது தான் சிங்களப் பத்திரிகையாளர்கள் சிலருடைய வழமையாகிவிட்டது.

# ....கடிக்க

# குஜராத் வன்முறைப் பிடியில் பாஜக

குஜராத்தில் ஏற்பட்ட மதக்கலவரம் தொடர்பாக பாஜக முதலமைச்சர் நரேந்திர மோடி பதவி விலகவேண்டும் என்று காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகள் போர்க் கொடி தூக்கியுள்ளன. ஆனால் இந்தக் கோரிக்கையை பாஜக தரப்பு மறுத்து விட்டது.

''ஒரு மாதத்துக்கு மேலாக குஜராத்தில் எரியும் கலவரத் தீயில் எண்ணெய் ஊற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மோடி, முதல்வராக நீடிக்கும் தகுதியை இழந்து விட்டார் '' என்று ஜனநாயக சக்திகள் பலர் கூறி வந்தனர். ஆனால் முதல்வரைப் பாதுகாப்பதில் பாஜக தரப்பு உறுதியாகவே இருக்கின்றது. மோடிக்கு ஆர்எஸ்எஸ் மட்டத்தில் பெரும் ஆதரவு உண்டு.

பொதுவில் மோடியை காங்கிரஸ் இடது சாரிகள் உள்ளிட்டவை எதிர்ப்பது எதிர் பார்த்தது தான். ஆனால் திரிணாமூல் காங்கிரஸ், ஜனசக்தி, ஜனதா தளம் போன்ற பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகள் கூட மோடியை பதவியில் இருந்து நீக்கவேண்டு மென்று குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த எதிர்ப்பின் இன்னொரு கட்டமாக பாஜக அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தெரிவித்து வரும் தெலுங்குதேசம், மோடியை நீக்காவிட்டால் ஜனநாயகத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள்; மதச்சார்பற்ற கொள்கை தோற்கடிக்கப்பட்டு விடும் என்று பாஜ க வுக்கு எச்சரித்தது.

மேலும் தெலுங்கு தேசம் இன்னும் ஒரு படி மேலே சென்று வாஜ்பாய் அரசுக்குத்



தெரிவித்து வரும் ஆதரவை வாபஸ் பெறப் போவதாக அறிவித்தது. கோவாவில் பாஜக வின் தேசிய நிர்வாகக்குழுக்கூட்டம் நடைபெறும் போது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்ற கூட்டணிக் கட்சிகளின் வற்புறுத்தல்கள் பாஜக அரசுக்கு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தி உள்ளது.

இருப்பினும் பாஜக தலைமை எதிர்க் கட்சிகள் கூட்டணிக்கட்சிகள் தரப்பில் வரும் எதிர்ப்புக்களையும் மீறி பேரவை யைக் கலைத்துவிட்டு தேர்தலைச் சந்திக்க மோடிக்கு உத்தரவிட்டிருக்கின்றது.

இந்நிலையில் தெலுங்கு தேசம் அரசுக்கு அளித்துவரும் தனது ஆதரவை வாபஸ் பெறுமென கடந்த ஞாயிறு இரவு வரை எதிர்பார்க்கப்பட்டது. தெலுங்கு தேசத்தின் இந்த முடிவுக்கு தேசியவாத காங்கிரஸ், திரிணாமூல் காங்கிரஸ் உள்ளிட்டவை கூட ஆதரவு தெரிவித்திருந்தன. தெலுங்கு தேசம் கட்சி ஆதரவை வாபஸ் பெற்றாலும் வாஜ்பாய் அரசுக்கு ஆபத்து இல்லை என்று பாஜக தலைவர் கூறினார். ஆனால் அரசிய லில் முக்கிய மாற்றங்கள் நிகழ்வதற்கு வாய்ப்புக்கள் உருவாகிவிட்டது என்பது மட்டும் உண்மை.

ஞாயிறு இரவு வரை நடைபெற்ற தெலுங்கு தேசம் கட்சியின் முடிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வாஜ்பாய் அரசுக்கு அறிவித்து வரும் ஆதரவு தொடரும் என முடிவெடுத்துள்ளனர்.

மேலும் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை நீக்கத் தொடர்ந்து வற்புறுத்துவது என்று தீர்மானித்துள்ளனர்.

பாஜக வுக்கு நேர்ந்துள்ள நெருக்கடி இந்தக் கணம் ஒத்திப்போடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நெருக்கடிகளை எதிர் கொள்ளும் மனநிலைக்கு பாஜக தயாராக வேண்டிய நிர்ப்பந்தம் மட்டும் உண்மை.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் செயலற்றுப்போய்விட்டது எனக் காரணம் கூறி குஜராத் மாநில முதல்வராக இருந்த கேசுபாய் பட்டேல் பதவி நீக்கம் செய்யப் பெற்றார்.

நூற்றுக்கணக்கான மக்களைப் பலி கொண்ட மதக்கலவரத்தை அடக்க முடியாமல் திணறும் மோடியே மட்டும் பதவி நீக்கம் செய்யமாட்டோம் என பாஜக தரப்பு கூறி வருகின்றது.

இது பாஜக வின் இரட்டைத்தன்மையை புலப்படுத்துகின்றது.

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரை நாங்கள் நீக்கமாட்டோம்.



அவ்வாறு கோரிக்கை விடுக்கவும் மாட்டோம் என்று பாஜக தலைவர் கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். மோடி தானாக பதவியை ராஜிநாமா செய்வதாகக் கூறியபோது கூட அவரது முடிவை பாஜக தலைமை நிராகரித்துவிட்டது.

ஆக குஜராத் முதல்வர் விவகாரம் பாஜக வுக்கு பலத்த நெருக்கடியை கொடுக்கப் போகின்றது. மதக் கலவரத்தால் ஏற்பட்ட உணர்வுகளைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறது பாஜக. இந்த வாக்கு வங்கி முழுதும் தனக்கு சாதகமாக கிடைக்கும் என்று கணிப்பீடு செய்துள்ளது. இதனால் தான் முதல்வர் பதவியில் மோடி இருக்கவேண்டு மென்பதிலும் பாஜக குறியாக உள்ளது.

எவ்வாறாயினும் பாஜக சமீபத்தில் சந்திக்க நேர்ந்துள்ள நெருக்கடிகள் சரிவுகள் என்பன யதார்த்தமாகிவிட்டன. எந்த ரூபத்தில் எந்த வடிவில் ஆபத்து வரும் என்பதை ஒவ்வொரு கணமும் பாஜக கணிப்பிட்டு முன்னேற வேண்டியுள்ளது. ஆனால் இவற்றை யெல்லாம் மீறி வரலாறு சோகமாகவும் செல்லும்.

# காங்கிரஸ், பா.ஜ.க.: வீழ்ச்சியின் மாற்றம்

இந்திய அரசியலில் நேரு, இந்திரா, ராஜீவ், சோனியா என்ற குடும்ப அரசியல் காங்கிரசின் ஆதாரத்தளமாகவே இருந்து வருகின்றது. ராஜீவ் மறைவுக்குப் பின்னர் 'காங்கிரஸ் செல்வாக்கு குறைந்துவிட்டது. 'காங்கிர சுக்கே எதிர்காலம் இல்லை' என்றெல்லாம் ஆருடங்கள் கூறப்பட்டன.

இந்த ஆருடங்கள் உண்மையானது போல் பாஜக அரசியலில் தீர்க்கமான பாத்திரம் ஆற்றக்கூடியவாறு குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்தது.

மத்தியில் பாஜக தலைமை ஏற்பட்டது. காங்கிரஸ் மிக மோசமான வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருந்தது.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் நடந்த தேர்தலில் பாஜக பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்நிலைமையை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் டில்லி மாநகராட்சித் தேர்தலில் மிக மோசமான படு தோல்வியை பாஜக சந்தித்துள்ளது.

134 வார்டுகளைக் கொண்ட மாநகராட்சியில் வெறும் 15 வார்டுகள் மட்டுமே பெற்றுள்ளது. 107 வார்டுகளில் அமோக வெற்றியை காங்கிரஸ் பெற்றுள்ளது.

ஆக மாநிலங்களில் நடந்த தேர்தல் டில்லி மாநகராட்சித் தேர்தல் போன்றவை. பாஜக வின் வீழ்ச்சி அத்தியாயத்தையே காட்டு கின்றன. இதைவிட அயோத்தி விவகாரம்



இந்துத்துவா போன்றவற்றால் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளுக்கிடையே கூட ஒருமித்த கருத்தை உருவாக்க முடியவில்லை.


பாஜக வின் பல நிலைப்பாடுகளுடன் கூட்டணிக் கட்சிகள் முரண்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் பாஜக தனது உறுதித்தன்மையை இழந்துவரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும் பாஜக வின் பொருளாதாரக் கொள்கைகள் கடுமையான நிதிநிலை அறிக்கை, சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வு போன்ற காரணங்கள் நடுத்தர வர்க்கத்தையும் ஏழை வர்க்கத்தையும் மிக மோசமாகவே பாதிப்புறச் செய்துள்ளது.

இவற்றுடன் சங்பரிவாரங்கள் வெளிப் படுத்தும் வகுப்புவாதக் கொள்கைகள், குஜராத் போன்ற மிக மோசமான சம்பவங்கள் யாவும் உள்நாட்டு அளவில் மிக மோசமான அரசியல் சூழலை உருவாக்கி வருகின்றன.

ஆர்எஸ்எஸ்., விஸ்வ இந்து பரிஷத் போன்ற இந்துத்துவ இயக்கங்களின் செயற்பாடுகள் கூட பாஜக வுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றன.

பாஜக வின் ஆட்சி இந்துத்துவா நலன் காக்கும் ஆட்சியாக மட்டுமே இருக்க வேண்டுமென இந்துத்துவ இயக்கங்கள் எதிர்பார்க்கின்றன. பெரும்பான்மை-சிறுபான்மை என்ற வகுப்புவாத



## இந்தியா

பிரச்னையை கிளப்பி அரசியல்செய்ய இந்துத்துவ இயக்கங்கள் தயாராகவே உள்ளன.

ஆட்சிக்காக கட்சி என்ற நிலையில் இருந்து கட்சிக்காக ஆட்சி என்ற கொள்கையில் பாஜக உறுதியாக இருக்கவேண்டும் என இந்துத்துவ இயக்கங்கள் வலியுறுத்து கின்றன.

ஆக பாஜக பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கத் தொடங்கிவிட்டது. இதனால் ஏற்படக்கூடிய அதிருப்தி பாஜக வுக்கான சரிவாக வளர்ந்து வருகின்றது. சமீபத்தில் தேர்தல் முடிவுகளும் இதனையே வெளிப்படுத்துகின்றது.

சரிவில் இருந்த காங்கிரஸ்கட்சி நிமிரத் தொடங்கியுள்ளது. இப்போதைய நிலவரப்படி 12 மாநிலங்களில் காங்கிரஸ் ஆளும் கட்சி.

பாஜக இனி இந்துத்துவ கொள்கை யைமட்டுமே நம்பி அரசியல் செய்யமுடியாது என்ற எளிய உண்மையைப் புரிந்து கொண்டால் தான் இந்த வீழ்ச்சியில் இருந்து பாஜக மீள முடியும்.

MARCHE
THURGA
444 Jean Talon Ave West
Montreal, Quebec
(514) 276-9262

இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, கரிபியன் மற்றும் கனடிய நாட்டு உணவுப் பொருட்களுக்கும் அதி துரித பணமாற்றுச் சேவைக்கும் வாரத்தில் 7 நாட்களும் சேவை ஆற்றும் ஸ்தாபனம்.
மார்ஷே துர்க்கா
இலவச விநியோகமும் செய்து தரப்படும்.

உங்கள் சகல வைபவங்களுக்கும் சிற்றுண்டி வகைகளையும் உணவு வகைகளையும் பதிவு செய்து பெற்றிட எம்மை அழையுங்கள்
மொமோய் வெதுப்பகம்
BOULANGERIE BAKERY
MOMOI
இலங்கை முறையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட
• பாண்
• பணிஸ்
• றொட்டி

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
6953 Victoria Ave., Montreal, QUE
(514) 736-1925

# பொல்லாத பொய்கள்



பொதுவாகவே பொய்களின் கலப்படம் எங்குமே காணப்படுவதுண்டு. பொய் சொல்லியே தமது வாழ்க்கையை ஓட்டுபவர்கள். இடைக்கிடையே தமது வசதிகளுக்காகப் பொய் சொல்லுபவர்கள்; பொய்யை மெய்யாக்க இன்னொரு பொய் சொல்லும் சாமார்த்தியசாலிகள் என்று நம்மைச் சுற்றியுள்ள உலகில் பொய்யர்களுக்கும் பஞ்சமே இருப்பதில்லை.

பர்மாவிலும் பொய் சொல்கிறார்கள். இங்கே பொய் சொல்பவர்களோ மேலிடத்தில் இருப்பவர். அதாவது ஆட்சியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் இராணுவ அதிகாரிகள்.

எதற்காகப் பொய் சொல்லவேண்டும்?

45 மில்லியன் வரையிலான ஜனத்தொகை கொண்ட பர்மாவில் 1999 இன் முடிவில் எடுத்த ஒரு கணக்கெடுப்பின்படி 530,000 பேருக்கு எயிட்ஸ் நோய் இருக்கின்றது என ஐ.நா.சபை அறிவித்துள்ளது.

திடுக்கிட வைக்கின்ற இந்தப் புள்ளிவிபரம். ஆசியாக் கண்டத்தில் மிகவும் வறுமையான நாடுகளில் ஒன்றான பர்மாவில் மோசமான இந்த நிலை நீடித்தால் ஆபிரிக்க கண்டத்தில் உள்ள அபாயகரமான நிலை இங்கும் வர நீண்ட காலம் தேவைப்படாது என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள் அதிகா ரிகள்.

ஹெரோயின் விபச்சாரிகளுடன் கூடி களவில் தொழிலாளிகள் நாட்டை விட்டு வெளியேற எயிட்ஸ் ஏற்றுமதி செய்யும் நாடாக பர்மா மாறி வருகின்றது.

கல்வி, சுகாதார தேவைகளுக்காகச் செலவிடும் தொகையை விட இரண்டு மடங்கு அதிகமாக ஆயுதக் கொள்வனவிற்குப் பணத்தைச் செலவிடுகிறார்களாம் இராணுவ ஜெனரல்கள். (அமெரிக்கா கல்வி, சுகாதாரத்திற்காக ஆயுதக்கொள்வனவுத் தொகையை விட ஆறு மடங்கு அதிகமான தொகையைத் தன் பட்ஜட்டில் ஒதுக்கி வருகின்றது)

இங்குள்ள ஆண்களில் இரண்டு வீதமானவர்கள் மாத்திரமே உடலுறவின்போது ஆணுறைகளைப் பயன்படுத்தி வருகிறார்களாம். இதற்கான அடிப்படைக் காரணம் இங்கு ஆணுறைகளின் விலை அதிகம் என்பதும் தாராளமாகப் பாவனைக்கு கிடைப்பதுமில்லை என்பதுந்தான்.

இன்றைய கட்டத்தில் மிக அதிகளவு எயிட்ஸ் நோயாளிகளுடன் நடமாடும் சீனா, இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளின் எல்லைப்புற நாடாக பர்மா இருப்பதை இங்கே குறிப்பிட்டாகவேண்டும். தங்களுடன் இந்த எயிட்ஸ் விடயத்தில் பர்மா ஒத்துழைக்காததால் தாய்லாந்து தன் மனக்குமுறலை வெளிப்படுத்தி இருக்கின்றது. அதிகமான மேற்குலக நாடுகளுடனான ராஜதந்திர உறவுகள் கத்தரிக்கப்பட்ட நிலையில் இராணுவ ஆட்சியிலிருக்கும் பர்மாவிற்கு வெளிஉதவிகளும் மிக அரிதாகவே கிடைக்கின்றன.

கடந்த வருடம் 48,000 பேர் எயிட்ஸ் பீடிப்பால் பர்மாவில் இறந்திருக்கிறார்கள். இதன் காரணமாக 43,000 பிள்ளைகள் அனாதைகளாகியும் இருக்கிறார்கள்.

பர்மாவில் அப்படி ஒன்றும் பயப்படத்தக்க நிலை இல்லை என்று இப்பொழுது அறிக்கை விடுகிறார் இராணுவ ஜெனரல் ஒருவர்.

பொய்கள் போகாதவரை பொல்லாத இந்த எயிட்ஸ் இவர்களை விட்டுப் போகப்போவதில்லை.

## உலகம் ஒரு வலம்

சுவிஸ்-பாசல் நகரிலிருந்து
-ஏ. ஜே. ஞானேந்திரன்-

# ஊனத்திலும் உயர்ந்தவர்கள்



குறையில்லாமல் எவரால் தான் வாழ முடிகிறது?

ஏதோ ஒரு வடிவில் எம்மிடம் ஒரு குறை வந்து சேர்ந்து விடுகின்றது. இந்தக் குறை என்பது மனிதருக்கு மனிதர் வேறுபட்ட நிலையில், சிறிய பெரிய தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன. குறைவில் நிறைவு காண முற்படுபவர்கள் தொகை பெரிதாக இருப்பதுமில்லை.

ஊனம் இருந்தாலும் உயர வேண்டும். தடைக்கற்களைத் தகர்த்தெறிய வேண்டும் என்ற சிலரது மன உந்தல், பல ஜப்பானியர்களைக் கவர்ந்திழுக்க ஆரம்பித்திருக்கின்றது. ஊனப்பட்டு விட்டதால் மனம் சோர்ந்து விடாது தமது வாழ்க்கை நிகழ்வுகளை நூல்களாக்கி வெளியிட, அவற்றை ஆர்வத்தோடு படிக்கும் ஜப்பானியர்கள் தொகை என்றும் இல்லாதவாறு பெருகியுள்ளது.

'15 வயதிலும் உயிரோடு தான் இருக்கிறேன்' என்ற தலைப்பில் மியூக்கி இனோ என்ற 15 வயதுச் சிறுமி எழுதிய சுயசரிதை பலர் விரும்பிப் படிக்கும் புத்தகமாகி இருக்கின்றது.

எடை குறைவாகவே பிறந்த இந்தச் சிறுமிக்குப் பிறப்பிலேயே கண் பார்வை தெரியாது. தோல்வியை ஒப்புக் கொள்ளுவதற்கு மறுக்கும் தன் தாயுடன் நடாத்திய போராட்ட அனுபவம் பற்றியும் தாய் துவிச்சக்கர வண்டியில் தன்னை பாடசாலைக்கு ஏற்றிச் சென்றது பற்றியும் இந்நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

மனதைத் தொடும் இவரது அனுபவங்கள் நிஜமாகவே பல ஜப்பானியர்களது மனதைத் தொட்டிருக்கின்றது. 250,000 பிரதிகள் விற்பனையாகி இருக்கின்றன. இங்கு விற்பனையாகும் நூல்களில் விற்பனை அதிகமாகி முதலிடத்தையும் இந்நூல் பிடித்திருக்கின்றது. இதேபோல உடலால் ஊனப்பட்ட இன்னொருவரது நூலும் பெரிய அளவில் விற்பனையாகி இருக்கின்றது.

இப்படியான புத்தகங்கள் பெரிய அளவில் விற்பனையாவது இரண்டு வருடங்களுக்கு முன்பே ஆரம்பித்துவிட்டது.

இரண்டு கைகளையும் கால்களையும் இழந்த ஒரு பத்திரிகையாளரது நாவல் (எவருமே முழுமையானவர்கள் அல்ல) 4.75 மில்லியன் பிரதிகள் விற்பனையாகி பல கோடி மக்களை அழவும் வைத்திருக்கின்றது.

ஜப்பானில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதும் இதன் விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகி இருப்பதும் ஜப்பானியர்களிடையே பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. உடைந்த குடும்ப உறவுகள், முன்னேற முடியும் என்ற மனோதிடம் இழந்த மனோநிலைமை - இப்படியான ஒரு காலகட்டத்தில் இந்த வகையான புத்தகங்கள் ஒரு புதுப் பலத்தைஊட்டலாம் என்ற எண்ணம் பலரிடையே தொற்றியுள்ளது. இதன் விளைவாகவே இவர்கள் இப்படியான நூல்களை வாங்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

இனிப் புதுயுகம் பிறக்குமா இங்கே?

# முன்னேவரும் மூடுமந்திரங்கள்



சிலரை நம்மால் முற்றாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. இவர்கள் நடவடிக்கைகள் செய்கைகள் எப்பொழுதுமே புருவங்களை உயர்த்த வைத்து பெரும்பாலும் புதிர்களாகவே இருப்பதுண்டு. ஆனால் காலப்போக்கில் விளங்காத பல மர்மங்கள் விளங்க வரும்போது வேறுபட்ட செய்கைகளுக்கான அர்த்தங்களும் வெளியே வருகின்றன.

தன் ஆட்சிக்காலத்தின் இறுதிக்கட்ட நிகழ்வுகளை நூல் வடிவில் தந்திருக்கிறார் ருஷ்யாவின் மாஜி ஜனாதிபதி பொறிஸ் ஜெல்ற்சின். பல ருசிகரமான தகவல்கள் இந்நூலில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1996 இல் இவருக்குப் பெரியதொரு இருதய அதிர்ச்சி ஏற்பட்டதல்லவா? இதை வெளியே தெரியவிட்டால் தனக்கு வேண்டாத கம்யூனிஸக் கட்சித் தலைவர் சியூக்நவ் ஆட்சியைக் கைப்பற்றி விடுவசார் என்ற பயத்தில் இச்செய்தியை மூடுமந்திரமாக வைத்திருக்க உத்தரவிட்டிருந்தார் ஜெல்ற்சின். தொலைக்காட்சிகளில் மிகக் கவனமாக முன்பே திட்டமிட்டபடியே தான் செய்திகள் ஒளிபரப்பப்பட்டன. ஜூன் 1996 இல் ஜனாதிபதி தேர்வுக்கான இரண்டாவது சுற்றுத் தேர்தல் இடம் பெற்றிருந்த காலம் என்பதால் மிக ஜாக்கிரதையாகவே இவ்விடயம் கையாளப்பட்டதாக இவர் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தன்னைத் தேர்ந்தெடுத்த காலம் தொடக்கம் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று தான் பதவி விலகும் ராஜிநாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்த காலம் வரையிலான மர்ம நிகழ்வுகள் பல இங்கே தரப்பட்டுள்ளன.

'நடுச்சாம தினக்குறிப்புக்கள்' என்றே இந்நூலுக்குப் பெயர் இடப்பட்டுள்ளது.

தன்னைப் பற்றியும் தன் குடும்பத்தையும் பற்றியும் குறிப்பிட்ட இவர் பணம் கையாடியதாக முன்பு வந்த செய்திகளை மறுத்திருக்கிறார். தனது வங்கியில் உள்ள பணத்தின் தொகை வெறும் 383.00 டாலர் மாத்திரமே. அதுவும் தான் எழுதிய புத்தக உரிமையால் கிடைத்த பணமே இதில் கூடுதலான தொகை என்றும் இவர் குறிப்பிட்டிருக்கிறார். தன்னிடமுள்ள சொத்துக்களாக 1995 மாடல் பி.எம்.டபிள்யு

(28 ம் பக்கம் பார்க்க)

# பின்னடைவில் எதிர்கால பிரதமர்?



ஆள நினைப்பது எல்லோர் மனதிலும் தோன்றுவதில்லை. அப்படி ஆள முன்வந்தாலும் எல்லோராலும் ஏனையோரை தமது ஆளுகைக்குள் கொண்டு வரும் திறமையை வெளிப்படுத்த முடிவதில்லை. ஆளப்படும் பிரஜைகளுக்கும் ஆளுபவருக்குமிடையிலான சுமுக உறவுகளே ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முக்கிய காரணியாகி விடுகின்றது.

தாய்லாந்தின் பிரதமர் பதவியில் குறி வைத்திருக்கின்றார் தக்சின் ஷினவற்ரா என்பவர். இவருடைய வீட்டுப் பணியாள் ஒருவருக்கு ஆண்டு ஊதியமாக 6000 டாலர் கிடைக்கின்றது என்று கூறும்போது தக்சின் ஷினைவற்ரா எவ்வளவு தொகை பணத்திற்கு அதிபதியாக இருப்பார் என்பது உங்களுக்குச் சொல்லாமலேயே தெரியும். உலகிலேயே மிக அதிகமாகச் சம்பாதிக்கும் பணிப்பெண் இந்தக் கோடீஸ்வரர் வீட்டில் பணிபுரியும் இந்தப் பெண்மணி தான்.

எதிர்வரும் டிசம்பரில் இடம் பெறப்போகும் பொதுத்தேர்தலில் அனேகமாக இந்தக் கோடீஸ்வரர் வெல்வார். இவருக்குத் தான் தாய்லாந்தின் பிரதமர் பதவி என்று எல்லோரும் திடமாக நம்பி வந்தார்கள். ஆனால் இப்பொழுது இவரை ஊழலில் சம்பந்தப்படுத்தியிருப்பதால் நிலைமை பின்னடைவைக் கண்டிருக்கிறது.

51 வயதான இவர் அப்படி என்ன ஊழலில் சிக்கிக் கொண்டார்?

சீனாவிலிருந்து புலம் பெயர்ந்து குடியேறிய ஒருவரின் மகன் தான் இவர்.

இவர் ஒரு மாஜி பொலிஸ் உத்தியோத்தர். தன் அயராத முயற்சியினால் கேபிள் தொலைக்காட்சி, சற்றலைட் நடமாடும் தொலைபேசி போன்றவற்றின் வர்த்தகம் மூலம் பெரிய அளவில் பணம் சம்பாதித்து விட்ட வர்த்தகப் பிரமுகர் இவர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இவர் தொடக்கி வைத்த கட்சி மிகப் பிரபல்யமாகி 100 பேருக்கு மேற்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கவர்ந்து அரச கட்சியிலிருந்து அவர்களை விலக

(22 ம் பக்கம் பார்க்க)

THE CRISPY MOISTURIZED CHICKEN BY

CHESTER FRIED

AVAILABLE AT

**PHALAPPASS**

TAKE-OUT & CATERING

**416-614-9669**

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

**CHICKEN TO GO**
**416 248-5999**

நோர்த்யோக் நகரில் உன்னதமான உணவுகளுக்கு **பாலப்பாஸ்.**

ஈழத்தின் சுவைகாண, உணவுகளின் தரம் காண இன்றே நாடுங்கள் **பாலப்பாஸ்.**

உங்களுக்குத் தேவையான அன்றாட உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் என நாவிற்கு ருசியான உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளத் தயாராகுங்கள்

# பாலப்பாஸ்

| | |
|---|---|
| வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாடு (5 மரக்கறி, பாயாசம், அப்பளம், மோர்மிளகாயுடன்) | FRIDAY SPECIAL $ 4.99 |

பிரைட் பிஷ் - Fried Fish ............ $ 1.99

மாதாந்தச் சாப்பாடு SPECIAL - $ 299

100 இடியப்பம் சொதி சம்பலுடன் $ 10.00

சனி, ஞாயிறு தினங்களில்
நாவுக்கு ருசியூட்டும்
**கடலுணவுக்கூழ்**

குறிப்பிட்ட பகுதிகளுக்கு $25க்கு
மேற்பட்ட ஓடர்கள் நேரடி விநியோகம்
Lawrence/Bathurst முதல் Weston/Lawrence
வரையான பகுதிகளுக்கு நேரடி விநியோகம்

சிங்கப்பூர் நூடில்ஸ்
பாலப்பாஸ் ஸ்பெஷல் கடலுணவு **$ 5.99**

NORTH YORK தமிழ் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உட்பட சகல மங்களகரமான நிகழ்ச்சிகளையும் ஒரே கூரையின் கீழ் ஒழுங்கு செய்து உங்களின் எண்ணங்களை நிறைவேற்றத் தயாராகி விட்டோம்.

**பாலப்பாஸ்**
பார்ட்டி சேர்விஸ் அன்ட் கேற்றரிங்

**PHALAPPASS**

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

**(416) 614-9669**
**(416) 248-5999**

# MILLENNIUM LEISURE TRAVELS INC.




ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா,
வட-தென்-மத்திய அமெரிக்க நாடுகளிற்குக்
குறைந்த விலையில் சிறந்த சேவையுடன்
உங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எந்த ஐரோப்பிய நாட்டிற்கும் விமானச்சீட்டு
முதல் **EuroRail Pass, Rental Car** வரையில்
சிறந்த விலையில் வசதிசெய்து தரப்படும்

இலங்கையிலிருந்து கனடாவிற்கு மட்டுமல்ல,
வேறு எந்த நாடுகளிற்கும் பிரயாண
ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்படும்



**Florida, Cuba, Carribean**
நாடுகளுக்குக் குடும்பத்துடனோ தனியாகவோ
விடுமுறையைக் கழிக்க விரும்புகிறீர்களா?
நியாயமான விலையில் Package வசதிகள்,
Car Rentals, Cruise வசதிகளும்
அத்துடன் Disney World Tickets
அமெரிக்க டொலர் பெறுமதியைக் கனேடியன்
டொலரில் எம்மிடம் பெறலாம்

நாள்தோறும் எத்தனையோ விளம்பரங்களைப்
பார்க்கிறீர்கள். எங்களுடன் ஒருமுறை
தொடர்புகொண்டு உங்கள்
பயணத்தைத் தொடங்குங்கள்.

விலையிலும் தரத்திலும் சேவையிலும்
நீங்கள் மிகப்பெரிய
வித்தியாசத்தை உணர்வீர்கள்

பலவருட அனுபவம் கொண்ட எங்கள் பிரதிநிதிகளை
உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**108 Corporate Drive, Suite 8, Scarborough, ON M1H 3H9**

**TEL: (416) 431-9100 FAX: (416) 431-5722**

''அடியாத மாடு படியாது''
''அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார்''
எமது பள்ளிப் பருவத்தில் எங்களூரில் கேள்விப்பட்ட விஷயங்கள் இவை. பெரும்பாலும் - பள்ளிக்கூட வாத்தியாரிடம் அல்லது வீட்டில் அப்பா அம்மாவிடம் 'பூசை' பெறுவதற்கு முன் கேட்ட பல்லவி இது. பின் என்ன அனுபல்லவி; ஈற்றில் 'சரணம்' தான்.
எம்மை அடிப்பதில் வாத்தியார் இன்பம் காணவில்லை. காரணம்: வல்ல குருநாதன் எம்மை வருத்துவது கொல்லவல்ல; கொல்லவல்ல. பொல்லாக்குறைகள் நீக்க... என்பது எங்களுக்கு அப்போது தெரியும். எங்கள் ஊர் உலகம் உற்றார், உறவினர் அரசினர் அனைவருக்குமே தெரியும்.

கொண்டிருக்கிறீர்கள் என்று நான் கூறமாட்டேன். அப்படி நான் சொல்வது விலங்கு இனத்தையே நான் அவமதிப்பது போலாகும்'' என்று காரசாரமாக திட்டியிருக்கிறார்.
சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தெருக்களில் நிற்கும் கார்களை உடைத்துத் திருடிக்கொண்டு ஓடித்திரிதல் பல இளசுகளின் பொழுதுபோக்கு.
பள்ளிக்கூடப் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு அரசு வழங்கும் ஓசிப்பணத்தை சோஷலை எதிர்பார்த்துக் கொண்டு தலையை மொட்டை அடித்து காதில் ''கடுக்கன்'' மாட்டி வீடியோவாடகைகடைகள் முன்னும் உதைபந்தாட்ட மைதானங்கள் முன்னும் நின்று பொழுது போக்குகிறார்கள் பிரிட்டனின் கணிசமான இளைஞர்கள். இவர்கள் இப்படி நட்டுவாக்காலிகளாக



# பிரிட்டன் கோலங்கள்

விமல் சொக்கநாதன்

செலுத்தி வளர்ப்பது ஆசிய, இந்திய, இலங்கை, (மலேசிய, சிங்கப்பூர் இப்படி கிழக்குலக) பழக்கம்.
இங்கே பிரிட்டனிலோ கண்டிப்பும்



# பிள்ளைகளை அடித்து வளர்த்தால்...

# பெற்றோருக்குச் சிறை!

தெரியாமல் திகைத்து நிற்கிறார்கள்.
கடந்த வாரம் தன்னைக் கன்னத்தில் அறைந்த தந்தைக்கு எதிராக - பொலிசாரிடம் முறைப்பாடு சமர்ப்பித்தான் 12 வயது பிரிட்டிஷ் பையன் ஒருவன். உடனே பொலிசார் வந்து உடனடியாக அப்பாவைக் கைது செய்து 15 மணிநேரம் சிறைக்கூண்டில் அவமானப்படுத்தினார்கள். வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைத் திகதி வரும் வரை அப்பா குடும்பத்தை விட்டு வெளியே தங்கி வாழவேண்டும் என்று பொலிசார் உத்தரவிட்டார்கள். வழக்கு திகதி வந்தது.
பல்லாயிரம் பவுண் செலவில் - வழக்கறிஞர்கள் வாதாட சமூகசேவை ஊழியர்கள் சாட்சியமளித்த பின் தந்தை விடுதலை செய்யப்பட்டார். பிரிட்டனைக் கலக்கிய வழக்கு இது.
இப்போது மற்றுமோர் வழக்கு ஆரம்பமாகியிருக்கிறது.
வழக்குத் தொடர்ந்திருப்பவன் 11 வயதான பிரிட்டிஷ் பையன் ஒருவன். தன் அம்மாவின் புதிய கணவன் (வளர்ப்புத் தந்தை) தன்னை பிரம்பினால் அடித்ததாகவும் அரசாங்கம்

# அடிக்காமல் வளர்த்தால்..

# நாட்டுக்கே பேரழிவு!!

இதனால் தான் எம்மை அடித்துப் பாடம் சொல்லிக் கொடுத்த வாத்தியாரை அடித்து வளர்க்கும் எம் தாய் தந்தையரை நாம் நீதிமன்றத்துக்கு இழுத்தது கிடையாது.
அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து, அவர்கள் பொலிசாரால் சமூகசேவை ஊழியர்களால் துன்புறுத்தப்படும்படி செய்தது கிடையவே கிடையாது.
பிரிட்டனில் இன்று சிறுவர் சிறுமியர் மத்தியில் ஒழுங்கீனங்கள் அதிகரித்து விட்டன. நாளொரு வழக்கும் பொழுதொரு தண்டனையுமாக இளம் பராயத்தினர் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் தினமும் வந்தபடி இருக்கின்றன.
5 பையன்கள் வயது 15, 16, 18 இப்படி ஒன்றாக இணைந்து 20 வயது ஜப்பானிய மாணவியை லண்டனில் கடத்தி தடுத்து வைத்து பல தடவை கற்பழித்தார்களாம்.
இவ்வாரம் இவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்கிய நீதிபதி - ''நீங்கள் மிருங்களைப் போல நடந்து

வந்தமைக்கு யார் பொறுப்பு?
''பெற்றோர் தான் பொறுப்பு.
பெற்றோர் வளர்த்த வளர்ப்பு சரியில்லை'' என்கிறது அரசாங்கம்.
''அரசாங்கம் தான் பொறுப்பு -
எங்கள் பிள்ளைகளைச் சரியான திசையில் அரசு செலுத்தவில்லை. பள்ளிக் கூடங்களில் படிப்பு சரியில்லை'' - என்று அரசையும் பள்ளிக்கூடங்களையும் சாடுகிறார்கள் பெற்றோர்.

இங்கே தான் எங்கள் ஆசியநாட்டு பழக்கவழக்கங்கள் மேலோங்கி நிற்கின்றன. பிள்ளைகளை கண்டித்து அதே சமயம் அன்பு

கிடையாது. அன்பும் கிடையாது. ஏன் பிறந்தாய் சனியனே? என்ற போக்கில் அசிரத்தை. பிள்ளையிடம் பாசம், பரிவு காட்டுதல் இங்கு இல்லை. 'பராசக்தி' படத்தில் வந்த காட்சி போல, ஒரு பிரிட்டிஷ் தாயார் பாலத்தில் ஏறி நின்று தன் குழந்தையை நீரில் எறிந்து கொன்றாள் கடந்த மாதம்.
இன்னொரு பிரிட்டிஷ் தாய் தன் சின்னஞ்சிறு குழந்தைகள் (7 வயது , 4 வயது, ஒருவயது) மூன்றையும் வீட்டில் தனியாக விட்டு விட்டு தன் 'போய் பிரண்டுடன்' 10 நாள் விடுமுறையைக் களிக்க ஸ்பெயினுக்கு பறந்து சென்று விட்டார். வீட்டு வாசலில் 4 வயது சிறுமி அழுதபடி நிற்பதைக் கண்ட பக்கத்து வீட்டார் பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததும் நகராட்சி சபையின் சமூகசேவை பிரிவு வந்து குழந்தைகளைப் பொறுப்பேற்றது.
தாயார் ஜாலியாக திரும்பிவரும் நாளை எதிர்பார்த்து பொலிசார் இப்போது காத்திருக்கிறார்கள்.
குழந்தைகளிடம் அன்பு தான் இல்லை. கண்டிப்பதில் என்ன தவறு. அடித்தால் தவறாம். தண்டனைக்குரிய குற்றமாம்.
பிரிட்டன், நோர்வே, சுவீடன், டென்மார்க் உட்பட ஐரோப்பிய நாடுகள் 6 - குழந்தைகளை பெற்றோர் /ஆசிரியர் அடிப்பதை குற்றமாக்கியுள்ளன. இதனால் பெற்றோரும் ஆசிரியரும் குழந்தைகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று

இதனைத் தடுக்க ஆவன செய்யவில்லை என்றும் - ஐரோப்பிய ''மனித உரிமைகள்'' நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறான்.
இவ்வார ஈழநாடு அச்சுக்குப் போகும் வேளையில் இந்த வழக்கு விசாரணை ஐரோப்பிய நீதிமன்றத்தில் ஆரம்பமாகியிருக்கிறது.
உங்கள் அப்பா - அம்மா அல்லது வளர்ந்த வேறு ஆட்கள் உங்களைத் தொந்தரவு செய்கிறார்களா?
அஞ்சாதீர்கள். உடனடியாக எமக்கு போன் செய்யுங்கள் என்று பிரிட்டிஷ் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனம் ஒன்று தொலைபேசி இலக்கம் ஒன்றை பள்ளிக்கூடங்களில் எல்லா இடங்களிலும் ஒட்டி வைத்திருக்கின்றது.
இந்தத் தொலைபேசித் திட்டத்தின் பெயர் சைல்ட் லைன்CHILD LINE. கடந்த ஆண்டில் மட்டும் 90 ஆயிரம் தொலைபேசி அழைப்புக்கள் சிறுவர் சிறுமியரிடமிருந்து கிடைத்தனவாம். தமது பெற்றோர்களைப் பற்றி, ஆசிரியர்களைப் பற்றி, மற்றவர்களைப் பற்றி இந்தச் சிறுவர் சிறுமியர் முறையிட்டார்களாம்.
எனது பள்ளிப் பருவத்தில் இந்தத் 'தொலைபேசித்திட்டம்' இலங்கையில் இருந்திருந்தால்..
கற்பனை செய்து பார்க்கிறேன்.
எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. ★

MAJURA PIZZERIA & RESTAURANT
மயூரா உணவகம்
(ஐம்பதுக்கு மேற்பட்ட ஆசனங்கள் கொண்ட உணவகம்)
Scharnhorst Str. 48, (Ecke Fichte Str)
44147 Dortmund (Hafen க்கு அண்மையில்)
Tel: 0231/ 82 12 69
அன்பார்ந்த தமிழ் மக்களே
டோட்முண்ட் நகரில் சுவை நிறைந்த
இலங்கை, இத்தாலிய
உணவு வகைகளை நியாயமான விலையில்
சுவைத்திட இன்றே விஜயம் செய்யுங்கள்

MARCHE
THURGA
444 Jean Talon Ave West
Montreal, Quebec
(514) 276-9262
இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, கரிபியன் மற்றும் கனடிய நாட்டு உணவுப் பொருட்களுக்கும் அதி துரித பணமாற்றுச் சேவைக்கும் வாரத்தில் 7 நாட்களும் சேவை ஆற்றும் ஸ்தாபனம்.
மார்ஷே துர்க்கா
இலவச விநியோகமும் செய்து தரப்படும்.

உங்கள் சகல வைபவங்களுக்கும் சிற்றுண்டி வகைகளையும் உணவு வகைகளையும் பதிவு செய்து பெற்றிட எம்மை அழையுங்கள்
மொமோய் வெதுப்பகம்
BOULANGERIE BAKERY
MOMOI
இலங்கை முறையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட
• பாண்
• பணிஸ்
• ரொட்டி

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
6953 Victoria Ave., Montreal, QUE
(514) 736-1925

# இரத்தத்தின் தீவு

25

# வீட்டில் இருந்தால் எப்படி ஈழத்தைப் பெற முடியும்?

புலிகளின் மிகக் கவனமான செலவீனமும் நேர்மையும் 24 வயது நிரம்பிய குலவீரசிங்கம் வீரகுமார் எனும் விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியை உதாரணமாகக் கொள்வதன் மூலம் வெளிப்படுகின்றது.

1993 மேயில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தி ஜனாதிபதி பிரேமதாசாவையும் தன்னையும் அழித்தவர் இவர்.

தனது நோக்கத்தை நிறைவேற்ற இரு வருடங்களை இவர் செலவிட்டார். பெருந்தொகை பணத்துடன் கொழும்புக்கு வந்த அவர் அதனை மளிகைக்கடை வியாபாரத்தில் முதலீடு செய்தார். பின்னர் தனது கடைக்கு மேல் ஒரு அறையை வாடகைக்கு எடுத்தார். அது பிரேமதாசாவின் தனிப்பட்ட வாசஸ்தலத்திற்குச் சமீபமாக இருந்தது. குண்டான கருண்ட முடியுடைய (தலைமயிர்) அந்த மனிதனிடம் தீய பழக்கங்கள் எதுவும் இல்லை. நிரம்பப் பணம் இருந்தபோதும் அதனைத் தனக்காக அவர் செலவிடவில்லை. சாதாரணமாகவே சாப்பிட்டு உடுத்தி இருந்து வந்தார்.

பின்னர் மெதுவாக பிரேமதாசாவின் வாசஸ்தல அலுவலர்களுடன் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். அதற்கு அவர் கடை நடத்தியமை உதவியது. விசேடமாக பிரேமதாசாவின் தனிப்பட்ட பணியாளுடன் அவர் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

இரு வருடங்களில் தற்கொலைக் குண்டுதாரி பிரேமதாசாவை நோக்கி அவர் சைக்கிளைச் செலுத்திய போது பிரேமதாசாவின் தனிப்பட்ட பணியாள் ஏதோவொன்றைக் காணவில்லையென உணர்ந்து கொண்டு வீரகுமாரின் சைக்கிளைப் பிடித்ததாகவும் அப்போது வீரகுமார் குண்டை வெடிக்க வைத்ததாகவும் நேரில் கண்ட சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

மிகச் சக்தி வாய்ந்த குண்டெனபதால் கை, கால்கள் எல்லாம் வெடித்துச் சிதறி அந்தப் பகுதியெல்லாம் பரவிக் கிடந்தன. பிரேமதாசாவின் உடலை அவரின் தனிப்

அனிதா பிரதாப்



பட்ட மருத்துவர் அடையாளம் கண்டு பிடிக்க இரு மணித்தியாலங்களுக்கும் மேலான நேரம் எடுத்தது.

ஜனாதிபதியின் முழு அலுவலர்களுமே இறந்து விட்டனர். வீரகுமாரின் உடலும் துண்டுதுண்டாடப்பட்டு விட்டது. ஆனால் அவரின் தலை கிடந்தது. இது காமினி திசநாயக்கா, ராஜீவ்காந்தி ஆகியோரின் படுகொலைகளையொத்தது. ஒரே மாதிரியான தொழில்நுட்பமே இவர்கள் யாவருக்கும் பயன்படுத்தப்பட்டது. அதாவது வயிற்றைச் சுற்றிக் குண்டைக் கட்டி வெடிக்க வைக்கப்பட்டிருந்தது.

வீரகுடாரின் துண்டாடப்பட்ட தலையை உள்ளூர் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. வீரகுமாரின் வியாபாரப் பங்காளி அவரை அடையாளம் காட்டினார். எந்தவொரு இலங்கை அரசியல்வாதியிலும் பார்க்க அதிகளவு புலிகளுக்கு உதவியவரான பிரேமதாசாவைக் கொல்லும் தனது இலக்கை நீண்டகாலமாகத் தனக்குள் திட்டமிட்டு நடத்திய வீரகுமாரின் பொறுமை அவரின் வர்த்தகப் பங்களிப்பின் மூலம் வெளியாகியது.

வீரகுமாரின் இலக்கை எதனாலும் தடுக்க முடியவில்லை. அவர் ஒரு இளைஞன். நிரம்பவும் பணம் இருந்தது. சுதந்திரமாக முறித்துக் கொண்டு சென்றிருக்கலாம். திட்டமிட்ட நிகழ்ச்சிகளை முன்னெடுத்துச் செல்லும் ஏவுகணை போன்று அவர் செயற்பட்டார்.

பெரிய மோதலொன்று நடைபெற்ற பின்னர் புலிகளின் வைத்தியசாலைக்கு நான் ஒரு தடவை சென்றேன். அங்கு ஒரு பிரிவில் (வார்ட்) 60 இளம் பெண்கள் இருந்தனர். அவர்களில் அநேகமானோருக்கு கையோ கால்களோ துண்டாடப்பட்டிருந்தது. சிலருக்கு முகத்தில் ஒரு பகுதியைக் காணவில்லை. சிலரின் உடலில் சன்னம் துளைத்த பாரிய குழி காணப்பட்டது.

விடுதியில் இத்தகைய திகில் நிறைந்த விடயங்களைக் காணக்கூடியதாக இருந்தபோதும் அங்கு இருந்தோர் மத்தியில் மகிழ்ச்சியே காணப்பட்டது. சமரின்போது வலது காலை இழந்திருந்த 16 வயதுடைய சுமதி என்ற பெண் செயற்கைக்கால் ஒன்றே தனக்குத் தேவையாக இருப்பதாகவும் அப்போது தான் களத்திற்குச் செல்ல முடியும் எனவும் கூறினார். வீட்டில் இருந்தால் எப்படி ஈழத்தைப் பெற முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

சாவதற்கு தீர்மானித்த இந்த ஒருமனதான முடிவே விடுதலைப்புலிகள் பெரியதும் சக்தி வாய்ந்ததுமான அமைப்பாக உருவாவதற்கு துணைபுரிந்தது. சகல ஆயுத தளபாடங்களைக் கொண்ட இராணுவமாகவும் மக்கள் விசுவாசத்தைக் கொண்டதாகவும் தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தோற்றம் பெறவும் இதுவே வழி வகுத்தது.

ஆனால் கெரில்லாக்களுக்குப் பிரபாகரன் மீதும் அவரின் நோக்கத்தின் மீதும் எவ்வாறு இந்த ஒருமனதான பக்தி ஏற்பட்டது? அச்சமும் ஒரு காரணம் தான். அதேசமயம் விடுதலைப்புலிகள் அமைப்பின் ஒரு அசாதாரண கட்டுப்பாடு உள்ளது. குறிக்கோளுக்கு எதிராகத் துரோகமிழைப்போர் கொடூரமாக அணுகப்படுகின்றார்கள்.

போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்தில் "மின்கம்பக் கொலைகள்" அவதானிக்கக் கூடியவையாக இருந்தன. தகவல் கொடுப்போர் தலையில் சுடப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். பின்னர் அவர்களின் உடல்கள் மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டிருக்கும். கழுத்தில் விபரங்கள் எழுதிய அட்டை தொங்கவிடப்பட்டிருக்கும். இது துரோகிகளுக்கு நடக்கிறது என்பதே அந்த வாசகம்.

புலிகள் இயக்கத்துக்கு ஆட்திரட்டுவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற போது "புலிகளின் மாணவர் அணியில் சேருவதற்கு யாருக்கும் விருப்பமில்லை? என்று அவர்கள் மாணவர்களைக் கேட்பார்கள். ஒருவரின் கைகளும் உயராது. ஒருவரும் துணிவதில்லை. கருத்துப் பேதத்தைப் புலிகள் சகித்துக் கொள்வதில்லை. இது சகலருக்கும் புலிகளின் வழியில் சிந்திக்கும் தமிழ்சமூகத்தை உருவாக்குவதற்கான இலக்காகும்.

10 வருடங்களுக்கு முன்பு புலிகளின் கடுமையான நிலைப்பாடுடைய தந்திரோபாயம் தொடர்பாக பல்கலைக்கழக பேராசிரியர் குழு புகார் தெரிவித்தது. ஒரு கல்விமான் சுடப்பட்டார். ஏனையோர் கொழும்புக்குச் சென்று மறைந்து கொண்டனர்.

கீழ்ப்படிவைத் தவிர வேறெதையும் புலிக் கெரில்லாக்கள் வெளிப்படுத்துவதில்லை. ஏனைய புலி உறுப்பினர்கள் முன்னிலையில் சிறிதளவு வாயால் சாடுவதும் நடைபெறுகின்றனவே தவிர வல்லுறவு, கொலை, இலஞ்சம் வாங்குதல் போன்ற பாரதூரமான குற்றங்களுக்கு உடனடியாக மரணதண்டனையே வழங்கப்படுகின்றது.

ஆயினும் பீதியை ஏற்படுத்துவதில் பார்க்க ஒழுங்கே புலிகளின் மாயாஜால மந்திரமாகும். பயிற்சியின் போது இந்த ஒழுங்கு நடைமுறை வழங்கப்படுகின்றது. இதுவே குடும்பப் பிணைப்புக்களையும் ஆசாபாசங்களையும் முறித்துக் கொள்ளும் வகையில் அவர்களைத் தயார்படுத்துகின்றது.

பிரபாகரனின் ஒழுங்கான நடவடிக்கைகளே அவரின் வெற்றிக்கான காரணமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒழுங்கை இறுக்கமாக கடைப்பிடிப்பதன் மூலம் ஈடுபாடு வருகின்றது என்று எனக்களித்த பேட்டி ஒன்றில் பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

பயிற்சியின் போது உடல் ரீதியான சகிப்புத்தன்மை ஒரு புறமிருக்க ஆயுதங்களைப் பயன்படுத்தவும் உளரீதியாகக் கொள்கைகளை உள்வாங்கிக் கொள்வதற்குமுரிய முக்கியமான விடயமாகும். உள, உணர்வு தர்க்கரீதியான கொள்கைப் பிடிப்பும் பயிற்சியின் போது ஏற்படுகின்றது. துணிவு பழிவாங்கும் குணம், தியாகம் என்பவற்றையும் பையன்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

புதிதாகச் சேர்க்கப்படுவோருக்கு இலங்கை இராணுவத்தின் அராஜகங்கள் பற்றி திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லப்படுகின்றது. துண்டாடப்பட்ட தமிழர்களின் சடலங்கள் புகைப்படங்கள் மூலம் காண்பிக்கப்டுகின்றன. பயங்கரம் நிறைந்த அந்தச் சம்பவங்கள் குறித்தும் விபரிக்கப்படுகின்றது. முடிவில் புதிதாக இணைந்தோர் இலங்கை இராணுவம் மீது கடுமையான வெறுப்புக் கொண்டு விடுகின்றனர்.

புலிகளின் கோட்பாடு இரு பிரிவுகளைக் கொண்டது. ஈழத்திற்காகப் போராடுதல் ஒன்று. மற்றையது இறுதி மூச்சுவரை பிரபாகரனுக்கு விசுவாசமாக இருப்பது. பயிற்சி முடியும் தறுவாயில் புலி அமைப்பில் புதிதாக இணைந்தோர் பிரபாகரன் மீது அபிமான மரியாதை கொண்டு விடுகின்றனர்.

இது மிகவும் கவனத்துடன் உருவேற்றப்பட்ட கொள்கையாகும். களத்தின் முன்னணியில் சமரிடும் கதாநாயக பிரபாகரன், மோசடியில் ஈடுபடாத பிரபாகரன், பணம், அதிகாரம் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டபோதும் அதனை நிராகரித்தும் இலங்கை இந்திய இராணுவ அழுத்தங்கள் மத்தியிலும் ஈழம் என்ற இலக்கை கைவிடாத பிரபாகரன், உறுப்பினர்கள் மீது அன்பு செலுத்தி அவர்களைப் பாதுகாக்கும் பிரபாகரன், சோழ மன்னர்களின் வாரிசுகளாகத் தமிழர்களின் பண்டைய புகழை ஓங்கச் செய்ய வேண்டுமென்ற கொள்கையுடைய பிரபாகரன். இவை பயிற்சியின் போது புதிதாக இணைந்து கொள்வோர் உள்வாங்கிக் கொள்ளும் கொள்கையாகும்.

பயிற்சியை முடித்துக் கொள்ளும் போது புலிக் கெரில்லாக்கள் ஒழுங்கும் கட்டுக்கோப்பும் அர்ப்பணிப்பும் உள்ளவர்களாக உருவாகின்றனர்.அவர்களில் 200 பேரை கரும்புலிகளாகப் பிரபாகரன் தேர்ந்தெடுக்கின்றார். தமது ஒழுங்கு பிரபாகரன் மீதான விசுவாசத்திற்காக அவர்கள் தேர்ந்தெடுக்கபபடுகிறார்கள்.

இரு வருடங்களுக்கு தாங்கள் மரணத்தைத் தழுவப் போகின்றோமெனத் தெரிந்திருந்தும் தெரிவு செய்யப்படும் ஒரு புலி கெரில்லா மன நெகிழ்வுடன் இந்த வாழ்த்துச் செய்தியை எடுத்துக் கொள்கிறார். இந்தத் தெரிவுக்காகவே அவர் காத்துக் கொண்டிருக்கிறார். இது விடுதலைப்புலிகளின் அங்கீகாரத்தை அவர் பெற்றுக் கொள்வதற்கும் குடும்பப் பிணைப்பை அறுத்துக் கொள்வதற்கும் ஆபத்தான வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்குமான செய்தியாகும். அத்துடன் இது கெரில்லா ஒருவருக்குப் பிரபாகரனால் அளிக்கப்பட்ட கௌரவம்.

(தொடரும்)

ஈழநாடு தற்காலிக தொடர்புகளுக்கு (416) 528 - 1867 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

# மரண அறிவித்தல்



மண்ணில்
04.05.1935

விண்ணில்
05.05.2002

## திருமதி தவமணி கனகரட்ணம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வேலணையை வதிவிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி தவமணி கனகரட்ணம் அவர்கள் 05.05.2002 அன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் வேலணை சுதா பேக்கரி உரிமையாளர் கனகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சங்கரப்பிள்ளை – தையமுத்து தம்பதிகளின் அன்பு மகளும்

காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஆறுமுகம் தம்பதிகளின் அன்பு மருமகளும்

காலஞ்சென்ற சிவஞானம் காலஞ்சென்ற வாடாமலர், காலஞ்சென்ற தங்கராசா, சாந்தலிங்கம் மாஸ்டர் (காந்தி –லண்டன்) சற்குணம் (வவுனியா) பரம்சோதி (இலங்கை) அருந்ததி ரீச்சர் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்

ஜெகதீஸ்வரி (கொழும்பு) மிலனீஸ்வரி (கனடா) யோகேஸ்வரி (லண்டன்) தட்சணேஸ்வரி (வவுனியா) ஞானமூர்த்தி (லண்டன்) தவனேஸ்வரி (சுவிஸ்) பாலமூர்த்தி (பிரான்ஸ்) தேவமூர்த்தி (வவுனியா) ராமமூர்த்தி (கனடா) தட்சணாமூர்த்தி (வவுனியா) வனிதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்

தனபாலசிங்கம் (லண்டன்) அன்னலிங்கம் (கனடா) சிவராஜா (லண்டன்) ஜெயபாலன் (கனடா) சீதா (லண்டன்) விநாயகமூர்த்தி (சுவிஸ்) தனுஜா (கனடா) மோகனாம்பாள் (வவுனியா) சிலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்

காலஞ்சென்ற முருகையா, காலஞ்சென்ற புவனேஸ்வரி, சாந்தாதேவி (லண்டன்) அருந்தவநாயகம் (வவுனியா) ஜெயராசா (இலங்கை) ஆனந்ததேவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும்


தர்சன், நிரோஜன், நிரஞ்சன், லக்ஷிகா, தனியா, ரோஜான், டசிகா, டெலிகா, மயூரன், மயூரி, தமிழினி, தனிஸ்கரன், சாயித்திரி, ஈர்த்தனா, டினேஷ், லக்சனா, லொசான், சுவிதா, சுவீதன், ஈசா, ரிஷிகா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும்

காலஞ்சென்றவரான சந்திரசேகரம், திருமதி சந்திரசேகரம் தயாநிதி (கொழும்பு) காலஞ்சென்றவரான துரைச்சாமி, திருமதி துரைச்சாமி பூரணம் (வல்வெட்டி) திரு.திருமதி துரைச்சாமி பூரணம் (புங்குடுதீவு) திரு.திருமதி வேலாயுதபிள்ளை வள்ளிநாயகி (திருமலை) காலஞ்சென்றவரான கந்தசாமி, திருமதி கந்தசாமி மகேஸ்வரி (லண்டன்) காலஞ்சென்றவரான சிவலிங்கம் திருமதி சிவலிங்கம் ராசலெட்சுமி (கனடா) காலஞ்சென்றவரான நகுலேசபிள்ளை, திருமதி நகுலேசபிள்ளை மாணிக்கம் (நாரந்தனை) திரு.திருமதி கந்தசாமி (பாவற்குளம்) ஆகியோரின் அன்புச் சம்மந்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: அன்னலிங்கம் மிலனீஸ்வரி (பாப்பா – மகள்) (416) 757 – 8869
ராமமூர்த்தி (பாபு – மகன்) (416) 744 – 3586

# பொசுங்கும் மக்கள் நலன்



இந்தியா

தமிழக அரசியலில் காங்கிரஸ் அதிகாரத்துக்கு முற்றுப்புள்ளிவைத்து ஆட்சி அதிகாரத்தை திமுக கைப்பற்றிக்கொண்டது. இதன் பின்னர் தமிழக அரசியில்ல திமுக தீர்மானகரமான சக்தியாக பரிணமித்தது. இப்போக்கு 1967 முதல் தொடர்கிறது. இதன் பின்னர் எம்ஜிஆர் தலைமையிலான அதிமுக தோன்றிய பின்னர் திமுக வுக்கு நிகரான ஓர் போட்டிக்கட்சியாகவே பரிணமித்தது.

1972க்குப் பின்னர் திமுக - அதிமுக என்ற இரு கட்சிகளுக்கிடையிலான அரசியல் நகர்வுகள் தான் தமிழக அரசியலின் திருப்பு மையங்களாகின.

எம்ஜிஆர் தலைமையிலான அதிமுக ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்து அவர் இறக்கும் வரை தக்க வைத்தது. இக்காலத்தில் திமுக எதிர்க்கட்சியாக இருந்தாலும் தரம் தாழ்ந்த மிக மோசமான அரசியல் நாகரீகம் அப்போது வளர்ச்சியடையவில்லை.

பழிவாங்கும் அரசியலின் வன்மம் நிறுவனமயப்பட்டு இயங்கவில்லை. ஆனாலும் இரு கட்சிகளுக்கிடையிலான போட்டாபோட்டி சகிக்கும் நிலையில் தான் இருந்தன. இன்று தீவிரப்பட்டுள் அறிக்கைப் போர் அக்காலத்தில் இந்தளவிற்கு ஓர் தாக்குதல் ஆயுதமாக வளரவில்லை.

அதிமுக ஆட்சியின் செல்வாக்கை அதிகரிப்பதற்காக எம்ஜிஆர் 1982 க்குப் பின்னர் கொள்கை பரப்புச் செயலாளராக ஜெயலலிதாவை நியமித்தார்.

இதன் பின்னர் ஜெயலலிதா அதிமுக மட்டத்தில் ஓர் செல்வாக்கு மிக்க தலைவராக தன்னை நிலைநிறுத்தத் தொடங்கினார். எம்ஜிஆர் மறைவுக்குப் பின்னர் கட்சித் தலைமையையும் எடுத்துக் கொண்டார்.

1989 இல் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவியாகவும் 1991 இல் தமிழக முதலமைச்சராகவும் வளர்ந்தார்.



ஆக 1990 க்குப் பின்னரான தமிழக அரசியல் களம் கலைஞர் - ஜெயலலிதா என்ற தனிநபர் சார்ந்த முரண்களின் விளைச்சலாக மாறியது. பழிவாங்கும் அரசியல் ஒரு முனைப்பான அணுகுமுறையாக நடைமுறையாகவே வளர்ந்தது. இக்காலத்தின் பின்னரான அரசியலை கூர்ந்து நோக்குபவர்கள் இதன் அபாயத்தை உணரமுடியும்.

தமிழக நலத்திட்டங்கள், சமூக பொருளாதார மேம்பாடு பற்றியதான விவாதங்கள் என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. கருணாநிதி - ஜெயலலிதா தொடர்ந்து அறிக்கைப்போர் தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இந்திய அளவிலும் தமிழக அளவிலும் இன்று எதிர்கொள்ளக்கூடிய அவசிய அவசரமான பிரச்னைப்பாடுகள் மீதான கவனமீர்ப்போ, அதன் மீதான தமது கட்சி நிலைப்பாடோ எதனையும் ஆழமாகவும் பொறுப்புடனும் வெளிப்படுத்தாத கட்சிகளாகவே சுருக்கம் கொண்டுள்ளன.

ஆனாலும் இக்கட்சிகளின் பின்னால் தான் தமிழக எதிர்காலம் உள்ளது. இவ்விரு கட்சிகளுக்கு மாற்றாக செயற்படக்கூடிய அளவிற்கு ஏனைய கட்சிகள் இல்லை. மாறாக இவ்விரு கட்சிகளுடன் எப்படியும் கூட்டணி அமைத்து 'தேர்தல் அரசியல்', 'அதிகார அரசியல்' உடன்பிணைப்பு வைப்பதில் தான் மற்ற கட்சியினரும் விழிப்பாக உள்ளனர்.

திமுக- அதிமுக கட்சிகளிடையே நடைபெறும் பனிப்போர் தமிழக எதிர்காலத்தை எந்தளவிற்கு பாதிக்கும்.

அதனால் ஏற்படக்கூடிய பாரதூர விளைவுகள் பற்றிய அக்கறையின்றி அரசியல் கட்சிகள் செயற்படுவது வேதனைக் குரியது.

சமீப காலப் பத்திரிகைகளில் கருணாதி - ஜெயலலிதா கட்டமைக்கும் அறிக்கைப் போர் தமிழக மக்களது எதிர்காலத்தை சுபீட்சமாக்க உதவக்கூடியவை அல்ல.

எம்ஜிஆர் காலத்து அதிமுக, ஜெயலலிதா தலைமையிலான அதிமுக என்ற இரு கட்டங்களும் பண்புநிலையில் வேறுபட்டதாகவே உள்ளன. கருணாநிதியும் மிகத் தாழ்ந்து அரசியல் விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றார்.

இதனால் முனைப்பான அரசியல் விவகாரங்களில் கூட அவர் கவனத்தை செலுத்தமுடியாத அளவுக்கு அவரது அரசியல் வாழ்க்கை உள்ளது.

அண்ணாத்துரை காலத்து கருணாநிதிக்கும் எம்ஜிஆர் காலத்து கருணாநிதிக்கும் கூட பலத்த குணாம்ச வேறுபாடு உண்டு.

ஆக கருணாநிதியின் தற்காலம் ஜெயலலிதா என்ற நபரால் தீர்மானிக்கும் நிர்ப்பந்தக் கட்டாயத்தில் விடப்பட்டுள்ளமையை அவரது சமீபகால அறிக்கைகளே தெளிவுபடுத்துகின்றது.

எம்ஜிஆர் கூட இந்தளவிற்கு திமுக வுக்கும் கருணாநிதிக்கும் மிகுந்த நெருக்கடி கொடுத்திருப்பாரோ என்று பார்த்தால் அந்தளவிற்கு இல்லை.

ஆக கருணாநிதி - ஜெயலலிதா என்ற கட்டமைப்பு சுழற்சிக்குள் தமிழக அரசியல் களம் சிக்கியிருப்பது தான் தமிழகத்தின் போக்காக உள்ளது. இந்த இருவரது அறிக்கைப் போரினது உக்கிரத்தில் 'தமிழக மக்கள் நலன்' பொசுங்கி விடுகின்றது.

## பாஜக: தாங்கிப்பிடிக்கும் தூண்கள்

குஜராத்தில் நிகழ்ந்த தொடர் கொடூரச் சம்பவங்கள் தற்காலிகமாக ஓர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

அயோத்தியில் நேரவிருந்த பெரிய கொலைத் தாண்டவம் கூட ஒரு வழியாக இப்போதைக்கு தவிர்க்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இந்த தவிர்க்கப்பட்டவை இனி வரவிருக்கும் பூகம்பங்களுக்கு காரணமாக இருக்கப்போகின்றது.

பாஜகவுடன் கூட்டணி அமைத்த கட்சிகள் பாஜக வுக்கு எதிராக கருத்துத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளன.

மத்திய அரசு வழக்கறிஞர் அட்டர்னி ஜெனரல் சோலி சோரப்ஜி அயோத்தியில் அடையாள பூஜை நடத்த அனுமதிக்கும்படி நீதிமன்றத்தில் வாதாடியது கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் புயலைக் கிளப்பியுள்ளது. எதிர்க்கட்சிகள் பாஜக வின் அணுகுமுறைகளில் உள்ள இரட்டைத்தன்மை இது தான் என்று காட்டமாக விமர்சனம் செய்கின்றனர்.

பாஜக கூட்டணிக் கட்சிகளும் கூட சோராப்ஜியின் கருத்துக்குத் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளன. கூட்டணிக் கட்சிகளுடன் பாஜக இது தொடர்பாக ஆலோசிக்காமல் கருத்துத் தெரிவித்துள்ளனர் எனவும் குற்றம் சாட்டுகின்றனர்.

கோயில் கட்டுவதற்கான தூண்களை கரசேவகர்களிடமிருந்து மத்திய அரசு தனது விசேட பிரதிநிதியை அனுப்பி வாங்கிக் கொண்டது. இது தொடர்பாகவும் கட்சிகள் மத்திய அரசை விமர்சித்து வருகின்றன. மேலும் அரசே தூண்களை வாங்கிய சம்பவம் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது என்ற குற்றச்சாட்டும் எழுகின்றது. ஆக அயோத்தி விவகாரத்தில் பாஜக வின் அணுகுமுறை மேலும் மேலும் சந்தேகத்தையே எழுப்புகின்றது.

ஒரிசா சட்டப்பேரவை தாக்கப்பட்ட விவகாரம் இன்னொரு புயலை வெளிப்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்திற்குக் காரணமான விஷ்வ இந்து பரிஷத் அமைப்புத்தடை செய்யப்பட வேண்டும் என ஆளும் கூட்டணிக்கட்சிகள் போர்க்குரல் எழுப்பியுள்ளன. ஆக வாஜ்பாய் அரசு பல்வேறு புதிய நெருக்கடிகளை சந்திக்கவுள்ளது.

எந்த வடிவில் மத அடிப்படைவாதம் தலைதூக்கினாலும் அதை அனுமதிக்க முடியாது. விஷ்வ இந்து பரிஷத், பஜ்ரங்தளம் போன்ற அமைப்புக்கள் தடைசெய்யப்பட வேண்டும் என ஐக்கிய ஜனதா தள உறுப்பினர் டி.பி.யாதவ் வலியுறுத்தியுள்ளார். இதுபோல் சமதா கட்சி உறுப்பினர் பிரபுநாத் சிங்கும் இதே தொனியில் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் ஒருபடி சென்று பொடோ சட்டத்தை பயன்படுத்தி விஎச்பி, பஜ்ரங்தளம் போன்ற அமைப்புக்கள் தடை செய்யப்பட வேண்டும் என்று கூறுகின்றார்.

இதுபோல் திரிணாமூல் காங்கிரஸ், தெலுங்குதேசம் உள்ளிட்ட மதவாத அமைப்புக்கள் தடை செய்யப்பட வேண்டும் என குரல் கொடுக்கின்றனர்.

பாஜக வைப் பொறுத்தவரை இவ்விரு அமைப்புக்களுக்கு இடையிலான உறவு பலமானது. தாக்குதல் சம்பவத்தில் யார் ஈடுபட்டாலும் அவர்கள் சட்டரீதியாக தண்டிக்கப்படுவார்கள் என்ற ரீதியிலேயே பதில் சொல்கிறது.

இன்னொரு புறம் கூட்டணிக்கட்சிகள் வெளிப்படுத்தும் கருத்துக்களையும் அவர்களையும் உதாசீனம் செய்யமுடியாத அளவிற்கு ஓர் புதிய நெருக்கடியில் பாஜக உள்ளது. ஆக மொத்தத்தில் பாஜக ஆட்சிக்கு எதிராக எந்த ரூபத்தில் எவரால் ஆபத்து வரும் என்பது தெரியாத அளவிற்கு நிலமைகள் தற்போது மிக மோசமாக வளர்ந்துள்ளன.

இனித்தொடரும் காலத்தில் இந்திய ஆட்சிக்கும் ஜனநாயகத்துக்கும் 'மத அடையாளம்' ஒரு பெரும் சவாலாகவே இருக்கப்போகின்றது. பாஜக இந்து தேசிய வாதக்கட்சியாக அடையாளம் காணப்படும் கட்சி. இந்நிலையில் விஎச்பி, பஜ்ரங்தளம் போன்ற இந்துமத அமைப்புக்களைத் தடை செய்தல் என்னும் முயற்சியில் ஈடுபட முடியாத சிக்கலில் பாஜக உள்ளது.

## பா.ஜ.க.- திமுக உறவு முறிந்தது!

(சென்னை)

பாரதீய ஜனதா கூட்டணியை விட்டு விலக திமுக தலைவர் கருணாநிதி காரணம் தேடுகின்றார் என்று பாரதீய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் எஸ்.பி. கிருபாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஞாயிறன்று திமுக பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி ''தமிழக பாஜக வுடன் இனிமேல் உறவு இல்லை. நட்புடன் இருப்போம் மத்தியில் பாஜக வுடன் உறவு உள்ளது'' என்று கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் தமிழக பாஜக தலைவர் எஸ்.பி.கிருபாநிதி திங்களன்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

''திமுக தலைவர் கருணாநிதியின் அறிவிப்பால் தமிழ்நாட்டில் பாஜக வுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. இங்குள்ள நிலைமை குறித்து கட்சி மேலிடத்திற்கு தெரிவிப்போம். இம்முடிவு திமுக தன்னிச்சையாக எடுத்த முடிவு. தேசிய ஜன நாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகளுடன் அவர்கள் எந்தவகையிலும் கலந்து பேசவில்லை.

உறவு ஓரிடம் நட்பு ஓரிடம் என்று சொல்வதும் மத்தியில் உறவு - மாநிலத்தில் நட்பு என்று கூறுவதும் புரியாத புதிராக உள்ளது. திமுக வுக்கு எதிராக பாஜக வைச் சேர்ந்த யாரும் பேசவில்லை. அப்படி யாராவது கருத்துக்களை தெரிவித்திருந்தாலும் அது பற்றி கட்சி அளவில் விசாரித்துக் கொண்டிருக்கின்றோம்.

சட்டசபையில் இருந்து பாஜக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்யாதது குறித்தும் கேட்டுக்கொண்டு தான் இருக்கின்றோம். அதிமுக குறித்து இல.கணேசன் தெரிவித்திருப்பது அவரது சொற்தக் கருத்து. அது குறித்து அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை.

நாங்கள் திமுக வுக்கு எதிராக மனதில் எந்தவொரு மாற்று எண்ணமும் கொள்ளவில்லை. உறவு வேண்டாம் என்று அவர்கள் தான் சொல்லியிருக்கின்றார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவேண்டிய அவசியமில்லை.



இன்றைய நிலையில் யாருடனும் நாங்கள் உறவை முறிக்கவில்லை. தேசிய கட்சியைச் சேர்ந்த நாங்கள் சமாதான முயற்சியில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை.


அதிமுக வுடன் கூட்டணி வைத்துக் கொள்வது குறித்து கட்சி எந்த முடிவும் எடுக்கவில்லை.

சென்னை கபாலீஸ்வரர் கோவில் அன்னதான திட்ட தொடக்க விழாவிற்கு அழைப்பு வந்ததால் நாங்கள் கலந்துகொண்டோம். மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பாஜகவைச் சேர்ந்தவர் என்பதால் அதில் பங்கேற்றோம். மற்றப்படி அதிமுக விற்கு துதி பாடவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

பாஜகவைப் பற்றி கருணாநிதி கூறிய கருத்து அவர்களே கூட்டணியை விட்டு வெளியேறிச் செல்வதற்கு கூறும் காரணமாக இருக்கலாம். அவர்களின் உள்விருப்பம் என்னவென்று எங்களுக்குத் தெரியாது.

தமிழக பாஜக வின் மத்திய குழுக்கூட்டம் சென்னையில் நடைபெறவுள்ளது. இதில் அகில இந்திய பாஜக வின் துணைத்தலைவர் ராமராவ் கலந்துகொள்கிறார். இக்கூட்டத்தில் பாஜக வின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசித்து முடிவெடுப்போம்'' என்று கிருபாநிதி கூறினார்.

# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



**அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.**

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெற முடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரியாகவிருந்தாலும், பேருந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெற முடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு**
**$1000.00**
**வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**ஒன்ராறியோவில் மிகப்பெரும் ஸ்தாபனம்**

## கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய




# UNITED PERSONAL INJURY ASSOCIATES

*The Car Accident People*



**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

### உங்களுக்குத் தெரியுமா?



இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

### விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் **"யுனைட்டட்"** (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

**தீபன் (416) 505-9804**

- *5255 Yonge Street, Suite 200, North York (South of Finch, Head Office)*
- *257 Dundas Street. E, Unite 1, Mississauga (Dundas and HWY 10)*
- *29 King Street E, Unit 7, Kitchener*




# இந்திரா முதல் வாஜ்பாய் வரை



## 79





## ஈழப்பிரச்சினையில் இந்தியத் தலையீடு

# இரகசியமான முறையில் தயாரிக்கப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை...

இந்தியாவின் நேரடித் தலையீட்டுடன் மேற்கொள்ளப்படும் உணவுப் பொருள் விநியோகம் மற்றும் நெல்லியடியில் விடுதலைப்புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல் என்பன ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் குழப்பத் தொடங்கியிருந்தது.

இந்தப் பின்னணியில் இரண்டு விடயங்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு தெளிவாகப் புரிந்தது.

ஒன்று விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒழித்துக்கட்டுவது சாத்தியமல்ல என்பது.

ஒரு பிரதேசத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் அப்பிரதேசத்துக்குள் ஊடுருவி பாரிய இழப்புக்களை ஏற்படுத்தக் கூடிய வல்லமையை விடுதலைப்புலிகள் கொண்டுள்ளார்கள் என்பதையும் ஜெயவர்த்தனா புரிந்து கொண்டார்.

இரண்டு இந்தியாவின் உதவியின்றி இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது சாத்தியமல்ல என்பது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் காமினி திசநாயக்கா சர்ச்சைக்குரிய திட்டம் ஒன்றுடன் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை அணுகினார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தை இந்தியாவின் உதவியுடன் முடிவுக்கு கொண்டு வருவதற்கான திட்டமே அது.

ஜெயவர்த்தன அமைச்சரவையில் ஒரு சக்தி வாய்ந்த அமைச்சராக இருந்த காமினி திசநாயக்கா இந்தியாவுடனும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்ஷிற்றுடனும் மிகவும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருப்பவர்.

இந்திய உயர்ஸ்தானிகர் டிக்ஷிற்றுடன் காமினி நடத்திய ஆலோசனைகளின் பலனாகவே இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

அப்போதைய அரசியல் இராணுவ புறநிலைகளைக் கருத்திற்கொண்டால் இவ்வாறான திட்டம் ஒன்றைப் பயன்படுத்தி தமது இலக்கை நிறைவேற்றிக்கொள்ளமுடியுமா என ஜெயவர்த்தனா சிந்திக்கத் தொடங்கினார்.

இந்த உடன்படிக்கையைத் தயாரிப்பதிலும் அதனை ஜெயவர்த்தனாவை ஏற்றுக் கொள்ளச் செய்வதிலும் அதனை விடுதலைப் புலிகள் மீது 'திணிக்கும்' முயற்சியிலும் இந்திய உயர் ஸ்தானிகர் ஜே.என்.டிக்ஷிற் வகித்த பங்கு மிகவும் முக்கியமானது.

டிக்ஷிற்றைப் பொறுத்தவரையில் அவர் சர்ச்சைக்குரிய ஒருவராக இருப்பதுடன் சர்ச்சைக்கும் குழப்பங்களுக்கும் உரிய பகுதிகளிலேயே அவர் கடமையாற்றியிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1962 ஆம் ஆண்டில் இந்திய - சீன யுத்தம் இடம் பெற்றபோது இந்திய வெளிவிவகார அமைச்சின் சீன விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரிவில் அவர் கடமையாற்றினார்.

1971 இல் பங்களாதேஷ் உருவாகக் காரணமாக இருந்த இந்திய பாகிஸ்தானிய யுத்தம் இடம் பெற்றபோது வெளிவிவகார அமைச்சின் விசேட பணிமனையில் பணிப்பாளராக அவர் கடமையாற்றினார்.

அதற்கு அடுத்த ஆண்டில் பங்களாதேஷுக்கான உயர் ஸ்தானிகராக அவர் நியமனம் பெற்றார்.

அதாவது பங்களாதேஷ் உருவாக்கப்பட்ட பின்னர் அதனுடனான இந்தியாவின் உறவுகளை வடிவமைப்பதில் டிக்ஷிற்றின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

அதன் பின்னர் ஆப்கானிஸ்தானில் அவர் தூதுவராக நியமனம்செய்யப்பட்ட போது தான் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் படையெடுத்தன.

காபூலில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு அருகிலேயே நேரடி மோதல்கள் பல இடம் பெற்றிருக்கின்றன.

அதன் பின்னர் 1985 ஆம் ஆண்டில் இந்தியாவின் உயர் ஸ்தானிகராக கொழும்பு வந்த டிக்ஸிற் இன நெருக்கடிக்கான தீர்வு முயற்சிகளில் செலுத்திய செல்வாக்கு மிகவும் முக்கியமானது.

பிரச்னைக்குரிய பல இடங்களிலும் கடமையாற்றிய அவர் இலங்கைப் பிரச்னையைக் கையாண்ட விதம் கூட பெரும் சர்ச்சைக்குரியதாகவே இருந்தது.

### உடன்படிக்கையை உருவாக்கியவர்கள்

இந்த உடன்படிக்கையை உருவாக்குவதில் பலருடைய பங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படுகின்றது.

சென்னையிலிருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகையின் ஆசிரியராக அப்போதிருந்த என்.ராம், இந்தியாவின் வர்த்தகப் பிரமுகர் ஒருவரால் காமினி திசநாயக்காவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனை பல தடவை சந்தித்துள்ள ராம், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடனும் மிகவும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தவர். உடன்படிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகளின் கருத்தை நாடிபிடித்து அறியக்கூடியவராக ராம் கருதப்பட்ட போதிலும் அவரால் அப்பணியைச் சரியாகச் செய்யக்கூடியதாக இருந்ததா என்பது கேள்விக்குறி தான்.

ஜெயவர்த்தனாவுடனும் நெருங்கிய நண்பராக இருந்த ராம் இன நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கு இந்தியாவுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதற்கான அழுத்தத்தைக் கொடுத்தார்.

ஒருபுறம் ராம், மறுபுறம் காமினி மேற்கொண்ட முயற்சிகள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இறங்கி வருவதற்கு காரணமாகியது.

இருந்தபோதிலும் பல்வேறு விடயங்களிலும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமானதாகவே இருந்தது.

உடன்படிக்கைக்கான வரைபைத் தயாரிக்கும் போது கூட ஒவ்வொரு வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்தும்போதும் ஜெயவர்த்தனா இறுக்கமாகவே இருந்தார்.

உதாரணமாக 'தீவிரவாதிகள்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜெயவர்த்தனா திட்டவட்டமாக மறுத்துவிட்டார். பதிலாக 'பயங்கரவாதிகள்' என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். இந்த வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து 'ஆயுதந்தாங்கிய பிரிவினைவாதிகள்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதிலேயே இணக்கம் காணப்பட்டது.

இந்த உடன்படிக்கையானது மிகவும் இரகசியமான முறையிலேயே உருவாக்கப்பட்டது. ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையே காமினி திசநாயக்கா மற்றும் டிக்ஷிற் ஆகியோர் மட்டுமன்றி என்.ராம் கூட தூதுவர்களாகக் கடமையாற்றினார்கள். உண்மையில் இந்த ஐந்து பேரும் தான் இந்த உடன்படிக்கை உருவாக்கப்படுவதற்கு மூலகாரணமாக இருந்துள்ளார்கள்.

உடன்படிக்கைக்கான வரைவைத் தயாரிப்பதில் காமினியும் டிக்ஷிற்றும் நேரடியாக ஈடுபட்டார்கள். இந்த வரைவு கொழும்பிலும் புதுடில்லியிலும் முதலில் தனித்தனியாகத் தயாரிக்கப்பட்டன.

இந்த உடன்படிக்கையை முக்கியமாக இதன் மூலம் வடக்குகிழக்கு இணைக்கப்படுவதையும் அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதையும் பிரதமர் பிரேமதாசாவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் கடுமையாக எதிர்த்தனர். இந்தியாவுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டையும் எடுத்திருந்த இவர்கள் யுத்தம் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதையே வலியுறுத்தினார்கள்.



பண்டிதர்
எழுதும்
தொடர்

### விடுதலைப் புலிகள் எடுத்த நிலைப்பாடு

இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான யோசனை ஒன்றையிட்டுப் பரிசீலனை செய்வதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா தயாராகியுள்ளதாக இந்தியத் தரப்பினரால் விடுதலைப் புலிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான முழுமையான விபரங்களோ அல்லது இலங்கை இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது தொடர்பாகவோ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

வெறுமனே தீர்வு யோசனை ஒன்றையிட்டுப் பரிசீலனை செய்வதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா தயராக உள்ளார் என்று மட்டும் தான் தெரிவிக்கப்பட்டது.

இந்தியத் தூதரக அதிகாரி ஹர்தீப் பூரி யாழ்ப்பாணம் வந்து பிரபாகரனைச் சந்தித்த போதும் இதனைத் தான் கூறினார்.

உணவு விநியோகத்தைப் பார்வையிடுவதற்காக என யாழ்ப்பாணம் வரும் பூரி விடுதலைப் புலிகளின் தலைமையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதன் நோக்கங்களில் இதுவும் ஒன்று.

தமிழ் மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்தை வழங்குவதற்கும் வடக்கையும் கிழக்கையும் இணைக்கவும் ஜெயவர்த்தன அரசு இணங்கியுள்ளதாக பிரபாகரனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பிரபாகரன் ஜெயவர்த்தன அரசுடன் தாம் பேச்சுக்களை நடத்த வேண்டுமானால் மே 26க்கு முந்திய நிலைகளுக்கு அதாவது ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட முன்னர் படையினர் இருந்த நிலைகளுக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

அத்துடன் இடம் பெயர்ந்த அகதிகள் அனைவரும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

பிரபாகரனின்கோரிக்கைக்ளை அவதானமாகச் செவிமடுத்த பூரி அதற்குப் பதில் எதனையும் சொல்லவில்லை.

இந்தப் பின்னணியில் இலங்கை இந்திய உடன்படிக்கைக்கு இறுதி வடிவத்தைக் கொடுக்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை புதுடில்லிக்கு கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்றும் இந்திய உயர்மட்டத்தில் தீட்டப்பட்டது.

(மிகுதி அடுத்த வாரம்)

# AFTERCARE

CREMATION & BURIAL SERVICE

இந்துமத பாரம்பரியங்களுக்கேற்ப மரணச் சடங்குகளை நடத்தும் வசதிகளுண்டு. அழகுபடுத்தப்பட்ட விஸ்தாரமான மண்டபம் மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட வாகனத் தரிப்பு வசதிகள் உண்டு. ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸிஸாகா நகரங்களிலுள்ள எந்த மயான நிலையங்களுக்கும் சேவைகள் செய்து தரப்படும்.





மேலதிக விபரங்களுக்கும் எமது சேவைகள் பற்றிய கைநூலைப் பெறுவதற்கும் எமது வலைதளத்தை (www.aftercare.org) விஜயம் செய்யுங்கள்

நியாயமான கட்டணங்களில் மரணச் சடங்கு மற்றும் தகனக் கிரியைச் சேவைகள்

*Affordable Funeral & Cremation Services*




**416-440-8878**

1097 O'Connor Drive

*(Between Victoria Park & St.Clair)*

www.aftercare.org

24 மணிநேர சேவை



# OPTOMETRIST

## கண் பரிசோதனை நிபுணர்

## டாக்டர் யாழினி கருணாநிதி O.D



கனேடியப் பட்டதாரி., கனடாவிலும் அமெரிக்காவிலும் பயிற்சி பெற்று அனுபவம் உள்ளவர்.

உங்கள் கண்களை முழுமையாகப் பரிசோதித்து தகுந்த கண்ணாடிகளை, அல்லது விழி வில்லைகளைப் ( Contact Lens ) பெற்றுக்கொள்ளலாம்.

கண்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு தகுந்த சிகிச்சை வழங்கப்படும். அல்லது தகுந்த சிகிச்சைக்கு அனுப்பிவைக்கப்படும்.

OHIP, மற்றும் பிரத்தியேக காப்புறுதி திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.






**DON MILLS - SCARBROUGH இரண்டு இடங்களில் CLINIC நடைபெறுகிறது.**




**Gateway Corporate Center**
10 Gateway Blvd, # 130,
North York. On. M3C 3A1

**OPTOMETRIST**
5200 Finch East, Suite - 112 A
Scarborough. On, M1S 4Z4.

OHIP and Private Insurance accepted - Evening and weekend appointments available.

Tel : (416) 429-2548 Tel : (416) 298-9674



நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

**கவலையை விடுங்கள்**

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

# Vitaplex

# சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

தலைமுடி உதிர்தல், சொடுகு, எண்ணைத்தன்மை போன்றவற்றை எளிதில் அகற்றி உங்கள் தலைமயிருக்கு புத்துயிர் அளிக்கின்றது.




குடும்பத்தில் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உபயோகிக்கக்கூடிய ஒரே ஒரு சம்போ அன் கன்டிஷனர்

**Vitaplex Shampoo $9.99**
**Vitaplex Conditioner $9.99**
**Vitaplex Shampoo Plus Conditioner $18.99**

Applicable Taxes Extra

## பாவிக்கும் முறை

தலைமயிரை நன்றாக நனைத்தபின் **Vitaplex** சம்போவை சிறிதளவு கையிலெடுத்து தலையில் இட்டு நன்றாக தேய்த்து 30 வினாடிகளின் பின் நன்றாகக்கழுவவும் பின்னர் **Vitaplex**கன்டிஷனரையும் சம்போ போன்று தலையில் வைத்து முழுகவும்.
இவ்வாறு ஒவ்வொரு நாளும் செய்வதால் சிறந்த பலனை வெகு விரைவில் பெறலாம்.

## பலா பலன்கள்

1. பக்க விளைவற்றது.
2. தலைமயிர் பளபளப்பாகவும், தடிப்பாகவும் வளர உதவும்.
3. மண்டையோட்டில் எவ்வித படிவுகளையும் படியவிடாது.

## கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| **SCARBOROUGH** | | |
| இரா சுப்பர் மார்க்கட் | (Midland & Eglinton) | 416-269-2622 |
| சங்கர் அன் கோ | (Kennedy & Eglinton) | 416-759-5100 |
| சுரபி | (Birchmount & Eglinton) | 416-285-8518 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (Markham & Eglinton) | 416-266-5025 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (New Location) | 416-264-1546 |
| எஸ். பி. இம்போட்டர்ஸ் | (Brimley & Lawrence) | 416-266-3077 |
| நியூ ஸ்பைசி லாண்ட் | (Markham & Sheppard) | 416-292-9769 |
| ஜவ்னா சுப்பர் மார்க்கட் | (Markham & Tuxedo Crt.) | 416-289-8812 |
| யாழ்நகர் ரேடர்ஸ் | (Midland & Ellesmere) | 416-285-0587 |
| யாழ்ரன் மார்க்கட் | (Warden & Finch) | 416-494-9494 |
| டெயிலி நீட்ஸ் | (Pharmacy & Finch) | 416-490-7703 |
| **MARKHAM** | | |
| பிரியாஸ் | (Kennedy & Denison) | 905-944-1229 |
| பிரியாஸ் | (Brimley & Steeles) | 905-415-8501 |
| **BRAMPTON** | | |
| S.T. P. MARKET | (Kennedy / Steeles) | 905-455-3483 |
| **MISSISSAUGA** | | |
| தர்ஷனாஸ் | (Dundas & HWY 10) | 905-270-7576 |
| தர்ஷனாஸ் | (Field Gate & Bloor) | 905-625-8152 |
| **TORONTO** | | |
| துவாரகாஸ் | (Victoria Park & Eglinton) | 416-757-1091 |
| நீகல் குறோசரி | (Victoria Park & St. Clair) | 416-755-6724 |
| றோயல் குறோசரி | (Victoria Park & Danforth) | 416-693-8078 |
| யாழ் சுப்பர் ஸ்ரோஸ் | (Wellesley & Parliament) | 416-923-9806 |
| தனா சுப்பர் மார்க்கட் | (Queen & Jemeson) | 416-534-7770 |
| பாலா பிறதர்ஸ் | (Landsdowne & Bloor) | 416-532-6809 |
| ஏஜிபி | (Landsdowne Subway) | 416-531-3306 |
| **ETOBICOKE** | | |
| சுபினா சுப்பர் மார்க்கட் | (Keele & Sheppard) | 416-638-9554 |
| ஐயம்ஸ் குறோசரி | (Jane & Finch) | 416-636-0884 |
| உதயாஸ் | (Kipling & Steeles) | 416-740-7971 |
| **MONTREAL** | | |
| மார்சே மாருதி | (155 Jean Talon East) | 514-270-9511 |
| மார்சே எமி | (6455 Victoria Ave.) | 514-731-5368 |
| மார்சே துர்க்கா | (Parc Metro) | 514-276-9262 |
| மார்சே அலெக்ஸ்சாண்டியா | (Cote Desneiges) | 514-737-0612 |
| மார்சே மெயில்ஸ் | (Sauve / St. Laurent) | 514-389-5236 |
| மார்சே A.M.R. | (Cote Vertu / Sauve) | 514-334-6737 |

# இவ்வாரச் சிறுகதை

# யாக குண்டம்

## செங்கை ஆழியான்

**வா**னத்தின் உச்சியிலிருந்து விண்மீன் ஒன்று ஓயாமல் நடுங்கிக்கொண்டிருந்தது. ஒரு கணம் ஒளி வீசுவதும் மறுகணம் அணைவதுமாக இருந்த அந்த நட்சத்திரம் கண்சிமிட்டுவதாக எனக்குப் படவில்லை. அது முதிர்ந்த வயோதிபத் தளர்ச்சியால் நடுங்குவதாக எனக்குப் பட்டது.

என் மனசின் இயக்கம் அப்படி அசைகின்ற எதனைக் கண்டாலும் தளர்ச்சியால் நடுங்குவதாகவே எனக்குப் படும். கடந்த ஐந்தாண்டுகளாகத் தான் எனக்கு இந்தப் பிரமை.

என் சூழல் அப்படி.தளர்ச்சிகளிடையே வாழ்பவன் நான். வாழ்க்கையின் நீண்ட பயணத்தை முடித்துக் கொண்டு இறுதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கிழங்களிடையே என் வாழ்க்கை கழிகின்றது. அது தான் என் கடமை.

வயோதிப மடம் ஒன்றின் மேற்பார்வையாளனாகஎன்று பொறுப்பேற்றேனோ அன்றே எனக்கு வாழ்க்கையின் தத்துவம் புரிந்து சின்னத்தனமான உலகத்தினரின் உள்ளங்களும் புரிந்தன.

உடல் தளர்ந்த வயோதிபர்களும் உள்ளம் தளர்ந்த வயோதிபர்களும் அம்மடத்தில் இறுதியை எதிர்பார்த்துப் பொழுதைக் கழித்தார்கள். அவர்களைத் தினமும் காண்கிறேன். அவர்களின் இன்பதுன்பங்களில் தினமும் பங்கு கொள்கிறேன்.

வானத்தில் உச்சியிலிருந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றதே நட்சத்திரம். அது ஏனோ இன்று எனக்குச் சாம்பசிவத் தாத்தாவை நினைவுபடுத்துகின்றது.

சாம்புத் தாத்தா எவ்வளவு இனிமையானவர். இவ்வயோதிப மடத்திற்கு அவரால் எவ்வளவு களை? சாம்புத் தாத்தா அவ்வயோதிப மடத்திற்கு வந்த வேளையும் நான் மேற்பார்வையாளனாகப் பதவி பெற்ற வேளையும் ஒரே நாள். நான் முதல் முதல் வயோதிப மடத்தில் சேர்த்த முதல் வயோதிபர் அவர் தான். அந்த நாள் இன்றும் எனக்குப் பசுமை மாறாது இருக்கின்றது.

மழை பெய்து ஓய்ந்திருந்த ஒரு மாலைவேளை. என் அறை வாசலின் முன் யாரோ வந்து நிற்பது போன்ற பிரமை ஏற்படவே தலை நிமிர்ந்து பார்த்தேன். ஒரு வயோதிபர் நின்றிருந்தார்.

பால்போல் தலைமயிர் வெண்மை; உடலில் சுருக்கங்கள் கண்டு தளர்ந்திருந்தன. துல்லியமான வேட்டி,சால்வை, வழுக்கை விழுந்த பளபளப்பான தலை. மழையில் நனைந்திருக்கின்றார் போல் இருக்கின்றது.

உடலில் மெதுவான நடுக்கம். வலக் கையால் தடியொன்றை இறுகப்பற்றி ஊன்றியபடி இடக்கையால் கதவு நிலையைப் பற்றியபடி அவர் நின்றிருந்தார். வானத்தின் உச்சியிலிருந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றதே. இந்த நட்சத்திரம். அதைப்போலத் தான்அன்றே அவர் நின்றிருந்தார்.

அவர் விழிகளை என் கண்கள் சந்தித்தன. எவ்வளவு பரிதாபகரமானது.

''வாருங்கள் .தாத்தா உங்களுக்கு என்னவேண்டும்?''

தயங்கியபடி உள்ளே நுழைந்த அவர் என் முன் இருந்த கதிரையில் அமர்ந்தார். நிம்மதியான நெடுமூச்சு எடுத்தது. சால்வையால் தலையையும் முகத்தையும் ஒத்திக்கொண்டார்.

''ஏன் தாத்தா அறையை விட்டு மழைக்கை வந்தீர்கள்?''

என் கேள்வி அவருக்கு விளங்கவில்லை என்பதை உடன் நான் கண்டு கொண்டேன். நான் தவறான கேள்வியைக் கேட்டு விட்டேன். அவர் இந்த வயோதிப மடத்தில் இருப்பவர்களில் ஒரு வர் என நான் தவறாகக் கருதிவிட்டேன். அவர் இந்த மடத்தில் புதிதாகச் சேருவதற்காக வந்திருக்கின்றார்.

''என் பெயர் சாம்பசிவம். தம்பி.. என்னையும் இம்மடத்தில் சேர்த்துக் கொள்வீர்களா?''

''அனாதைகளுக்காகத் தான். இந்த மடம் தாத்தா. அனாதை என்றால் எவரையும் சேர்த்துக் கொள்வோம். உங்களுக்குப் பிள்ளைகள் இல்லையா?''

''பிள்ளைகள் இருக்கிறவர்கள் அனாதைகளாவதில்லையா?''

அவருடைய கேள்விக்கு என்னால் உடனடியாகப் பதில் கூறமுடியவில்லை. வயோதிப மடத்தில் இருப்பவர்கள் எல்லோரும் அனாதைகளல்லர். பிள்ளைகளாலும் உற்றாராலும் புறக்கணிக்கப்பட்டு வந்து ஒதுங்கிய ஜீவன்கள் இங்கு அதிகம் தான்.

'வயோதிப மடம் இந்நாட்டிற்கு ஒரு வகையில் அவமானம்' என்று நான் சில வேளைகளில் நினைப்பதுண்டு. பெற்று வளர்த்து சீராட்டிப் பாராட்டி பாலூட்டி ஆளாக்கிய பெற்றோரை நன்றி மறந்து தங்களுக்கு இடைஞ்சல் என்று கருதி, வயோதிப மடத்தில் பெரிய இடங்களின் சிபார்சுகளோடு கொண்டு வந்து தள்ளிவிடும் புண்ணியவான்களை நான் கண்டிருக்கின்றேன். நாளைக்கு இவர்களுக்கு இந்நிலை வராது என்பது என்ன நிச்சயம்?

உண்மையிலேயே யாரும் கவனிப்பதற்கு இல்லாத அனாதைக் கிழவர்கள் இங்கு இருக்கின்றார்கள் தான்.

சாம்புத் தாத்தாவின் கேள்வியில் நியாயம் இருக்கவே செய்தது. அவர் தொடர்ந்தார். அவர் விழிகள் நீரைச் சொரிந்தன.

''தம்பி..உண்மையில் நான் அனாதை.. எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றார்கள். நல்ல நிலையில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் இப்போது உதவாதவன். என்னால் எனக்குத் தேவையானவற்றை தேடிக்கொள்ளவும் உடம்பில் பலமில்லை. நான் அனாதை தான்..''

பரிதாபத்துக்குரிய மனிதர் தான். இவரைப் போல எத்தனை பேர்?

''உங்களை இங்கே சேர்த்துக் கொள்ளச் சட்டம் இடம் கொடுக்கவில்லையே தாத்தா..?''

அவர் சிரித்தார்.

''அதுக்காகத் தான் தம்பி விதானையிட்டையும் டிஆர்விட்டையுமிருந்து காகிதம் வாங்கி வந்திருக்கின்றன்''

அவ்வாறாயின் நிச்சயம் அவர் அனாதை தான். சாம்புத் தாத்தா வயோதிபர் மடத்திற்கு வந்து ஐந்தாண்டுகள் கழிந்துவிட்டன. அவர் நேற்று வந்தது போலத் தான் இருக்கின்றது. அவர் வந்த பிறகு இம்மடத்தில் எத்தனை மாற்றங்கள்?

மடத்தைச் சுற்றி வரண்ட கட்டாந்தரையே விரிந்து கிடந்தது. இன்று அத்தரையில் குலைகளைத் தள்ளி குட்டிகள் ஈன்று செழித்து வாழை மரங்கள் வளர்ந்திருக்கின்றன. கிணற்றங்கரையை அடுத்துக் காய்கறித் தோட்டம் . எல்லாம் சாம்புத் தாத்தாவின் முயற்சி தான். சோம்பிக் கிடந்த கிழவர்கள் எல்லாம் இன்று சாம்புத் தாத்தாவோடு ஏதோ தம்மாலியன்ற அளவு வேலை செய்கின்றனர். கிடைக்கின்ற பயனில் இங்குள்ள நூற்றியம்பது கிழவர்களுக்கும் பங்குண்டு. அவர் அடிக்கடி என்னை நாடி வருவார். அவர் வருகையை நானும் விரும்பினேன்.

''தம்பி நமது மடத்திற்கு பத்திரிகைகள் ஒழுங்காக வருவதில்லை. ஒருக்காக் கவனியும்..''

கவனித்தால் உண்மை புலனாகும்.

வாசிகசாலைக்குப் பொறுப்புள்ளவர் தமது அறையில் பேப்பர்களைப் பூட்டி வைத்திருக்கும் மர்மம்.

''தம்பி..'' என்று ஒரு நாள் தயங்கினார் சாம்புத் தாத்தா.

''என்ன தாத்தா..?''

''வெள்ளிக்கிழமைகளில் எங்களுக்குப் பாயாசமும் தர ஒழுங்கு செய்து தாரும். ஆசைப்படுகினம்..''

எனக்குக் கண்கள் கலங்கின. எவ்வளவு ஆசைகளைத் தான் இந்த வயோதிபர் வைத்திருக்கின்றார்கள்?

''செய்து தரச் சொல்கிறேன் தாத்தா. வேறும் ஏதாவது தேவையென்றால் தயங்காமல் கேளுங்கள்.''

அவ்வயோதிப மடத்தில் ஒருவித மலர்ச்சியும் மகிழ்ச்சியும் குடி கொள்ளத் தொடங்குவதை நான் அவதானித்தேன். தங்களுக்குச் சொந்தமான வீட்டில் ஓடிஆடிப் பழகுவதைப் போல அங்கு எல்லாரும் திரிந்தார்கள்.

வயோதிப மடத்து வேலைக்காரர்களுக்கும் வேலைகள் குறைந்தன. ஒரு வயோதிபருக்குச் சுகமில்லை என்றால் மற்றவர்கள் அவரைப் பரிவோடு கவனித்தார்கள். சாம்புத் தாத்தா சாகக் கிடக்கும் வயோதிபர்களின் மலசலத் துணிகளைக் காவிச் செல்வதைப் பல தடவைகள் நான் கண்டிருக்கிறேன்.

''உங்களுக்கு ஏன் தாத்தா. இது வேலைக்காரர்கள் கவனிப்பார்களே?

''இல்லை தம்பி இதிலே என்ன குறை.. தாய் தோப்பனுக்கு கடைசிக் காலத்தில் பிள்ளைகள் செய்யவேண்டிய வேலை இது. பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு நான் செய்கிறேன்.'' அவ்வேளைகளில் அவர் விழிகள் கலங்கும். எதை எண்ணிக் கலங்குவாரோ?

நான்கு பிள்ளைகளின் தந்தை அவர். இன்று..? சாம்புத் தாத்தாவைத் தேடி எந்த ஒரு பிள்ளையும் இதுவரை காலமும் இங்கு வந்ததை நான் காணவில்லை. ஆனால் சாம்புத் தாத்தாவின் பிள்ளைகள் நல்ல நிலையில் இருக்கின்றார்கள் என்பதை நான் பல தடவை அறிய நேர்ந்திருக்கின்றது.

மாலை வேளைகளில் மடத்தின் மாமர நிழலில் கும்பல் கும்பலாக அமர்ந்து வயோதிபர்கள் பலதையும் பேசிக் கொள்வார்கள். அங்கு அடிபடாத விஷயமே



கிடையாது.

வாழ்க்கை..வாழ்க்கை... சீரழிந்து போன கதை.. பிள்ளைகளின் தறுதலைத்தனம்.. அரசியல்.. எல்லாம் அவர்கள் பேச்சில் இடம் பெறும்.

''நீ உன்ரை தாய்தோப்பனை வடிவாகக் கவனிச்சிருந்தால் உன்னை இண்டைக்கு உன்ரை பிள்ளைகள் கைவிட்டிருக்குமோ?'' என்பார் ஒரு கிழவர்.

''விசர்க்கதை கதைக்கிறாய்? அது என்ரை விதி.. அளந்த அளவு அவ்வளவு தான். நீ என்ன திறமோ?''

''நான் மலடன்''

சாம்புத் தாத்தா வந்தால் அங்கு ஒருவகை அமைதி நிலவும்.

''உங்களுக்கு இந்தக் கதைகளை விட்டால் வேறு பேச்சில்லை. ஏதோ எப்படியோ இங்கை வந்திட்டம்.இனி அதைப் பேசிக் கவலைப்பட்டு என்ன பயன்? இங்கையாவது சந்தோஷமாக இருக்கப் பாருங்கோ.. '' என்பார்அவர்.

''இண்டைக்குஇரவு என்ன சாப்பாடு?'' என்று சாம்புத் தாத்தாவைக் கேட்பார்கள்.

''களி..'' என்பார் அவர். ஒவ்வொரு நாளும் என்னவென்ன சாப்பாடு என்று அவருக்குத் தான் தெரியும்.

வானத்தின் உச்சியிலிருந்து அந்த நட்சத்திரம் இன்னமும் நடுங்கிக்கொண்டு தான் இருக்கின்றது. கடந்த இரு தினங்களாக வயோதிப மடத்தில் என்றுமேயில்லாத சோகம் குடிகொண்டுவிட்டது. எல்லா வயோதிபர்களும் எதையோ பறிகொடுத்தவர்கள் போல உலாவினார்கள். சாம்புத் தாத்தா படுத்த படுக்கையாகிவிட்டார். வைத்தியர்களும் கைவிரித்துவிட்டார்கள். என்னைப் பெற்ற தந்தையைப் பறிகொடுப்பது போல் என் உள்ளம் வருந்துகின்றது. வயோதிப மடத்தில் எத்தனையோ பேர் இறக்கின்றார்கள் என்றாலும் சாம்புத் தாத்தாவை இழக்க மடம் தயாராக இல்லை.

மாபெரும் தலைவர் ஒருவரை இழப்பதா? எட்டு நாட்களுக்கு முன் அவர் நல்ல ஆரோக்கியத்தோடு தான் இருந்தார். என்னை அன்று மாலை சந்தித்த காட்சி மறக்கக் கூடியதா?

''தம்பி நாளைக்கு சிவராத்திரி.. ''

''அதுக்கு என்ன தாத்தா.. ? ஏதாவது விசேட உணவு தேவை யா?'' அவர் சிரித்தார்.

அப்படியில்லை தம்பி.. நாங்க நித்திரை முழிக்க விரும்பு கின்றோம்''

''உடம்புக்கு ஒத்து வருமா.. தாத்தா.. ?''

''அதிலென்ன வருடத்தில் ஒரு நாள் தானே?'' அதுக்கு நான் என்ன செய்யவேண்டும்?''

''இங்கு கதாப் பிரசங்கம் ஒன்று க்கு ஏற்பாடு செய்து தாரும் தம்பி...''

அவருடைய வேண்டுகோள் நியாயமானதாகவே பட்டது. கதாப் பிரசா ங்கங்களும் பஜனை களும் வயோதிப ர்களுக்கு நிம்மதியைத் தரக்கூடியனவே. சாம்புத் தாத்தா நியாயமல்லாதவற்றை ஒரு போதும் கேட்கமாட்டார்.

ஒழுங்கு செய்து கொடுத்தேன்.வயோதிபர்கள் மிகுந்த மகிழ்வோடு சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்தார்கள்.

மறுநாள் சாம்புத் தாத்தாவை நான் கண்டபோது அவர் சோர்ந்து காணப்பட்டார்.

''என்ன தாத்தா.. நித்திரைத் தூக்கக் களைப்பா?''

''இல்லை தம்பி... நேற்றுக் கதாப்பிரசங்கம் செய்தவர் கூறிய ஒரு விஷயம் மனதைக் குழப்புகின்றது.

சாம்புத் தாத்தாவை நான் நிமிர்ந்து பார்த்தேன். அந்த முகத்தில் கருணை பொழியுமே? ஒருவகை வைராக்கியம் எப்படிக் குடி வந்தது? அவர் தொடர்ந்தார்.

''முனிவர்களும் அசுரர்களும் யாகம் செய்தார்கள். முனிவர்கள் யாககுண்டத்தில் நெய்யையும் பாலையும் பொரியையும் அவியாக இட்டார்கள். அக்குண்டத்திலிருந்து தேவன் ஒருவன் தோன்றினான். அசுரர்கள் இரத்தத்தையும் ஊனையும் அவியாக இட்டார்கள். அவர்களது குண்டத்தில் இருந்து பூதம் தோன்றியது.''

நான் அவரை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் நெற்றி வியர்வையை ஒத்திக்கொண்டு ஆவேசத்தோடு பேசினார்.

''எங்கள் இதயமும் ஒரு யாக குண்டம் தான் தம்பி.''

அவருக்குப் பெருமூச்சு வாங்கியது. நான் அவரை ஆசுவாசப்படுத்தினேன். உண்மை தான். இன்று நினைத்துப் பார்க்கும்போது உண்மை புலனாகத் தான் செய்கிறது. பிள் ளைகளால் நன்கு பராமரிக்கப்படாது ை விடப்பட்ட வயோதிபத் தந்தை தாய்களின் இதயங்கள் யாக குண்டங்கள் தாம்.பிள்ளைகள் அக்குண்டத்தில் சொரிந்த அவி தேவனாக நிச்சயம் உருவாகாது. பூதந்தான் தோன்றும்.

சாம்புத் தாத்தாவின் இதய குண்டத்திலிருந்து தேவனா, பூதமா தோன்றியது என என்னால் நிச்சயம் கூற இயலவில்லை. முந்தா நாள் சாம்புத் தாத்தா என்னைப் பார்க்க விரும்புவதாக அறிந்து போனேன். வெட்டிச் சரிந்த வாழைமரமாக அவர் படுக்கையில் கிடந்தார்.

''தம்பி..'' அவர் குரல் இதய அடிவாரத்திலிருந்து எழும் ஒடுங்கிய குரலாகக் கேட்டது. ''என் பிள்ளைகளை ஒருக்கா நான் பார்க்கவேணும்;அறிவித்துவிடுகிறாயா,தம்பி..''

நான் மறுக்கவில்லை. மறுக்கும் அதிகாரம் எனக்கில்லை.

சாம்புத் தாத்தாவைத் தந்தையாகப் பெற்ற அப்புண்ணியவான்களை நான் ஒரு தடவை காணத்தான் வேண்டும். இனிய ஒரு தந்தையை இறுதிக்காலத்தில் பராமரிக்கக் கொடுத்து வைக்காத அந்த துரதிர்ஷ்ட சாலிகளை நான் ஒரு தடவை காணத் தான் வேண்டும்.

நான்கு பேருக்கும் நான் செய்தி அனுப்பினேன். இரண்டு நாட்களுக்குப் பின் இருவர் ஓடோடி வந்தார்கள்.

சொந்தக் கார்,பளபளப்பான ஆடை, நல்ல வசதியோடு தான் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் முதலில் என்னிடம் வந்து என்னைச் சந்தித்தார்கள்.

''சாம்பசிவம் என்பவர் பிள்ளைகள் நாங்கள்..''

''ஓ..அப்படியா? உட்காருங்கள்..

(27ம் பக்கம் பார்க்க)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்:
10.03.1962

விண்ணுலகில்:
20.04.2001

### திருமதி மேரி எட்னா யூலியந் மமான்ஸ்
**சின்னமலர் - பாஷையூர்**

எங்கள் அன்பின் குலவிளக்கே! என் இனிய சின்ன மலரே!
காலங்கள் தான் ஒன்றாகிவிட்டது காலன் அவன் உமையழைத்து
பாசத்தின் புகலிடமாக, பண்பாக எமை அணைத்து
பரிதவிக்கவிட்டுச் சென்றதேனம்மா?
நாம் பெற்றெடுத்த முக்கனிகளுக்கு இன்று
உம் முகம் காட்ட மறந்து சென்றதேனம்மா?
உம் நினைவு என்றும் மாறாது...
நினைத்து நினைந்து துடிதுடித்து கலங்கி நிற்கிறோம்.

எதிர்வரும் 20.04.02 சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு Eglis St. Jean, 05 rue Henri Matisse, Galion. என்னும் முகவரியிலுள்ள தேவாலயத்தில் நடைபெறவுள்ள எமது அன்புத் தெய்வத்தின் 1-ம் ஆண்டு நினைவுத் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். RER (B) Villepinte, Bus: 615, 617 - தரிப்பிடம்:Galion.

**என்றும் நீங்காத நினைவுகளுடன் அன்புக் கணவர், பிள்ளைகள், பெறாமக்கள், தாய், சகோதர - சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்.**
**தொடர்புகளுக்கு: 01 48 69 04 83**

## மரண அறிவித்தல்



### திருமதி கனகரட்ணம் இராசம்மா

கைதடி நுணாவிலைச் சேர்ந்த திருமதி கனகரட்ணம் இராசம்மா அவர்கள் 11.04.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா, திருமதி பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், கந்தையா கனகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிமுத்து, காலஞ்சென்ற கதிரவேலு, பாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரின்பம் (ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி), கணேசலிங்கம் (பிரான்ஸ்), தவபாலன் (இலங்கை), துணம் (பிரான்ஸ்), தேவராணி (இலங்கை), சுசீலா (இலங்கை), மல்லிகா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஷ்பமலர், மகேஸ்வரி (கலா - பிரான்ஸ்), யோகேஸ்வரி, சிவசக்தி (பிரான்ஸ்), நித்தியானந்தம், செந்தில்நாதன், ஜெயராஜா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சமிலா, லதன் (லண்டன்), சேரன், திலக்ஷன் (பிரான்ஸ்), தினோஷா (பிரான்ஸ்), லக்ஸன், நிருத்தி, கோபி, பிரவீன் (பிரான்ஸ்), குமிந்தன், பிரதா, பிரவின், பிரிதா, ஜனுஷன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: கணேசலிங்கம் (பிரான்ஸ்) - 01 48 38 66 47, குணம் (பிரான்ஸ்) - 01 43 57 65 41, மல்லிகா ஜெயராஜா (இத்தாலி) - 0916 829 254, லதன் (லண்டன்) - 0145 589 1028
**தகவல்: கணேசலிங்கம்.**

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சரவணமுத்து வல்லிபுரம்
**புங்குடுதீவு 11-ம் வட்டாரம்**

மலர்வு: 17.08.1944 (புங்குடுதீவு)
உதிர்வு: 16.04.2001 (பிரான்ஸ்)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த
எமது அன்புத் தெய்வமே!
எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு கழிந்தும்
கண்ணீரிலே வாழுகின்றோம்.
பொன்னான வார்த்தைகளை கேட்பதற்கு ஏங்குகிறோம்.
எத்தனை உறவுகள் இருந்தாலும் உங்களது
உறவுக்கு யாரும் ஈடாகாது.
உங்களது ஆத்மா சாந்தியடைய அன்னை
கண்ணகையின் பாதங்களை வேண்டுகின்றோம்.

**நீங்காத நினைவுகளுடன்**
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை, உற்றார், உறவினர்.

## எங்கள் கண்கண்ட தெய்வத்தின்
## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர்
### திருமதி குழந்தைவேலு சர்வலோகலெட்சுமி
5-ம் வட்டாரம், பெரியபுலம், புங்குடுதீவு.

மறைவு: 19.04.1999
திதி: 15.04.2002

எங்கள் கண்கண்ட தெய்வமே அம்மா!
கருவறையில் நீ சுமந்தாய்!
கண்விழித்து வளர்த்தாய்!
கலங்கரையாய் திகழ்ந்தாய்!
கருணையுடன் ஆதரித்தாய்!
எங்கள் மனதில் தெய்வமாய் வாழ்ந்து
கொண்டிருக்கும் எமதருமை அம்மாவே!
மூன்றாண்டு காலம் சென்றாலும் உங்கள்
நினைவு எங்கள் மூச்சுள்ளவரை மறவோம்
அம்மா!
உங்கள் அன்பு கனிந்த அரும் சொல்தான்
அம்மா
அமுதாக எம் வாழ்வில் இனிக்கின்றது!
பாசம் நிறைந்த உங்கள் பார்வைதான் அம்மா
பலத்தை எமக்கு வழங்குகின்றது!
நேசம் நிறைந்த உங்கள் நினைவுதான் அம்மா
நித்தம் நெஞ்சை உருக்குகின்றது!
அறிவை அள்ளித்தந்த உங்கள்
அரும் செயல்தான் அம்மா
அன்றாடம் எம்மை
வாழ்விக்கின்றது!
எத்தனை பிறப்புக்கள்
எடுத்தாலும் மீண்டும்
உங்கள் பிள்ளைகளாகவே
பிறந்திட வேண்டுவோம்!
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா அரனடியில் நித்திய
சாந்திபெற எல்லாம் வல்ல
புங்குடுதீவு இறுப்பிட்டி பெரியபுலம்
ஸ்ரீ வீரகத்தி விநாயக பெருமானை
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நீங்காத
நினைவுகளுடன் வாழும்
அன்பு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: மகன் கு. தில்லைநாதன் (தில்லை)
பிரான்ஸ்.

# மரண அறிவித்தலும் 31-ம் நாள் நினைவஞ்சலியும்



தோற்றம்
14.02.1939



மறைவு
24.03.2002

## அமரர் சின்னத்தம்பி முத்துக்குமார்

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், இலங்கை சுழிபுரம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்துக் குமார் அவர்கள் 24.03.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட் டார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிர்காமு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சுழிபுரத் தைச் சேர்ந்த பொன்மணி அவர்களின் அன்புக் கணவரும், றஜனி (ஜெர்மனி), றஜி (ஜெர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாதன் (ஜெர்மனி), குணா (ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தாமோதரன், சுஜானி, உசானி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நாகம்மா, தமயந்தி (புத்தளம்), ராசமணி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற சிவனேசன், திருமதி ராசமணி, காலஞ்சென்ற மாரிமுத்து, மீனாட்சிப்பிள்ளை (சுழிபுரம்), காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பாக்கியம் (சிங்கப்பூர்), கைலாயபிள்ளை (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.03.2002 அன்று நடைபெற்றது.

அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் எமது துயரத்தில் பங்குகொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அனைவர்க்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


அன்னாரின் 31-ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு 23.04.2002 அன்று சுழிபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்: திருமதி பொன்மணி முத்துக்குமாரும் பிள்ளைகளும்.

Tel: 0049-211 480 616 or 0049-208 635 2602

# மரண அறிவித்தல்





## திருமதி சிதரம்பரம் தம்பியையா

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி

சாவகச்சேரி - நுணாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சிதம்பரம் தம்பியையா அவர்கள் 19.04.2002 வெள்ளிக் கிழமை கொழும்பு வெள்ளவத்தையில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும், தேவராசன் (லண்டன்), கந்தராசா (லண்டன்), பாக்கியராசா (இலங்கை), தங்கராசா (ஜெர்மனி), இரத்தினராசா (லண்டன்), இராசநாயகம் (லண்டன்), துரைசிங்கம் (லண்டன்), சண்முகராசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராணி, வசந்தமலர், சுவேந்தினி, மாலதி, வேதநாயகி, சரிதா, மயூரதி ஆகியோரின் அன்பு மாமியாரும், பாரத், பிரதீப், கிஸ்திகா, சர்மிகா, மகீதன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.04.2002 புதன் கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**தொடர்புகளுக்கு:**

**த. இராசநாயகம் (லண்டன்) - 020 8882 0916, தங்கராசா (ஜெர்மனி) - 179 110 6168, மகேஸ்வரன் (லண்டன்) - 020 8640 2081, ரஞ்சிதமலர் (இலங்கை) - 7885 8481, இராசசிங்கம் (இலங்கை) - 7735 4872, வல்லிபுரநாதன் (இலங்கை) - 7860 9780**

**தகவல்: மகன்கள்.**

## நமது சிறுகதை.... (18ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைக் காணும்போது என் இதயம் கடலாகக் குமுறியது.
''அவருக்கு எப்படி?''
''மிகக் கடுமை தான் இன்றைக்கோ நாளைக்கோ?''
அப்படியா பிணத்தை எங்களிட்டை கொடுத்திடுங்கோ. அவருடைய இறுதி யாத்திரையைப் பெரிசாகச் செய்யவேணும்.
கட்டாயம் செய்யவேணும். எங்க கடமை அது.?''
''ஏன் இப்பவே கொண்டு போங்களேன்.''
''சீச்சீ.. உசிரோடை வேண்டாம். உமக்குத் தெரியாததோ? கிழடுகளைப் பராமரிப்பதுமிக கஷ்டம். சீவன் போனவுடனை அறிவியுங்கோ.. இப்ப அவரை ஒருக்காப் பார்க்கலாமே?''
என்னால் பொறுக்கமுடியவில்லை.
''இப்ப என்னத்துக்கு? சீவன் போனவுடன் பாருங்கோ...''
அவர்கள் என்னை வெறுப்போடு பார்த்தார்கள். என் குரலிலிருந்த வெறுப்பையும் அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்தையும் உணர்ந்து கொண்டேன்.
''எங்கடை 'பாதரை' பார்க்க நீர் தடைசெய்யமுடியாது.''
''இவ்வளவு காலமும் நீங்களோ பாத்தனீங்கள்? சும்மா போங்கள்.. நாளைக்கு உங்கட பிள்ளைகள் உங்களை இங்கை கொண்டு வந்து தள்ளிவிடாமலா போகப் போகுதுகள்.. செத்தபிறகு அறிவிக்கிறேன். விரும்பினால் வந்து பிணத்தைக் கொண்டு போய் ஊருக்குக் காட்டுங்கள்.''
அவர்கள் போன பிறகு நான் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டதாக உணர்ந்தேன். நான் வயோதிபமட மேற்பார்வையாளன். உணர்ச்சிவசப்பட எனக்கு இவ்விஷயத்தில் உரிமையில்லை.
வானத்து நட்சத்திரம் ஓயாமல் நடுங்கிக்கொண்டு தான் இருக்கின்றது. எனக்குத் தூக்கம் வர மறுக்கின்றது. சாம்புத் தாத்தா இப்போது எப்படி இருக்கின்றாரோ?
அறையை விட்டு வெளியே வந்தேன். என் கால்கள்அவர் இருந்த அறையை நோக்கி நடந்தன.
மங்கலான விளக்கு ஒளியில் சாம்புத் தாத்தா வாங்கிலில் கிடக்கின்றார். அவரைச் சுற்றி அவரது தோழர்கள் விழிநீரைச் சுமந்து இருக்கின்றார்கள்.
தாத்தாவின் பக்கத்தில் போய் நான் அமர்கிறேன். நான் ஏன் அழுகிறேன்? என் கண்கள் ஏன் நீரைச் சொரிகின்றன?
''தாத்தா.. சாம்புத் தாத்தா..''
அவர் மெதுவாக விழித்து என்னைப் பார்க்கின்றார்.
ஏதோ கூற அவர் உதடுகள் துடிக்கின்றன. குனிந்து அவர் உதட்டோடு வலக்காதைப் பொருத்துகின்றேன்.
''தம்பி..என் பிணத்தை இங்கேயே எரித்துவிடு..''
சாம்புத் தாத்தா போய்விட்டார். எல்லா வயோதிபர்களும் கதறி அழுகின்றார்கள்.
நான் வெளியே எழுந்து வருகின்றேன். சாம்புத் தாத்தாவின் யாக குண்டத்திலிருந்து வெளியே வந்தது பூதந்தான்.




# உங்கள் அபிமான ஈழநாடு

## 21.03.2002 முதல் புதிய பரிமாணத்தில

## உங்களையும் உங்கள் உறவுகளையும் இணைக்கும் பாலமாக உங்கள் அபிமான ஈழநாடு

எம் இனிய வாசகர்களே! வணக்கம்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் இதுவரை காலமும் பிரசுரிக்கப்பட்டு வந்த அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள் கனடா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா உட்பட்ட மேற்குலக நாட்டுத் தமிழ் உறவுகளையே சென்றடைந்தன.

21.03.2002 முதல் உங்கள் தாயகமாம் தமிழீழத்தில் (யாழ்ப்பாணம்) இருந்து வெளிவரும் உதயன் மற்றும் ஸ்ரீலங்காவிலிருந்து வெளிவரும் சுடரொளி ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரமாகும் என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

ஈழநாடு

எம் இனிய வாசகர்களே! உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள் வாழ்த்துக்கள், உறவுகளின் பிரிவுத் துயர் அறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் அத்துடன் மணமகன் - மணமகள் தேவை, காணிகள், வீடுகள் விற்பனை, சிறு விளம்பரங்கள் போன்ற அனைத்தும், ஈழநாடு பத்திரிகையில் பிரசுரிப்பதன் மூலம் உலகின் அனைத்துப் பகுதித் தமிழ் உறவுகளையும் சென்றடைகின்றன என்பதை மறந்து விடாதீர்கள்.



மேலதிக தொடர்புகளுக்கு: (416) 654-9825 அல்லது (416) 654-1867

குறிப்பு 1: யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையில் மரண அறிவித்தல்களுக்கு மட்டும் படம் பிரசுரிக்கப்படமாட்டாது.

குறிப்பு 2: விரைவில் வன்னிப் பெருநிலப்பரப்பு, மட்டக்களப்புப் பிராந்தியங்களில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளுடனும் எமது உறவுகள் தொடரவுள்ளன.

# CLAIREPORT Place


*Banquet & Convention Centre*

## தனியொரு உயர்ந்த கூரையின் கீழ்

**50 பேர் தொடக்கம் 1200 பேர் வரை கொள்ளக்கூடிய**

**அழகிய (Luxurious) 4 மண்டபங்கள்**





திருமணம்
பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழா
ஒன்று கூடல் மற்றும் சகல
வைபவங்களுக்கும் நாடுங்கள்.

**416-675-7700**
**416-460-7700**




என்றும் உங்கள் சேவையில்



Contact: Jey or Sasi

65 Claireport Crescent, Etobicoke, Ont. M9W 6V5
Between Steeles & Finch on Albion Road
www.claireportplace.com E-mail: info@claireportplace.com

---




உங்கள் உடல்,
உள
நலம் பேண

## வைத்திய நிலையம்

**டாக்டர் யசோ தர்மரத்தினம்**
குடும்ப வைத்தியர்
*(யாழ். வைத்தியசாலையில் பலவருட அனுபவம் பெற்றவர்)*

Dr (Mrs) YASHO THARMARATNAM
(MBBS, MD), (CCFP)

## FAMILY DOCTOR




2466 Eglinton Ave. East, Unit 03
Scarborough, ON M1K 5J8
*(Near Kennedy Subway Station)*

**(416) 266-7786**

---

## IMMIGRATION SERVICES

- அகதிக் கோரிக்கை
- நிரந்தர வதிவிட உரிமை
- குடிவரவு மேன்முறையீடு
- மனிதாபிமான மனு
- தடை உத்தரவுப் பரிசீலனை
- குடும்ப விவகார வழக்குகள்

அமெரிக்க எல்லைகளில், சிறைகளில் உள்ளவர்களை உடனடியாக விடுவித்தல்

குடிவரவு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நாம் உங்களுக்குச் சிறப்பாக உதவ முடியும்

**குடிவரவுச் சேவைகள்**
சாம் நாகேந்திரா
(குடிவரவு ஆலோசகர் / மொழிபெயர்ப்பாளர்)

ROBERT I. BLANSHAY
Barrister & Solicitor
49 St. Nicholas Street
*(Yonge/Wellesley)*
TEL: (416) 413-4955
FAX: (416) 413-1649

**SAM NAGENDRA**
**TEL: (905) 405-9615**
24 HRS. PAGER: 360-9230
EMAIL: nage@sprint.ca

**LEGAL AID ACCEPTED**

# ஆரோக்கிய ஆலோசனைகள்

## கல்லீரல் பிரச்னைகள்

பிற உறுப்புக்களில் சீழ் கட்டிகள் தோன்றுவது போலவே கல்லீரலிலும் சீழ்க்கட்டிகள் தோன்றும். இவை இரண்டு வகைப்படும்.
1. பிற கிருமிகளால் ஏற்படும் சீழ்க்கட்டி.
அமீபா கிருமியினால் ஏற்படும் சீழ்க்கட்டி.
பிற கிருமிகளால் ஏற்படும் சீழ்க்கட்டி
இவை அரிதாகவே ஏற்படும்.
பின்வரும் காரணங்களால் உருவாகும்.
1. பித்த நீர் செல்வதில் அடைப்பு ஏற்பட்டாலும் இதனால் பித்தப்பை அழற்சி இருந்தாலும் அவை கல்லீரலுக்குப் பரவி அங்கு சீழ்க்கட்டி ஏற்படும்.
2.இரத்தக் குழாயின் வழியாக இரத்தத்தின் மூலமாகவும் கிருமிகள் பரவி கல்லீரலுக்குச் சென்று அங்க சீழ்க்கட்டிகளை உண்டாகும்.
3 .அடிபடுவதால் ஊசி,கத்திபோன்ற கூரிய ஆயுதங்களால் கிருமிகள் உட்புகுந்து கல்லீரலில் சீழ்க்கட்டி தோன்றலாம்.
4. கல்லீரலில் உள்ள கட்டிகள் புற்றுக்களில் அழற்சி தோன்றினாலும் அங்கு சீழ்க்கட்டி ஏற்படும்.
5. அருகிலிருக்கும் அழற்சியிலிருந்து கல்லீரலுக்கு கிருமிகள் பரவி அங்கும் சீழ்க்கட்டி தோன்றலாம்.
இது போன்ற பல காரணங்களால் ஏற்படும் சீழ்க்கட்டிகள் பெரும்பாலும் வயதானவர்களுக்கே ஏற்படும்.
பித்தநீர் செல்லும் குழாயில் தடை ஏற்பட்டு பித்தப்பை அழற்சி ஏற்படுகின்றவர்களுக்கே இவ்வகை சீழ்கட்டிகள் கல்லீரலில் அதிகமாகத் தோன்றுகின்றன.
குடல்வால் அழற்சி ஏற்பட்டு கிருமிகள் கல்லீரல் வரை பரவினாலும் இவர்களுக்கு கல்லீரலில் சீழ்க்கட்டிகள் தோன்றலாம். இவ்வகை சீழ்க்கட்டிகள் இளம் வயதினருக்கு ஏற்படலாம். உடலில் எதிர்ப்புத் திறன் குறைந்தவர்களுக்கே இது போன்ற சீழ்க்கட்டிகள் தோன்றும். இது தனியாக ஒரு சீழ்க்கட்டியாகவும் இருக்கலாம். பல இடங்களிலும் சீழ்க்கட்டிகள் தோன்றலாம்.
பெரும்பாலும் இ - கோலை வகைக் கிருமியின் தாக்குதலினாலும் ஸ்ரெப்டோ காக்கஸ் கிருமிகளினாலும் பாக்டீராய்ட்ஸ் வகை கிருமிகளினாலும் இவ்வகை கல்லீரல் சீழ்க்கட்டிகள் தோன்றும்.

### கல்லீரல் சீழ்க்கட்டிஇருப்பதற்கான அறிகுறிகள்

இந்நோய் கண்டவர்களுக்கு நல்ல ஆரோக்கியம் இருக்காது. இலேசான காய்ச்சல் இருக்கும். குளிர் நடுக்கம், வயிற்றுப்பகுதியின் வலது மேற்பகுதியில் வலி இருக்கும். இந்த வலி வலது தோள்ப்பட்டை வரை பரவலாம்.
இந்நோய் கண்ட பலருக்கும் கல்லீரல் வீக்கமடைந்திருக்கும். தொடும்போது வலது மேற்பகுதியில் வலி அதிகமாகும். மஞ்சள் காமாளை லேசாக இருக்கும். வலது பக்க நுரையீரலின் அடிப்பகுதியும் பாதிக்கப்படும். இதுபோல தொந்தரவுகள் இல்லாமலும் சிலருக்கு நீண்ட நாட்களாக காய்ச்சல் இருந்து கொண்டே இருக்கும்.
பரிசோதனை முறை
பரிசோதனையின் மூலம் மனிதர்கள் கேட்கமுடியாத ஒலி அலைகளைப் பயன்படுத்தி கல்லீரலை ஸ்கேன் செய்வார்கள். இதன் மூலம் கல்லீரலில் ஏற்பட்டுள்ள சீழ்க்கட்டியை எளிதாகக் கண்டறியலாம்.
இந்தப் பரிசோதனையில் இவர்களுக்கு வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை மிகுதியாகக் காணப்படும். இரத்தத்தில் ஆல்கலைன் பொஸ்பேட்டேஸ் என்ற நொதியின் அளவும் அதிகரித்து இருக்கும். அல்புமீன் புரதத்தின் அளவு குறைந்துவிடும். எக்ஸறே பரிசோதனையில் வலது பக்க உதரவிதானம் மேல் நோக்கி எழும்பியிருக்கும். வலது பக்க நுரையீரல் பாதிக்கப்பட்டு அப்பகுதியில் நுரையீரலைச் சுற்றி நீர் சேர்ந்திருக்கலாம்.

### சிகிச்சை

சீழ்க்கட்டியிலிருந்து ஊசி மூலமாக சீழை வெளியேற்றிவிடவேண்டும் .எந்தக் கிருமியினால் சீழ் ஏற்பட்டது. அது எந்த மருந்திற்குக் கட்டுப்படும் என்பதற்கான சீழ்ப்பரிசோதனையின் முடிவுகள் வெளிவரும் வரை குறிப்பிட்ட சில நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை பயன்படுத்தலாம். சிலருக்கு இதற்கென உள்ள பிரத்தியேக குழாய்களை பயன்படுத்தியும் சீழை வெளியே ற்றுவார்கள். சிலருக்கு அறுவை சிகிச்சையின் மூலமாக சீழை வெளியேற்ற வேண்டிய நிலைமையும் ஏற்படும். இவ்வகை சிகிச்சையிலேயே பலருக்கு நோய் குணமாகும்.
இந்த சீழ்க்கட்டி நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை செய்யாவிட்டால் அது உடைந்து வயிற்றுப்பகுதிகளுக்குப் பரவி விடும் அபாயத்தை உண்டாக்கும். நோயாளியை உடனே சிகிச்சைக்கு உட்படுத்தி குணமாக்கும் வழிகளை மேற்கொள்ளவேண்டும்.

டாக்டர்- செல்லக்குமார்

### சர்க்கரை நோயாளிகள் சாப்பிடக்கூடிய உணவுவகைகள்

சர்க்கரை நோயாளிகள் பூசணிக்காய், பீன்ஸ்,பாகற்காய், சுரைக்காய், கத்தரிக்காய், முட்டைக்கோஸ், வெள்ளரிக்காய், கோலிபளவர், சவ்சவ், கொத்தமல்லித்தழை, கறிவேப்பிலை, முருங்கையிலை ,குடைமிளகாய் ஆகியவற்றை தாராளமாக உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
இஞ்சி, எல்லா வகையான கீரைகள், வெங்காயம், பப்பாளிக்காய், வாழைப்பூ, வாழைத்தண்டு, புடலங்காய், தக்காளி, வெள்ளை முள்ளங்கி போன்றவற்றையும் நன்றாக சாப்பிடலாம்.
உணவில் கொழுப்பை குறைப்பதன் மூலம் இரத்தக் குழாய்களில் ஏற்படும் கொலஸ்ட்ரோலை குறைத்து இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படுவதையும் தடுத்து நிறுத்தமுடியும்.
சமையலுக்கு உபயோகிக்கும் எண்ணெய் வகை மிகவும் முக்கியமானது. தாவர எண்ணெய் வகைகளையே உபயோகிக்கவும்.

## கவிதைச் சோலை

### இதோ ஒரு வார்த்தை

இளைஞனே
உணர்ச்சியின் புரியாறே

காதல் எனும்
'குமரிக்கண்டத்துள்'
நீ மூழ்கிப்போகும் முன்
ஒரு வார்த்தை
காதல் பற்றி

புதுப்புது வர்ணங்கள்
பூசுவதற்கு
புருசு தேடுவதே
கிவஞர்களின் தொழில்

பிராய்டிசத் தினவுகளின்
அந்த விளிம்பு
உடையும் வரை
இவர்கள்

வார்த்தைகளை
இரத்த சதைகளின்
பிருந்தாவனம்
ஆக்கிக் கொண்டே இருப்பார்கள்

சூரியனைப் பட்டாம்பூச்சி ஆக்குவார்கள்
அதனால்
மனித வாடையே இல்லாத
ஜூராசிக் உறுமல்களின்

யுகத்திலிருந்தும் கூட
உன் கலித்தொகையையும்
அகநானூற்றையும்
தூசி தட்டிக்கொண்டிருப்பார்கள்

பாறாங்கற்களுக்கிடையே
'பாசில்' களாய்ப் படுத்திருக்கும்
அந்தப் படிமங்களிலிருந்து கூட

கற்காலத்து
'லைலா மஜ்னு' க்களைத்
தோண்டியெடுத்து
சினிமாப்பாட்டு
தயார் செய்துவிடுவார்கள்

இன்டர்நெட் என்னும்
ஆகாய நரம்பு முடிச்சுப் பின்னல்களின்
சன்னல்கள் வழியே
அந்த மின்னலின்
'கலர்' கனவுகளை
'கச்சா பிலிமி'ல்
கர்ப்பம் தரிக்க வைப்பார்கள்

கணிப்பொறி கூட
காதலுக்கு
இளமையின் புயலே
உன் மத்தாப்பு பிரபஞ்சத்தில்
இந்தப் பொப்கோர்ண் பொரிகளா
சூரியன்கள்?

கிறங்கிய விழிகளில்
புதுக்கவிதைகள்
ஊற்றுத்தீயில்
உற்சாக விளையாட்டின்
சோப்புக்குமிழ்கள்

ஹோர்மோன்கள் ஓட்டுகின்ற
இந்தக் குதிரைப் பந்தயத்தில்
வேகம் மைல்களைத் தின்று விடுகிறது
பயணம் பாதையை விழுங்கி விடுகிறது

பிள்ளை குட்டிகளைப்
பெருக்கிக் கொள்ளும்
இந்தப் பொம்மை விளையாட்டில்
காதல் எனும் நெருப்பின் தேனாற்றை
உன் மீது ஊற்றிக்கொள்கிறாய்

முட்டையா? கோழியா? எது முதல்?
இது வெறும் பண்டாரங்களின் பாட்டு அல்ல
அந்த வினாக்களைத் தின்ற விடைகளும்
அந்த விடைகளை எச்சமிட்ட வினாக்களும்

இன்னும் பல்கலைக்கழகங்களின்
தாழ்வாரங்களில் இறைந்து
தான் கிடக்கின்றன.
ஆனால் உனக்கு
முட்டைக்குள்ளும் காதல்
கோழிக்குள்ளும் காதல்

நீ அவிழ்க்கவேண்டிய புதிர்கள் இன்னும்
புதர்களாய் மண்டிக்கிடக்கின்றன.
வெளிச்சம் சுவைக்கும் ஈசல் பூச்சிகளின்
இருட்டு இறக்கைகளில் ஈர்ப்பும் துடிப்பும்
ஐன்ஸ்டீன் சூத்திரதாரிகளாய் அவிந்து கிடக்கின்றன.

உன் மிலேனியக் கொண்டாட்டங்கள்
வெறும் பூவாணங்களின் தோட்டம் அல்ல
இந்த மில்லினியம் கரையாத கல் தூணும் அல்ல

நிகழ்ச்சிகளில் உருகியோடும்
மெழுகுவர்த்தி இது

தீக்குச்சியை
இப்போது தான் கிழித்திருக்கின்றாய்
காதல் எனும் குச்சியோடு
எரிந்து முடிவது மட்டும் வாழ்க்கை அல்ல

நூற்றாண்டுகள் முடியும்போது
அது உன் தோரணங்களைக் கேட்கவில்லை
பனிக்கட்டித் துண்டுகள் மிதக்கும்
ஸ்கொட்ச் விஸ்கி கேட்கவில்லை

விடிய விடிய உட்கார்ந்து கொண்டு
வானம் எனும் கன்னிக்குடம்
உடைத்துக் கொண்டு வரும்
அந்தக் கற்பனைக் குழந்தைக்குப்
போதை நர்த்தனங்களில்
உன்னைப் பிரசவம் பார்க்கச் சொல்லவில்லை

காதலைக் கொண்டாடுவதற்கு மட்டும்
இந்த மில்லினியம் உன் கையில் விழவில்லை
மூக்குத் துடைக்கும் கைக்குட்டை கூட
உனக்கு காதலியின் முகம் ஆகிப்போனதால்
அவள் சுவாசப் பிரளயத்தில் நீ மூழ்கிப்போகும்
முன்
இதோ ஒரு வார்த்தை

உன் பங்குக்கு என்ன தரப்போகிறாய்?
இருட்டையா?வெளிச்சத்தையா?
இந்த நுரைப்படுகையில் நீ அமிழ்ந்தது போதும்
பருக்கைக் கற்களில் பளிங்கு தாஜ்மகால்
என்று
நீ படுத்துக் கிடந்தது போதும்

இளமைச் சூறாவளியே
வெறும் தெருப்புழுதியை நீ
கிளப்பிக்கொண்டிருந்தது போதும்

சமுதயப் பிணிகளையெல்லாம்
சுட்டெரிக்கும் உன் எரிமலையின்
இமைகள் விரியட்டும்
விழிப்புக் கொள்! எழுச்சி கொள்!

- ருத்ரா

# மரண அறிவித்தல்



அமரர் உயர்திரு
கந்தசாமி தினேஷ் (தீபன்)

மலர்வு 07.01.1982 உதிர்வு 03.05.2002

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த சிற்பாசாரியார் ஆறுமுகம் கந்தசாமி அவர்களின் புதல்வன் தினேஷ்(தீபன்) அவர்கள் மெச்சிக்கோவில் 03.05.2002 அன்று காலமானார்.

அன்னார் சிற்பாசாரியார் ஆறுமுகம் கந்தசாமி - சிந்தாதேவி தம்பதிகளின் அன்பு மகனும்

காலஞ்சென்ற சிற்பாசாரியார் ஆறுமுகம் பொன்னம்மா. காலஞ்சென்ற சின்னராசா (வசாவிளான்) பாலாம்பிகை தம்பதிகளின் அன்புப் பேரனும்

கோகிலவாணி ரமேஷ் (கனடா) சதீஷ். ரதீஷ் ஆகியோரின் அன்புச் சகோதரரும்

ஸ்ரீகாந்தனின் அன்பு மைத்துனரும்


காலஞ்சென்ற கலாகேசரி தம்பித்துரை. காலஞ்சென்ற சிற்பாசாரியார் ஜீவரட்ணம். ராசதுரை (பிரான்ஸ்) துரைராசா. மகாலிங்கம் (ஜேர்மனி) சிவலிங்கம். திருமதி தவமணி ஆறுமுகம். திருமதிசற்குணதேவி ஆனந்தராசா. திருமதி சரோஜினி தேவி செல்வரட்ணம். திருமதி செல்வேந்திரதேவி சேதுராமன் ஆகியோரின் அன்புப் பெறாமகனும்

திருமதி நாகரத்தினம் வைரமுத்து (லண்டன்) திரு கதிர்காம நாதன் யோகேஸ்வரி. திருசர்வேந்திரராஜா (கனடா) சாந்தினி ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தொடர்புகளுக்கு - ரமேஷ். சர்வேந்திரராஜா (905) 764 - 8750
திருநெல்வேலி - யாழ்ப்பாணம் 9421 - 2892

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்




அமரர் உயர்திரு
நடராஜா இராஜமுருகதாஸ்
(முருகா - தாஸ் - ஏழாலை)

மலர்வு 22.05.1974 உதிர்வு 10.04.2002

அன்பென்றும் பாசமென்றும் பண்பாகப் பழகியவனே.
ஒப்பாரும் மிக்கவருமான நீ
எமையெல்லாம் எதற்காகச் சந்தித்தாய்? - எதற்காகப் பழகினாய்?
பாசமெனும் நூலால் எம்மை பண்போடு கட்டியவனே
உன்னோடு பாதித் தூரம் செல்ல
முன் நீ மீதித் தூரத்தையும் எட்டி விட்டாய்!
முருகா என்று அழைக்கவா? தாசா என்று அழைக்கவா?
என்ன சொல்லி நாம் அழைக்க? எமது துயர் தான் யார் துடைப்பார்?
கூவி அழைக்கின்றோம் எமது குரல் தான் கேட்கவில்லையா?
இலங்கையில் ஏழாலை மண்ணில் பிறந்தவனே
சுவிஸில் ஆறாத துயரில் நமை ஆழ்த்தி விட்டு
மீளாது துயில் கொண்டாயே - நீ
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை அனுதினமும் வேண்டுகின்றோம்.

சுவிஸில் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி எமது துயரில் பங்கு கொண்ட உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் வவுனியாவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற போது கலந்து கொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 10.05.2002 அன்று 239 உக்கிலான்குளம் வவுனியாவில் நடைபெறும்.

தகவல் - நடராசா (தந்தை) (முன்னாள் இ.போ.ச. காப்பாளர்)
011 94 24 - 22539 . 22937

கஜன் (சகோதரன்) (லண்டன்) 011 44 7944426157




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

-- சோதிடர் தர்மர்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் சந்திரன் புதன் | புதன் சுக்கிரன் | செவ்வாய் ராகு | வியாழன் |
| சந்திரன் | இவ்வார கிரகநிலை | | |
| சந்திரன் | | | |
| | கேது | | |

## மேடம்

சண்டை வழக்கு என்பன ஏற்படலாம்.பிரயாணத்தில் கெட்ட சம்பவங்கள் நேரும். கெட்ட பெண்கள் உறவை தவிர்க்கவும். காணி நிலம் வாங்கும் முயற்சிகள் பலிதமாகும். எடுத்த காரியம் உவிதாக முடிவடையும். சொத்து சேர்க்கைக்கும் சிலருக்கு இடமுண்டு. ஞாயிறு,திங்கள் நல்ல நாட்கள்.

## இடபம்

எதிர்ப்புக்கள் இருந்து வரும். துணிவுடன் செயற்பட வேண்டியது அவசியம். மனைவி மக்கள் ஒத்துழைப்புத் தருவர். குடும்பத்தில் திருமண முயற்சிகள் கைகூடும். எதிரிகளால் துன்பம் விளையலாம். கடன் விடயங்களைக் கவனமாக கையாளவும். கணவன்,மனைவி உறவு மகிழ்ச்சியாக அமையும். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

## மிதுனம்

தனம்,சுகம் ,வாகனம் சேரும். தூர இடத்திலிருந்து நல்ல செய்திகள் வரும். மேலதிகாரிகள் ஆதரவு தருவர். தொழிலில் நல்ல முன்னேற்றத்துக்கு இடமுண்டு. புதிய தொழில் வாய்ப்பு சிலருக்கு கிட்டும். மனைவி மக்களிடையே மகிழ்ச்சி நிலவும். உறவினர் நண்பர் உதவி இருந்து வரும். உஷ்ண சம்பந்தமான நோய்கள் வரலாம். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

## கடகம்

மனக்கவலையுண்டாகும். நோயின் தொல்லைகளும் உண்டாகும். மேலதிகாரிகளால் பகையுண்டாகும். முன்னேற்றத்துக்கான வழி வகைகள் பிறக்கும் .எதிர் பாராத செல்வ சேர்க்கைக்கும் இடமுண்டு. எதிரிகள் தோற்பர். உயர்ந்த ஆடை அணி சேரும். பந்தயம்,லாட்டரி போன்றவற்றில் சிலருக்கு வெற்றி கிட்டும். செய்தொழிலில் உயர்வு உண்டாகும். வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

## சிம்மம்

பொருள் நட்டம் ஏற்படலாம். திருடர் பயம் உண்டாகும். வீண் விவகாரங்களைத் தவிர்க்கவும். எதிர்பாராமல் பணம் கிடைக்கும். கெட்டவர் உறவு ஏற்படலாம். நினைத்த காரியம் செய்து முடிக்கலாம். தொழிலில் கவனம் செலுத்தினால் உயர்ந்த நிலைக்கு வரலாம். திருமண முயற்சிகள் பலிதமாகும். உறவினர் ஆதரவு கிட்டும். வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

## கன்னி

எச்சரிக்கை அவசியம். ஏமாற்றத்துக்கு உள்ளாக நேரிடலாம். ஆடையாபரணம் செல்வம் சேரும். செல்வாக்கு அதிகமாகும். பிரயாணங்கள் நன்மை தரும். பெண்களால் நன்மை கிட்டும்.மனைவி மக்கள் மகிழ்ச்சியூட்டுவர். பெற்றோர்க்கு கெடுபலன்கள் ஏற்படும். அமைதிக்குறைவு இருந்து வரும். ஞாயிறு,திங்கள் நல்ல நாட்கள்.

## துலாம்

நோய் தீரும். எடுத்த காரியம் சுலபமாக நிறைவேறும். தொழில் முன்னேற்றம் உண்டாகும். பிரயாணத்தால் நன்மையுண் டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உடல்நிலை பாதிப்படையலாம். தீய எண்ணம் ஏற்பட்டு அவமானம் அடையநேரிடலாம். கணவன் மனைவி உறவுவலுவாகும். வீண் கோபம் மூலம் தொல்லை ஏற்படும். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

## விருச்சிகம்

பெயர்,புகழ் அதிகமாகும். எதிலும் அதிக வெற்றி கிட்டும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பதவி உயர்வு போன்ற நன்மைகள் கிட்டும். வீடு,நிலம் வாங்கலாம். உறவினர் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதிருக்கவும். கணவன், மனைவி உறவு நன்றாகும். பெண்களால் அவமானம் அடைய நேரிடலாம். கண்ணில் நோயுண்டாகும் .வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

## தனுசு

பிரயாணம் மூலம் நன்மையுண்டாகும். துக்கம் உண்டாகும். மானக்குறைவு ஏற்பட நடந்து கொள்ளவேண்டாம். எடுத்த காரியம் வெற்றியாக முடியும். தனலாபம் கிட்டும். கௌரவம் பெருமை உயரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு தோன்றலாம். தொழிலில் சில தொல்லைகள் ஏற்படலாம்.பிறமாதர் சேர்க்கை துன்பம் தரும். ஞாயிறு,திங்கள் நல்ல நாட்கள்.

## மகரம்

எதிலும் லாபம் கிட்டும். எதிர்ப்புக்கள் மறையும். மனைவியால் இலாபம் கிட்டும். செய்காரியங்கள் வெற்றியாக அமையும். வழக்குகள் சாதகமாகத் தீர்ப்பாகும். நண்பர்களால் நற்பலன் கிட்டும். எதிர்காலம் நன்கு அமையக்கூடிய சாத்தியமான காரியங்கள் நடைபெறும். கணவன் மனைவி உறவு நன்றாகும். தனவிருத்தியுண்டாகும். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

## கும்பம்

சஞ்சலம் ,ஏமாற்றம் ஏற்படும் .செலவு அதிகமாகும். கடன் விவகாரங்கள் தொல்லை தரும். அரசாங்க விடயங்களில் அவதானமாக இருக்கவும். இடமாற்றம் ஏற்படலாம். ஆயுதங்களைக் கவனமாக கையாளவும். புதிய வழக்குகள் தோன்றும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். கணவன்,மனைவி உறவு நன்கு அமையும். வியாழன் நல்ல நாள்.

## மீனம்

செலவு அதிகமாகும். தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு இருந்து வரும். பெரியோர் உதவி கிட்டும். செல்வம் சேரும். தொழில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அதிகாரத்தன்மை உண்டாகும். நல்லவர்களைப் பகைத்துக் கொள்ளாதிருக்கவும். தொழில் ரீதியாக வளர்ச்சியுண்டு. பூமியால் இலாபம் கிட்டும். வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

உங்கள்
குழந்தைகளின்
ஜாதகக்
குறிப்புக்களை
சரியாகக்
கணிக்க
தொடர்பு
கொள்ளுங்கள்
சோதிடர்
தர்மர்

A.Thrumalingam
11 Av de la
Commune de
paris,
95140 Garges
les Gonesse,
France.
Tel:
01 39869208

TORONTO
TRUCK &
FORKLIFT
SCHOOL

இப்பொழுது உங்களது டிரக் லைசன்சுக்குரிய பயிற்சியையும் வகுப்புக்களையும் தமிழ்மொழி மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆங்கிலமொழி அறிவு அவசியமில்லை. தமிழ்மொழி மூலமான பயிற்சியும் அறிவுறுத்தலும் உங்களுக்கு இப்போது நேரடியாகவே கிடைக்கின்றது. ஒன்ராறியோவிலேயே மிகப் பெரியதும் திறமைமிக்கதுமான எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காகப் பல பயிற்சி நிலையங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.




| | |
|---|---|
| REXDALE | (416) 675-7500 |
| SCARBOROUGH | (416) 213-2222 |
| BRAMPTON | (905) 457-7565 |
| HAMILTON | (905) 662-9300 |
| MISSISSAUGA | (905) 270-1999 |
| TORONTO | (416) 675-4444 |

ஈழநாடு
EEZHANADU
P.O.BOX 878 STATION 'Q'
TORONTO - ONTARIO
CANADA -M4T 2N7
TEL: (416) 654 - 9825
(416) 654 - 1867
FAX: (416) 652 - 7493



N.K.S. DRAPERY & BLINDS

CUSTOM MADE
- VERTICAL BLINDS
- VENETIAN BLINDS
- DRAPERIES
- CURTAINS
- SHUTTERS

For FREE Estimates & Installation Call:
KETHA
(CCTCC's Award Winner – 2001)

210 SILVER STAR BLVD # 825
SCARBOROUGH - ONT
M1V 5J9
(905) 944-0218
(416) 321-6420



# கிழக்கு கடல் மோதலுக்கான சூழ்நிலை உருவானதற்கு சர்வதேசக் கண்காணிப்புக் குழுவே பொறுப்பு

கிழக்குக் கடலில் கடந்த வியாழக்கிழமை விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான படகுகளுக்கும் கடற்படையினருக்குமிடையே மோதல் மூழ்வதற்கான சூழ்நிலைகள் உருவானதற்கான பொறுப்பை சர்வதேச கண்காணிப்புக்குழு ஏற்றுக் கொண்டு வருத்தம் தெரிவித்துள்ளது. (இச்சம்பவம் பற்றிய முழுமையான செய்தி கடந்த வாரம் உங்கள் அபிமான ஈழநாட்டில் வெளியாகியது குறிப்பிடத்தக்கது)

ஆனால் விடுதலைப்புலிகள் அன்றைய தினம் கடலில் படகில் சென்றமை போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் நடவடிக்கையல்ல என்றும் கண்காணிப்புக்குழு விடுதலைப்புலிகளுக்கு அறிவித்துள்ளது.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகத்திற்கு கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் டரொன்ட் பியூருவொல்டே அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தில் இச்சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்திருப்பதுடன் கிழக்குக் கடலில் கடற்புலிகளின் உத்தேச நடமாட்டம் குறித்து இலங்கைக் கடற்படையதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரிவிக்க கண்காணிப்புக்குழு தவறியமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இந்த விடயத்தை வாய்மூலமாக கடற்படை அதிகாரிகளுக்குக் கூறியதினால் தொடர்புகளில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஜெனரல் பியூருஹொல்டே தெரிவித்திருக்கிறார். விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்துடன் முக்கியமான சந்திப்புக்களை நடத்தியதையடுத்து கிழக்கு மாகாணத்திற்கு திரும்பிச் செல்லும் சிரேஷ்ட விடுதலைப்புலி தளபதிகள் போராளிகளின் நடவடிக்கைகள் குறித்துத் தேவையான சகல விபரங்களையும் தாங்கள் வழங்கியிருந்ததாக வன்னியில் விடுதலைப்புலிகளின வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு கடல் சம்பவம் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் பாரதூரமான செயல் என்று குற்றஞ்சாட்டி ஜனாதிபதி சந்திரிகா பிரச்சாரம் செய்யும் காரணத்தினால் இந்தச் சம்பவம் குறித்த உண்மை நிலவரங்களை விளக்கி உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை தொடர்பூடகங்களுக்கு வழங்குமாறு நோர்வே அனுசரணையாளர்களை விடுதலைப்புலிகள் கேட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## போர் நிறுத்த மீறல்கள் 200 முறைப்பாடுகள் பதிவு

### அதிகளவு கண்காணிப்பாளர்களை அனுப்புமாறு நோர்வேக்கு கடிதம்

இலங்கையின் வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்காக மேலும் கண்காணிப்பாளர்களை அனுப்பி வைக்குமாறு சர்வதேச கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேர் ஜெனரல் றொன்ட் பியூரு ஹொவ்டே நோர்வே அரசிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நோர்வேயின் அனுசரணையுடன் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைய வடக்கு கிழக்கில் போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு ஸ்கண்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த 16இற்கும் மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் இவ்வருட முற்பகுதியில் இங்கு வருகை தந்தனர். இந்த நிலையில் போர்நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்த இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் கண்காணிப்புக்குழுவிற்கு யுத்த நிறுத்த மீறல்கள் குறித்ர் 200இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்கு மேலும் பலரை அமர்த்த வேண்டியிருப்பதால் இப்பணிகளில் ஈடுபடுத்துவதற்காக மேலும் கண்காணிப்பாளர்களை அனுப்பி வைக்குமாறு மேஜர் ஜெனரல் பியூருஹோவ்டே நோர்வே அரசிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கமைய இம்மாத நடுப்பகுதியில் மேலும் பலர் வருவார்கள் எனதான் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த சிலதினங்களாக கிழக்கில் கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சிறிது முறுகல் நிலை உருவாகி வருவதாகச் செய்திகள் வெளியாகும் நிலையில் போர்நிறுத்தத்தைக் கண்காணிக்க மேலும் பலர் இங்கு வருகை தரவுள்ளனர்.

இதேநேரம் மேற்படி உடன்பாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட பல்வேறு விடயங்களையும் அரச படையினர் இதுவரை பூர்த்தியாதது குறித்து பொதுமக்களும் அமைப்புக்களும் முறைப்பாடுகள் தெரிவித்து வருகின்றனர்.

## இனப்பிரச்சனையில் முஸ்லிம்களுக்கு உதவ அயர்லாந்து அதிகாரிகள் வருகிறார்கள்

வடக்கு கிழக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவதற்கு ஐ.நா. அமைப்பின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் மற்றும் ஐ.நா. அமைப்பின் வேலைத்திட்டம் ஆகியவற்றின் உதவிகள் பெறப்படும் என்று துறைமுக அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

மேற்படி நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தாம் எடுப்பதாக இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் திருமதி லின்டா பீல்ட் உறுதியளித்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரிட்டன் தூதுவர் அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சவார்த்தைகளை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தைகளின் போதே இவ்வாறு அவர் உறுதியை வழங்கியுள்ளார்.

இந்தச் சந்திப்பு குறித்து அமைச்சர் மேலும் விபரிக்கையில்

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களில் வட அயர்லாந்து பிரச்சனைக்குத் தீர்வு காண அனுகப்பட்ட முறைகள் மற்றம் வட அயர்லாந்து விவகாரங்களில் சிறந்த அனுபவம்மிக்க வராகக் கருதப்படும் ஜோன்ஹி என்பவரை இலங்கைக்கு வரவழைத்து கருத்துக்களைப் பரி மாறிக் கொள்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது என்றும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

## தாயகக் கோட்பாட்டை ஏற்காத அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு என்கிறார் பிரதமர் ரணில்

தாயகக் கோட்பாட்டை ஏற்காததும் நாட்டைப் பிரிக்காததுமான முறையில் நாம் அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்றை பேச்சவார்த்தை மேடையில் கண்டுபிடிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

தற்போது யுத்தநிறுத்த உடன்பாடு மட்டும் தான் நடைமுறையில் உள்ளது. பேச்சவார்த்தை மேசையில் தான் அரசியல் தீர்வைக் காண முடியும். சர்வதேசத்தின் உதவியுடனும், மகாசங்கத்தினரின் ஆலோசனையுடனும் தான் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இது சம்பந்தமான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுகின்றனஎன்றும் அவர் சொன்னார்.

## எனக்குத் தெரியாமல் சமாதானமா? ஜனாதிபதி சந்திரிகா கொக்கரிப்பு!

அப்புத்தளையில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொண்ட போலி உடன்படிக்கையை வைத்துக் கொண்டு பிரதமர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறி வருகிறார். எனக்குத் தெரியாமல் பிரதமர் சமாதானத்தை எப்படி ஏற்படுத்தப் போகிறார் என்பதை ஒரு கை பார்த்து விடத்தான் போகிறேன். இந்நாட்டில் பிரிவினை என்பதை எக்காலத்திலும் நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நீங்கள் வாகன விபத்தில்
உங்கள் தவறால் அல்லது
மற்றவர் தவறால்
பாதிக்கப்பட்டீர்களா?

SIDNEY FINANCIAL
AND ACCIDENT BENEFIT SERVICES

SIDNEY K. SITHIRAVADIVEL B.A. (Hons)
(416) 745-2794 (416) 745-0010
FAX: (416) 745-9228
2885 JANE STREET, UNIT # 2, NORTH YORK

அப்படியாயின் அவ் விபத்தால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய இழப்பீடுகளான

- நிகழ்கால / எதிர்காலச் சம்பள இழப்பீடுகள்
- உங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வீட்டைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வணிக இழப்பீடுகள்
- கல்வி இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சிறப்பு மருத்துவ வசதிகள்

மற்றும் விபத்துப் பற்றிய சட்ட
உரிமைகளையும் ஆலோசனைகளையும்
தமிழில் பெற்றுக் கொள்வதற்கு
நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்

இவற்றுடன் உங்கள்

- INCOME TAX
- BUSINESS ACCOUNTING
- BUSINESS G.S.T, P.S.T.
- PAYROLL
- PERSONAL LOAN & BUSINESS LOAN
- BANKRUPTCY
- PARALEGAL SERVICES (Immigration)

- வருமான வரி
- வியாபாரக் கணக்குகள்
- சம்பளக் கணிப்பீடு
- தனியார், வர்த்தகக் கடன்கள்
- வங்குரோத்து நிலையடைதல்
- குடிவரவு, குடியகல்வு ஆலோசனைகள்